ஜுலை.03 - ஜுலை.09, 2013

பக்கம் - 24

30/-

சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

காத்திருக்கிறார்களா கரும்புலிகள்?

யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞானபீட வரவேற்பு விருந்தில் புகுந்து கொண்ட களியாட்ட நடனத்தின் பின்னணியில்

நடந்தது என்ன?

புகைப்பட ஆதாரங்களுடன் விரிவான விவரம்.

களியாட்ட விடுதியா? பல்கலைக்கழகமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினிகுமாரன்

இலங்கைக் கொடியுடன் சீனக் கப்பல்கள்!

இலங்கையின் நல்லெண்ணத்தைப் பெறத் தமிழக மக்களின் உணர்வுகளை மட்டும் அலட்சியப்படுத்த முடிகிறது. தமிழக மீனவர்களின் நலன்களை மட்டும் உதாசீனம் செய்ய முடிகிறது.

இலங்கையுடன் நல்லுறவைப் பேண இலங்கைத்தமிழ் மக்களையும், தமிழக மக்களின் உணர்வுகளையும் பலி கொடுக்க இலங்கை மேலும் மேலும் சீனாவுக்குள் அமிழ்ந்து போகிறது. இந்தியக் கடலில் சீன ஆதிக்கம் இலங்கைக் கொடியுடன் கொடி கட்டிப்பறக்கப் போகிறது.

“இலங்கை இராணுவத்திற்கு இந்தியா பயிற்சிகளை வழங்க மறுத்தால் அவர்கள் சீனாவிடம் பயிற்சி பெற ஆரம்பித்து விடுவார்கள். பிறகு இலங்கை இந்தியாவுக்கு ஒரு பாகிஸ்தான் போலாகிவிடும்”

இது இந்திய மத்திய அமைச்சர் சுதர்சன நாச்சியப்பனின் பெருங்கவலை. இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாக ஓய்வுபெற்ற சில சூத்திரதாரிகள் அரசியல்வாதிகளைக் கூட்டி விசித்திரமான தீர்மானங்களை எடுக்கும் பெருமையும் இவருக்குண்டு.

இலங்கைப் படையினருக்குப் பயிற்சி வழங்கப்படுவதை தமிழகம் அரசு கடுமையாக எதிர்த்து வருகிறது. தமிழ் உணர்வாளர்களும் எதிர்ப்புப் போராட்டங்களையும், முற்றுகை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு படையினருக்குத் தமிழ் நாட்டில் பயிற்சி வழங்கப்பட்டு தமிழக மக்களின் பலத்த எதிர்ப்பின் காரணமாக அவர்கள் வடக்கே மாற்றப்பட்டனர்.

அப்படியிருந்த போதிலும் தமிழ் மக்களின் எதிர்ப்பை பொருட்படுத்தாமலே மீண்டும் இலங்கைப் படையினருக்கும் தமிழகத்தில் பயிற்சி. தமிழக மக்களின் உணர்வுகளைப் பொருட்படுத்தாத நிலையில் தமிழகம் கொந்தளிப்பதில் என்ன தவறு இருக்க முடியும்? திட்டமிட்ட அவமானப்படுத்தல் எனக் கருதாமல் இருக்க முடியுமா?

இப்போ சீனப்பூச்சாண்டி காட்டுகிறார். நாச்சியப்பன் இலங்கை, இந்திய சர்வதேச கடற்பரப்பில் சீனக் கப்பல்கள் இலங்கைக் கொடியுடன் மீன்பிடிக்க இலங்கை அனுமதி வழங்கியுள்ளது. இலங்கையை அரவணைத்து விட்டுக் கொடுத்து நடக்கும் இந்தியாவால் இலங்கைப் படையினருக்கு இந்தியாவின் பயிற்சி வழங்குவதன் மூலம் இலங்கை இந்தியக் கடலில் இலங்கைக் கொடியுடன் சீனா மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவதைத் தடுக்க முடிந்ததா?

இந்த மீன்பிடி இலங்கைக்கு மட்டுமல்ல இந்தியாவுக்கும் பேராபத்து என்பது சொல்லித்தான் தெரியவேண்டுமென்பதில்லை.

ஏற்கனவே இலங்கை, இந்தியக் கடலில் மீன் வளம் குறைவடைந்து வருகின்றது. இந்நிலையில் சீனா பெரும் மீன்பிடிக்கப்பல்கள் மூலம் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டால் எங்கள் கடல் வளமே அழிந்து விடும் அபாயம் உண்டு.

அது மட்டுமல்ல

இலங்கை இந்திய மீனவர்களுக்கு மீன் கிடைக்க முடியாத ஆபத்தும் ஏற்படும்.

இச்சட்ட நடவடிக்கைக்கு தென்னிந்திய மீனவர் அமைப்புக்கள் பலத்த எதிர்ப்பையும் தெரிவித்து வருகிறன. எனினும் அது இந்திய அரசாங்கத்திற்கு செவிடன் காதில் ஊதிய சங்கு தான்!

மன்மோகன்சிங் மௌனமோகன் சிங்காகி விட்டார்.

இங்கு பிடிக்கப்படும் மீன்களில் 90 வீதம் சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும். பத்து வீதம் இலங்கைக்குப் பிச்சை. ஒரு கிலோ மீன் ஒரு பெ(ட்)டலுக்கு, எங்கள்

கடல்மீன் ஒரு புறம் கொள்ளை! மறுபுறம் எங்களுக்கே பிச்சை இரு நாட்டு மீனவர்களும் தொழில்களை இழக்கும் அபாயம்!

இந்திய அரசால் தடுக்க முடியவில்லை இலங்கையுடன் பேணுமுயலும் விட்டுக் கொடுத்துக் கட்டியணைக்கும் இந்திய ராஜதந்திரத்தின் மூலம் எங்கள் கடலில் சீன ஆதிக்கத்தை தடுக்க முடியவில்லை.

இலங்கையின் நல்லெண்ணத்தைப் பெறத் தமிழக மக்களின் உணர்வுகளை மட்டும் அலட்சியப்படுத்த முடிகிறது. தமிழக மீனவர்களின் நலன்களை மட்டும் உதாசீனம் செய்ய முடிகிறது.

இலங்கையுடன் நல்லுறவைப் பேண இலங்கைத்தமிழ் மக்களையும், தமிழக மக்களின் உணர்வுகளையும் பலி கொடுக்க இலங்கை மேலும் மேலும் சீனாவுக்குள் அமிழ்ந்து போகிறது. இந்தியக் கடலில் சீன ஆதிக்கம் இலங்கைக் கொடியுடன் கொடி கட்டிப்பறக்கப் போகிறது.

இப்படியான நிலையில் தமிழ்தேசியக்கூட்டமைப்பு 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக இந்தியத் தலைவர்களைச் சந்தித்துள்ளது. இந்தியப் பிரதமர் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தச்சட்டம் திருத்தப்படுவது தொடர்பாகத் தன் கவலையைத் தெரிவித்து விட்டார். அவர் தெரிவித்தது கவலை மட்டும்தான். கண்டனமல்ல! இலங்கை இந்திய ஒப்பந்தப்படி நிறைவேற்றப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை மாற்றுவது தொடர்பாகக் கண்டிக்கும் உரிமை அவருக்கு உண்டு. ஆனாலும், இலங்கையின் மனம்நோகாமல் கவலையை மட்டுமே தெரிவித்துள்ளார்.

அதன் பின்பு 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக இலங்கையுடன் பேச பாதுகாப்புச் செயலர் சிவசங்கர் மேனன் இலங்கை வருகிறார்.

இ(ச்) சக்தி வாய்ந்த அதிகாரிகள் பலர் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாகப் பேச இங்கு வருகை தந்தனர். மஹிந்தவின் வாக்குறுதியையும் விருந்தையும் உண்டு கொண்டு விட்டுப் போய் விடுவார்கள்.

இலங்கைத் தமிழரின் உரிமைகள் தொடர்ந்து பறிக்கப்படும். தமிழர்களிடமிருந்து அபகரிக்கப்படும் பாரம்பரிய உரிமை கொண்ட காணிகளில் இந்தியா தொழில் நிறுவனங்களையும், கட்டுமானங்களையும் அமைக்கும்.

தமிழர்கள் இலவு காத்த கிளி தான்.

இங்கே மீண்டும் சிவசங்கர் மேனனின் வருகை! எனினும் அவரின் வருகையின் முன்பாகவே 19 ஆவது குறித்துச் சட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிவிட்டது. இது மட்டுமன்றி சில நாட்களின் முன்பு ஜனாதிபதியைச் சந்தித்த ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான பாரதிய ஜனதாக்கட்சி குழுவினருக்கு அவர் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு வெளியிலிருந்து தீர்வு கொண்டுவர முடியாது எனக் கூறிவிட்டார்.

எனினும், சிவசங்கர் மேனன் வருகிறார். மாகாண சபைகளுக்குக் காணி அதிகாரம் வழங்கப்பட மாட்டாது

என தான் இந்தியாவிற்குத் தெரிவித்து விட்டதாகப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்த பிறகும் மேனன் வருகிறார்.

மேனன் வழமைபோல் வருவார். இம்முறை ஜனாதிபதியுடன் மட்டுமன்றிப் பாதுகாப்பு செயலரிடமும் பேசுவார்! அமைச்சர் பக்கிலஸ் ஒடியேயைச் சந்திப்பார்.

மேனன் ஜனாதிபதியுடன் பேசுவார். 13 ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்படாது என ஜனாதிபதி கூறுவார். 13 பிளஸ் என்றால் பதின்மூன்றி[illegible] என அழுத்தப்படுத்துவார். அத[illegible] தொடர்பாக நாடாளுமன்[illegible] வுக்குழு முடிவெடுக்கும் என[illegible].

19 ஆவது திருத்தச் சட்டம் பற்றி எதுவும் பேசமாட்டார்கள். நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஏற்படுமென ஜனாதிபதி வாக்களித்துள்ளதாக ஊடகவியலாளர்களுக்கு மேனன் தெரிவிப்பார். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் சகல மேசை நிவாரணி எனவும் தமிழ்தேசியக் கூட்டமைப்பு அதில் பங்கு கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் பக்கிலஸ் தேவானந்தா அறிக்கை விடுவார்.

இலங்கையில் நல்லெண்ணத்தை மனம்கொடுத்தாமலே சிவசங்கர் மேனன் விமானமேறி விடுவார். இந்தியாவில் வைத்து நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்கும்படி தமிழ்தேசியக் கூட்டமைப்புக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கலாம். தமிழ் தேசியக் கூட்டமைப்பு மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தத்தளிக்கலாம்.

19 ஆவது அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்படும். மாகாணசபைத் தேர்தல் இடம்பெறும். வடக்கில் தமிழ்தேசியக் கூட்டமைப்பு அதிகாரத்தைக் கைப்பற்றும்.

தொடர்ந்து வடக்கு கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள் நடக்கும் தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகள் அபகரிக்கப்படும். எங்கும் புத்தர் சிலைகள் முளைக்கும்.

இவற்றுக்கு எதிராக வடமாகாண சபை ஏதாவது நடவடிக்கை எடுத்தால் ஆளுநரின் ரத்து அதிகாரம் வேலை செய்யும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு பேசிக் கொண்டேயிருக்கும் குழப்பிக் குழம்பிப் பேசிக் கொண்டேயிருக்கும்.

இது கடந்த கால அனுபவங்கள் இனி எப்படி இருக்கும் என்பதை வெளிப்படுத்தும் சைகைகள்.

எனினும் இந்தியக் கடலில் சீனக் கப்பல்கள் இலங்கைக் கொடியுடன் வலம் வரும். அம்பாந்தோட்டை துறைமுகம் இந்துசமுத்திரத்தில் சீனாவின் மேலாதிக்கத்தின் மையமாக விளங்கும் தாமரைக் கோபுரம் உள்ள வேலைகளை மேற்கொள்ளும்.

எனினும்,

இந்தியா - இலங்கையுடன் நல்லுறவைப் பேண இலங்கை பாகிஸ்தானாக மாறிவிடாமல் இருக்கத் தொடர்ந்து இலங்கை அரசுக்குச் சாமரம் வீசிக் கொண்டேயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தியின் கட்டிப்பிடிச்சோதனை!

ஆதங்கன்

கிளம்புகிறது சர்ச்சை!



“பெண்கள் மீதான பிரமச்சரியம் தொடர்பான சோதனைகளில் காந்தி ஈடுபட்டது சரியா? ஏன் அவர் ஆண்கள் மீது இத்தகைய பிரமச்சரிய விரதச் சோதனைகளை மேற்கொள்ளவில்லை? சோதனை என்றாலும் கூட இளம்பெண்களை அணைத்தபடி உறங்கியது எந்த வகையில் நியாயம்? சுவாமி நித்தியானந்தாவும் இதைத் தானே செய்தார். அப்படியானால் நித்தியானந்தாவும் மகாத்மா தானே?

இந்தியாவின் தேசபிதா, அகிம்சையின் அடையாளம் எளிமையின் அவதாரம் என்றெல்லாம் இன்றளவும் கொண்டாடப்படும் மகாத்மா காந்தியின் பிம்பத்தைச் சுக்கல் சுக்கலாக கிழித்துப் போட்டிருக்கிறது மெனுபென் என்பவரின் நாட்குறிப்பேடு.

காந்தியின் ஆச்சிரமத்தில் சேர்ந்த மெனுபென் காலப்போக்கில் அவரின் பிரத்தியேக செயலாளராக உயர்ந்தார். அவர் காந்தியோடு பணியாற்றிய நாள்களை தனது தினக்குறிப்பில் பதிவு செய்தும் வைத்திருந்தார். ஏராளமான தசாப்தங்களுக்குப் பின்னர் அவரின் நாட்குறிப்பேட்டு விபரங்கள் அம்பலத்துக்கு வந்து பல அதிர்ச்சியூட்டும் தகவல்களை வெளிப்படுத்தியுள்ளன. அவற்றுள் முக்கியமானது காந்தியின் கட்டிப்பிடிச் சோதனை.

தனது ஆச்சிரமத்தில் உள்ள இளம்பெண்களின் பிரமச்சரிய விரதத்தைச் சோதனை செய்ய அவர் கையாண்ட வழிமுறையே கட்டிப்பிடி சோதனை. தேர்ந்தெடுக்கப்படும் இரு இளம்பெண்களோடு உறங்கச் செல்வார் காந்தி. வலப்பக்கம் ஒரு பெண்ணையும் இடப்பக்கம் மற்றப் பெண்ணையும் படுக்கச் செய்யும் காந்தி, அவர்களை இறுக அணைத்துக் கொள்வார். பாலியல் சார்ந்த பிம்பங்களில் ஈடுபடுவார். ஆனால் அந்தப் பெண்கள் எந்தவித சலனமும் இன்றி தூங்கினால் அவர்கள் பிரமச்சரிய விரதத்தில் வெற்றி பெற்றுவிட்டதாக அர்த்தம். அவ்வாறில்லாமல் அவர்கள் காந்தியின் பாலியல் தூண்டுதல்களால் அல்லது தொடுகைகளால் சலனப்படுவார்களாயின் அவர்களுக்கான பிரமச்சரியம் தொடர்பான பயிற்சிகள் இன்னும் தொடரும் என்று சாரப்பட மெனுபென்னின் நாட்குறிப்பேட்டுப் பக்கங்கள் விரிந்து செல்கின்றன.

ஆயினும் காந்தியின் இந்தச் சோதனை முறை பல்வேறு சர்ச்சைகளை இந்தியாவில் கிளப்பியிருக்கிறது. இந்தியா டுடே இதழில் வெளிவந்த மெனுபென்னின் நாட்குறிப்பேடு தொடர்பான விவாதங்கள் பல்வேறு திசைகளிலும் வெடிக்கத் தொடங்கியிருக்கின்றன.

பெண்கள் மீதான பிரமச்சரியம் தொடர்பான சோதனைகளில் காந்தி ஈடுபட்டது சரியா? ஏன் அவர் ஆண்கள் மீது இத்தகைய பிரமச்சரிய விரதச் சோதனைகளை மேற்கொள்ளவில்லை? சோதனை என்றாலும் கூட இளம்பெண்களை அணைத்தபடி உறங்கியது எந்த வகையில் நியாயம்? சுவாமி நித்தியானந்தாவும் இதைத் தானே செய்தார். அப்படியானால் நித்தியானந்தாவும் மகாத்மா தானே? என்கிற கோணங்களில் விவாதக் கதவுகள் திறக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

காந்தியின் இந்தக் கட்டிப்பிடி சோதனை பற்றி நேதாஜி, நேரு, அமரத்லால் தாக்கர் போன்றோர் பலமுறை தம்முடைய எதிர்ப்புகளை பதிவு செய்த போதும் காந்தி அதைப்பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. அவர் தன்னுடைய கட்டிப்பிடி சோதனையிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்துள்ளார்.

.....

இந்தப் பரிசோதனைகளின் போது எனது மனம் தூய்மையாக இருக்காவிட்டால் அல்லது ஏமாற்றும் வகையில் நான் நடந்து கொண்டால் எனக்கு அவலமான சாவே கிட்டும் என்று காந்தி தொழிலதிபர் பிர்லாவுக்கு சொல்லியிருந்தார். அதனை மெனுபென்னும் பதிவு செய்திருந்தார். கடைசியில் காந்தி கோட்சே என்பவரால் சுடப்பட்டு அவலமான சாவையே சந்திக்க நேர்ந்தது. காந்தி சொன்னது சத்தியமான வார்த்தைகள் என்பது உண்மையானால் அவரது சோதனைகள் தூய்மையானதாகவோ, நேர்மையானதாவோ இருக்கவில்லை என்று தானே அர்த்தம். இதையெல்லாம் இந்தியா டுடே இதழில் விரிவாக அலசப்பட்டிருக்கிறது.

இந்தப் பத்தி காந்தி மீது வேண்டுமென்றே அவதூறு சேற்றை அள்ளி வீச முனையவில்லை. மாறாக நாங்கள் மகாத்மா என்று கொண்டாடும் ஒருவர் பற்றிய நம்பிக்கைகள் தொடர்பான கோணங்களை வேறு தளத்திலும் வைத்து நோக்க வேண்டும். இனி வாசகர்களே இந்தியா டுடேயில் வெளிவந்த மெனுபென்னின் நாட்குறிப்பேட்டு பக்கங்களை படித்து ஒரு முடிவுக்கு வாருங்கள். (இந்தியா டுடேயில் ஆங்கிலத்தில் வெளிவந்த மெனுபென்னின் நாட்குறிப்பின் முக்கியமான பதிவுகள் சில தமிழில் சுடர் ஒளி வாசகர்களுக்காக மொழி பெயர்த்து கீழே தரப்பட்டுள்ளது.)

மெனுபென்னின் நாட்குறிப்பு

ஜனவரி 1,1947, செத்தூரி பீஹார்

சுசிலாபென், தன் சகோதரனான பியாரி லாலை மணக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிறாள். தனது சகோதரனை மணக்க நான் சம்மதித்தால், நான் ஒரு தாதியாக ஆவதற்கு, தான் உதவுவதாக தெரிவித்தாள். நான் இதை மறுத்துவிட்டு இந்த விடயத்தை பாபுவுக்கு தெரிவித்தேன். சுசிலாவுக்கு மூளை பிசகிவிட்டதாக பாபு கூறினார். நிக அண்மைக் காலம் வரை, அவள் தனக்கு முன்பாக நிர்வாணமாக குளித்ததோடு தன்னோடு தூங்கியதாகவும் ** குறிப்பிட்டார். ஆனால் இப்போது என்னில் தங்கியிருக்க வேண்டியிருக்கும் என்று மேலும் குறிப்பிட்டார். நான் தூய்மையாக இருக்க வேண்டும் என்றும் (பிரமச்சரிய பரிசோதனைகளைப் பொறுத்தவரை) நான் பொறுமையாக இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

(** இதனை உடலுறவு கொண்டதாகவும் என்றும் மொழி பெயர்க்கலாம் - மொழி பெயர்ப்பாளர் குறிப்பு.)

பெப்ரவரி 25, 1947, ஹைம்கார் பீகார்.

பிரமச்சரியம் என்பது சமயக் கட்டளைகள் ஐந்தில் ஒன்று என்றும் அந்தப் பரீட்சையில் சித்தி பெறத் தான் முயற்சிப்பதாகவும் பாபா (அமரிற்லால் தாக்கர்தான் தாக்கர் பாபா என்ற பெயரில் பிரபலமாகியிருந்தார்)விடம் பாபு கூறினார். ஆத்மசுத்திக்கான தனது யாகம் இது தான் என்றும் பொதுமக்களின் கருத்து அதற்கு எதிரானதாக இருந்தாலும் அதனை இடைநிறுத்த முடியாது என்றும் அப்போது அவர் தெரிவித்தார். அப்பொழுது பிரம்மச்சரியம் பற்றிய அவரது கருத்து பொதுக்குடிமகன் ஒருவனுடைய கருத்திலிருந்து பெரிதும் வேறுபடுவதாகவும் இதனை முஸ்லீம் லீக் அறிந்து கொண்டு குத்தல் பேச்சுக்களை வெளியிட அதனைப் பயன்படுத்தினால் என்ன நடக்கும் என்றும் பாபா தெரிவித்தார். இப்படி ஒரு பயத்துக்காக தான், தனது சமயம் என நினைக்கும் ஒன்றை விட்டுவிடத் தான் தயாராக இல்லை என்றும் இந்தப் பரிசோதனைகளின் போது தனது மனம் தூய்மையாக இருக்காவிட்டால் அல்லது ஏமாற்றுப் பாங்காக நடந்து கொண்டாலோ தனக்கு அவலமான சாவு கிட்டும் என்று, தான் பிர்லா (தொழிலதிபர் ஜி.டி. பிர்லா) வுக்கு சொல்லியிருப்பதாகவும் பாபு பதிலளித்தார். அத்தோடு வல்லபாய் (படேல்) அல்லது கிஷோர் பாய் (மாஷ்றுவாலா) தன்னை விட்டுப் போனாலும் தான் பரிசோதனைகளை தொடர்வேன் என்றும் பாபாவுக்கு தெரிவித்தார்.

(தொடர்ச்சி 17 ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமன்

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் ஜூலை 5ஆம் திகதி என்றால் இலங்கைத் தீவெங்கும் பெரும் அதிர்வு ஒன்றை எல்லோரும் எதிர் பார்த்திருப்பார்கள். அன்றைக்குத்தான் முதலாவது கரும்புலியான கப்டன் மில்லர் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் மீது வெடிகுண்டு வாகனத்துடன் சென்று வெடித்துச் சிதறிய நாள். அதனையே கரும்புலிகள் நாளாக புலிகள் பிரகடனப்படுத்தியிருந்தார்கள்.

எப்போதுமே தமது இயக்கம் சார்ந்த முக்கிய தினங்களில் அரசப் படைகளுக்கு வாழ்க்கையில் மறக்க முடியாத அடியொன்றை வழங்குவது புலிகளின் நெடுநாளைய வழக்கமாக இருந்தது. அநேகமான அவர்களின் இராணுவ வெற்றிகள் எல்லாம் ஏதோ ஒரு நினைவு தினத்தில் பெறப்பட்டவையாகவே இருந்தன. திலீபனின் நினைவு தினத்தில்தான் யாழ். கோட்டை கைப்பற்றப்பட்டு புலிக்கொடி பறக்கவிடப்பட்டது. மாவீரர் நாள் ஒன்றில் மாங்குளம் முகாம் புலிகள் வசம் வீழ்ந்தது. இதே போன்று ஏராளமான சமர்களை பட்டியலிட்டுக் கொண்டு செல்லலாம். அதிலும் கரும்புலிகள் நாளில் புலிகள் தற்கொலைத் தாக்குதல்களை நடத்தி பேரழிவை ஏற்படுத்தக் கூடும் என்ற எதிர் பார்ப்பு ஜூலை மாதம் பிறந்தவுடனேயே அரசத் தரப்பிடம் இருந்தது. அதனால் மாதத் தொடக்கத்திலிருந்தே பாதுகாப்புகள் நாடெங்கும் பலப்படுத்தப்படும். சோதனைச் சாவடிகள் முன்னெப்போதும் இல்லாத வகையில் இறுக்கமாக்கப்படும். அப்படியிருந்தாலும் கூட ஏதோ ஒரு வகையில் புலிகளின் தாக்குதல் நிகழத்தான் செய்தது.

புலிகளின் ஏனைய படைப்பிரிவுகளை விடவும் கரும்புலிகளுக்கே இராணுவத்தினர் அதிகம் அஞ்சினர். ஏனெனில் அவர்கள் தனி ஒரு ஆளாக வந்தே கூண்டோடு தம்மை கைலாசத்திற்கு அனுப்பும் வல்லமை கொண்டவர்கள் என்பது எல்லாச் சிப்பாய்களுக்கும் நன்கு தெரியும்.

தற்கொலை தாக்குதல்களுக்கென விடுதலைப் புலிகள் தனியான படைப்பிரிவை மாத்திரமல்லாது விசேடமான பயிற்சிமுறைகளையும், தொழில்நுட்ப ஆற்றல்களையும் கட்டமைத்து வைத்திருந்தார்கள். குறிப்பாக கரும்புலித் தாக்குதலுக்கென விசேடமான அங்கி ஒன்றை புலிகளின் தொழில்நுட்பப்பிரிவு வடிவமைத்திருந்தது. அதனை அணிந்திருப்பதை எவராலும் இலகுவில் கண்டுபிடிக்க முடியாது. அத்தோடு அதி சக்தி வாய்ந்த வெடிபொருளை உடலில் சேர்த்து கட்ட முனைவதோடு, இலக்கை நெருங்கும் சமயத்தில் திட்டமிட்டபடி அதனை வெடிக்க வைக்கவும் முடியும். வடக்குக்கு வெளியே - தென்னிலங்கையில் - நடத்தப்பட்ட கரும்புலித் தாக்குதல்களின் போது இத்தகைய தற்கொலை அங்கிகளையே புலிகள் அணிந்து சென்றார்கள். சிலவேளைகளில் கரும்புலிகள் பற்றிய தகவல் கிடைத்து அவர்களைப் பிடிப்பதற்கு படைத்தரப்பு விரைந்தபோதும் அவர்களால் தற்கொலை அங்கிகளை மட்டுமே மீட்க முடிந்தது.

ஆனாலும் 2009 மேமாதத்தோடு கரும்புலிகள் பற்றிய பயம் படைகளுக்கு இல்லாது போயிருந்தது. புலிகள் அனைவரும் கூண்டோடு ஒழிக்கப்பட்டுவிட்டனர் என்ற நம்பிக்கையே கரும்புலிகள் பற்றிய பயத்தை மறக்கச் செய்திருந்தது. எனினும் அண்மையில் கதிர்காமம், வன்னி போன்ற இடங்களில் தற்கொலைத்தாக்குதல் அங்கிகள் படைத் தரப்பால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவை கைவிடப்பட்ட தாக்குதல் அங்கிகளாக இருக்கலாம் என்றே கருதப்பட்டது. ஆயினும் மிக அண்மையிலேயே இந்த அங்கிகள் பாதுகாப்பாக குறித்த இடங்களில் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்ற விடயம் பாதுகாப்புத் தரப்பினரிடையே பல்வேறு சந்தேகங்களை தோற்றுவித்துள்ளன.

இரகசியமான தாக்குதல்களுக்காக இறுதிச் சமர் ஆரம்பிக்க முன்னரே வெளியிடங்களுக்கு அனுப்பப்பட்ட கரும்புலிகளே தங்களுடைய அடையாளங்களை மறைத்து சாதாரண மனிதர்கள் போல் வாழ்வதற்காக தமது தாக்குதல் அங்கியை இவ்வாறு வீசியிருக்கலாம் என்று நம்பப்பட்டது. ஆயினும் அவர்கள் ஆளரவமற்ற இடங்களில் அவற்றை வீசிவிட்டுப் போவதற்குப் பதிலாக எதற்காக அவற்றை யாரும் கண்டுபிடிக்க முடியாத இடங்களில் பத்திரப்படுத்தி வைக்க வேண்டும் என்ற கேள்விதான் பலவித கோணங்களிலும் படைத்தரப்பை யோசிக்க வைத்துள்ளது.

இறுதிப் போரின் கடைசித் தருணங்களில் புலிகள் மிக உக்கிரமான எதிர்ப்பை படைத்தரப்பின் மீது பிரயோகித்திருந்தனர். தம்முடைய மிக முக்கியமான தலைவர்கள், தளபதிகள், படையணிகள் என்பவற்றை பத்திரமான இடமொன்றுக்கு நகர்த்துவதற்கான இறுதி எத்தனமாகவே இந்தத் தாக்குதல் நடைபெற்றது. இதன்போது 60 மேற்பட்ட தற்கொலைத் தாக்குதல்களும் இடம்பெற்றதாக கடைசிவரை படைத்தரப்போடு தொடர்புகொண்டிருந்த இந்திய ஊடகவியலாளர்கள் கூறுகிறார்கள்.

இறுதிச் சமரின் போது தமது பாதுகாப்பு வளையங்களை உடைத்தெறிவதற்கு புலிகள் கடும் பிரயத்தனம் செய்த போதும் இறுதியில் பெரும்பாலான புலிகளை தாம் அழித்ததாக அப்போதைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் சொல்லியிருந்தார். அவரின் கூற்றுப்படி பெரும்பாலான புலிகளே அழிக்கப்பட்டாலும் அவர்களில் ஒரு தொகுதியினர் தப்பித்து விட்டனர் என்பதை இதன் மூலம் பொன்சேகா மறைமுகமாக ஒத்துக் கொண்டிருந்தார். அவ்வாறு தப்பித்தவர்களில் கரும்புலிகள் அணியைச் சேர்ந்தவர்களும் உள்ளடங்குகிறார்கள் என்று புலம் பெயர் நாடுகளில் உள்ள புலிகள் சார்ந்த அமைப்புகள் உறுதியாகச் சொல்கின்றனர்.

தலைமறைவாக தமது அடையாளங்களை மறைத்துக் கொண்டு வேறு நாடுகளில் பதுங்கியிருக்கும் இந்தக் கரும்புலிகள் தமக்கான தருணம் வாய்க்கும் போது பாயத் தயாராகவே இருக்கிறார்கள் என்றும் புலம் பெயரிகள் நம்புகிறார்கள்.

புலிகளின் கரும்புலி அணியைச் சேர்ந்தவரும், புலிகளின் தலைவரின் மெய்ப்பாதுகாவலராக இருந்தவருமான ஒருவர் அண்மையில் இந்தியாவில் நக்கீரன் வார இதழுக்கு அளித்திருந்த நேர்காணலில் "எங்களின் முக்கிய தலைவர்களும், ஏராளமான போராளிகளும் தப்பித்த விடயம் இப்போதுதான் எங்களுக்கே தெரியவந்துள்ளது. கட்டளைக்காகக் காத்திருக்கிறோம். காலம் வரும் போது பாய்வோம்" என்று கூறியிருந்தார். இந்தக் கூற்று இலங்கை படைகளினை மீண்டும் கரும்புலிகள் பற்றிய பயத்தை உண்டு பண்ணியுள்ளது. இந்தப் பயத்தால்தான் போலும் 1987ஆம் ஆண்டு மில்லர் தகர்த்தெறிந்த நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய கட்டடச் சிதைவை ஆளுநரின் உத்தரவின் மூலம் அகற்றப்பண்ணியுள்ளது அரசு. இடிந்த கட்டடத்தின் மூலம் கரும்புலிகள் பற்றிய நினைவு மீள எழக் கூடாது என்பதே இதற்குக் காரணமாக இருக்கலாம். அல்லது முதற் கரும்புலியின் ஆவி கூட நாளைக்கு தம்மைத் தாக்கலாம் என்ற பயமோ தெரியவில்லை.

காத்திருக்கிறார்களா?
கரும்புலிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகன்

கடலில் கரைந்த விதை

அல்பா. கடல் சண்டைக்காரி. பொருத்தமான, அபாயமான முற்றுகைப் பொழுதுகளில் தன் படகோட்டச் சாதுரியத்தால் பலரையும் காப்பாற்றுபவள். எதிரியின் இலக்குகளைத் திக்குமுக்காடச் செய்து விடுபவள்.

இந்துமாறன். இந்துமாறன் உயர் அலைவரிசைத்தளத்தில் சக போராளிகளுக்கு நம்பிக்கையூட்டி விடாமல் அடிபடுங்கோ என்று கட்டளையிட்டு அவர்களின் படகுகளுக்கு தனது படகைக் கொண்டு வந்து காப்பிட்டு, படகைக் கலத்தோடு சண்டை பிடித்து இழப்புகளின்றி கரைசேர்த்த அந்த செயல்காரியின் துணிச்சலுக்கு ஈடான வார்த்தையில்லை.

சண்டைகளைப் போலத்தான் அல்பா நிர்வாகத்திலும் தனக்கென ஒரு அத்தியாயத்தை உருவாக்கிக் கொண்டிருந்தவள். இயல்பாகவே பெண்கள் என்றால் சமூகத்தில் அவர்களுக்கென்று ஓர் பதிவிருந்தது. அதை அவர்கள் மீறுவதைத் தடுக்கும் முகமாக பல கருத்துக்கள் ஒரு திரையாய் உருவாக்கப்பட்டும் இருந்தது. காலகாலமாய் அந்தச் சூழலிற்குள் வாழ்ந்தவர்கள் அக்கட்டினை உடைத்து வெளிவரும் போது சில தயக்கங்களும் அவர்கள் கூடவே வந்துவிட கடலிலும் அதேநிலைதான்.

விடுதலைப் புலிகளின் தலைவரின் ஆழ் நுண்ணிய பார்வையால் உருவாக்கப்பட்ட கடற்புலி மகளிர் அணியின் செயற்பாடுகள் விரிவுபடுத்தப்படுகின்றன. ஆனால், அதே வேளை கடற்புலிகளின் மகளிர் அணிக்குப் போன பெண்கள் கடலில் இறங்கித் திருத்து வரைக் போகமுடியாது எனக் கூறப் போனவர்களும் கடலிற்குப் பயந்தவர்கள் என்றுதான் திறமையாகச் செயற்பட முடியாமல் போக இக்கூற்றுக்கெல்லாம் முடிவுகட்ட முயற்சித்துக் கொண்டிருக்க அல்பா விடவில்லை.

கடற்புலிகளின் தலைவர் சூசை அவர்களோடு கதைத்து பெண்கள் எதில் தெளிவில்லாமல் இருக்கிறார்களோ அதை வகுப்புக்கள் மூலமாகத் தெளிவாக்கி, திரும்பவும் அவர்களைக் கடலில் இறக்கி தன்னோடும் கூட்டிக் கொண்டு போய் பெண்களாலும் சாதிக்க முடியும் என்ற உண்மையை உணரவைக்கும் வரை அல்பா ஓய்ந்ததேயில்லை.

அல்பாக்கா ஆசைப்படுகிறபடி எல்லா நிலைகளிலும் நாங்கள் கடலில் வரவேணும். கண்களில் நீர் தேங்க கடலில் செயல்களினூடே வளர்ந்து வரும் இளைய போராளியின் குரல்கள் ஓங்கி ஒலித்த காலம் அது.

சாதகங்கள் நடைமுறையிலிருந்தது. இலங்கை இராணுவத்தைப் போலவே புலிகளுக்கான தேவைகளும் இருந்ததால் கடற்புலிகளும் கடலோடிக் கொண்டிருந்தனர்.

ஒருநாளைக்கில் முல்லைத்தீவு கடற்பகுதியில் இராணுவத்தின் 'டோறா' விற்கு எதிரே புலிகளின் விநியோகப் படகுகள் மாட்டுப்பட்டு விட்டன. போர்நிறுத்த உடன்படிக்கையின்படி அரசபடைகள் எங்களைத் தாக்கினால் எங்களால் முறியடிப்புத் தாக்குதல் மேற்கொள்ளப்படும் எனப் புலிகள் கூறியிருந்தனர். புலிகளின் பாதை வழியே அவர்களது படகுகள் வரமுற்பட்டுக் கொண்டிருந்தன. படைக்கலங்கள் விடவில்லை. கலைத்துக்கலைத்துச் சுட்டன.

முறியடிப்பு நடத்த ஆரம்பித்தனர் கடற்புலிகள். முறையான போட்டில், ஒரு 'டோறா' தாண்டுபோக, மற்றைய 'டோறா'வை இராணுவம் கட்டியிழுத்துக் கொண்டு போனது.

இந்தச் சண்டையில் அல்பா நின்றாள்.

புலிகளது படகுகளைக் கரைக்கு வரவிடாமல் வழிமறித்துக் காட்டிக் கொண்டு நின்ற இராணுவத்துக்கு, அது பெரும் அடியாக இருந்தது.

அல்பா தன்னம்பிக்கைக்கு எடுத்துக் காட்டு. அவளுக்கு எந்த வேலையைக் கொடுத்தாலும் சிக்கலில்லாமல் நிறைவேற்றிப்போடுவாள். அல்பாவைப் பற்றிக் கடற்புலிகளின் மகளிர் விசேட தளபதி ஒருவரின் மனப்பதிவிது.

முல்லைத்தீவில் நடந்த சண்டையொன்று அல்பாவின் சண்டை ஆளுமைகளைத் தெளிவாக இனங்காட்டியது. சிக்கலான அந்தச் சண்டையில் கூட அல்பா நிதானமாகச் செயற்பட்டு, பாரிய இழப்புக்கள் ஏற்படாமல் செய்தவள். விழுப்புண் அடைந்தபின்பும் கூட, போராளிகளைப் பத்திரமாகக் கரையேற்றியவள்.

அல்பாவின் கடற் சமர்க்களங்கள் எப்படி விரிவடைந்தனவோ அதைப் போலத்தான் அவளது ஆளுமைகளும் புத்துயிர்ப்பாகிக் கொண்டிருந்தன. கடற்புலிகளது கடற்பலத்தையும் யாழ்.குடாநாட்டிற்கான அச்சுறுத்தலையும் ஏற்படுத்தும் களமாக பருத்தித்துறைக் கடற்பகுதியில் 'பிறைற் ஒவ் சவுத்' என்ற கப்பலை வழிமறிக்கும் சண்டை திட்டமிடப்பட்டது. இங்கும் அல்பா நின்றாள். ஒழுங்காக விழுப்புண் மாறாத நிலையிலும் கூட சண்டை பிடிக்க வேண்டும், சாதிக்க வேண்டும் என்ற துடிப்புடன் இந்தக் களமுனைக்கான பயிற்சி ஆரம்பமாகியிருந்த வேளை பெண் போராளிகளின் கூட்டு வலுவானது என்றபோது அல்பா அப்போராளிகளோடு ஒன்றாகக் கடலிற்குள் போனாள். இரவு பகல் பாராது ஒன்றாய் நின்று அவர்களைக் குறி தவறாத சூட்டாளர்களாய் மாற்றும் வரைக்கும் ஒழுங்காகச் சாப்பிடவோ நித்திரை கொள்ளவோ குளிக்கவோ இல்லை. கடற்புலிப் பெண்களைப் பற்றி எல்லா நிலைகளிலும் ஒருவரும் குறை கண்டு பிடிக்கக் கூடாது எனச் சொல்லியே அவர்களை உயிர்ப்பாக்கினாள்.

அல்பாவை ஒருபோதும் பொறுப்பாளராய்க் கட்டளை அதிகாரியாய்ப் பார்த்ததேயில்லை. எந்தப் பணியில் என்றாலும் தானும் ஒரு ஆளாய்ப் பங்கெடுத்துக் கொண்டேயிருப்பாள்.

'பிறைற் ஒவ் சவுத்' என்ற கப்பலோடு டோறாவையும் தாக்குவது என்ற திட்டங்களும் விளங்கப்படுத்தப்பட்டு படகுகளும் கடலில் இறக்கப்பட்டாயிற்று. எப்போதும் போலவே அல்பா இங்கு விழிப்பாக இருந்தாள். கண் இமை மூடியவாறு படுத்திருந்த அல்பா, 'சாதனங்கள்' கூப்பிட்டால் எழும்பிக் கதைப்பாள்.

போராளிகள் நினைத்தனர் அவள் நித்திரை என்று. சண்டை முடிந்து வந்த பின்புதான் தெரிந்தது அவள் நித்திரை கொள்ளவில்லை என்று. அவள் கண்களை மூடிக் கொண்டு எதிரிப் படையை எப்படித் தாக்கியழிப்பது என்றும், எதிரிப் படையை எப்படி வழி நடத்துவது என்பதைப் பற்றியும் தான் யோசித்துக் கொண்டிருந்ததாகக் கூறினாள்.

'பிறைற் ஒவ் சவுத்' மயிரிழையில் உயிர் தப்பியது பற்றி அவள் வேதனைப்பட்டாள். 'டோறா' தாண்டது காணாது. அடுத்த சண்டையில் இதை விட இன்னும் நிறையச் செய்ய வேணும். இது அவளது கனவு. தான் போய்ப் பிடித்த சண்டைகளின் பிழைசரிகளை ஆராய்ந்து அடுத்த சண்டைக்கு தன்னைத் தயார்படுத்தி விடும் சண்டைக்காரி அவள்.

'வருண கிரண' நடவடிக்கையால் படைகள் கடலை இறுக்கிய காலம். புலிப் போராளிகள் தம் கடலாதிக்கத்தை படைகளுக்கு உணர்த்த வாய்ப்புப் பார்த்திருந்த வேளை...

முல்லைக் கடலில் உலா வந்த கடற்கலங்கள் இராணுவத்தின் கண்ணில் பட்டது. உடனடியாகப் பெரும் போர்க்களம் தொடங்கியது. படைகளின் வலிமை அகன்று கொள்ள, புலிகளின் படகிற்குப் பாரிய சேதம். இயந்திரங்கள் வெடிபட்டு அசையமறுக்க, படகைக் கைவிட வேண்டிய நிலை.

இராணுவத்துக்குப் படகு என்றால் அது பொருள்தான். ஆனால் அது போராளிகளுக்கோ உயிர். உணர்வும் சதையும், குருதியுமாய் அவர்களின் தோழர் தோழியர் வாழ்ந்த கருவறை. வாய்ப்பேச்சின்றி அவர்களை அரவணைக்கும் தாய். எப்படி அதை அவர்கள் கண்ணெதிரே நீர் மூழ்கவிட அழிப்பார்கள். அல்பா துடித்துப் போனாள். எப்பாடுபட்டாவது படகைக் கரைக்குக் கொண்டு போக வேண்டும்.

புலிகளது படகின் என்ஜின் கையோ ஐந்துவிரல்களுக்குள் அடங்க எதிரியின் படகோ இரட்டைத் தாக்கத்திலிருந்தது.

மனோதிடம் உறுதிகொள்ள அல்பாவின் கட்டளைப்படி அவளது படகோடு சேதமடைந்த படகு தொடுக்கப்பட்டு அதை அவள் இழுக்கத் தொடங்கினாள். ஏற்கனவே கடல் நிலைமை மோசம். இன்னொரு படகைக் கட்டி இழுத்தால் வேகமோ குறைவு. இமைத்துளியில் அண்மிக்கும் எதிரியின் படகைத் திருப்பித் தாக்கத் தொடுவையைக் கழற்றிவிட்டு அல்பாவின் படகுச் சண்டை பிடிக்கப் போய்விடும். தூர உதிரிப் படகு வந்து அந்தப் படகை தொடுக்கத் தொடங்கிக் கிட்ட வந்து விடுவான். திரும்பவும் போய் அடித்து விட்டுவந்து படகுநாரிற்றைத் தொடுத்துக் கொண்டு வந்த பிறகு அருகில் வரும் எதிரிக்குப் போய் நெருப்படி கொடுத்து விட்டு வந்த அன்று அவ்வளவு இடர் நிறைந்த களத்திலும் கூட அல்பா தடுமாறவில்லை. நிதானமாய்க் கரைக்கு நிலைப்பாட்டை அறிவித்து, அந்தப் படகைவிடாமல் கரைக்குக் கொண்டு வந்து சேர்க்கும் இறுதிவரை அவள் நிலை குலையவில்லை.

ஆனால் அவளது மனத்திண்மை எதிரியின் ரவைக்குப் பொறுக்கவில்லைப் போலும். எங்கிருந்தோ வந்த வெடியொன்று அவளைக் கிழித்துக் கொண்டு நின்று போனது.

அல்பா இப்போது மருத்துவமனையில். போய்வருபவர்களிடம் எல்லாம் தன் வேதனையைப் புறக்கணித்தவாறு சண்டை நிலைப்பாட்டைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தாள். படகுகள் எல்லாம் கரைக்கு வந்திட்டுதோ...? படகில் நிக்கிற ஆருக்கும் என்ன பிரச்சினையோ...? இதுதான் அல்பாவின் இறுதிக் கணங்கள் வரை ஒலித்துக் கொண்டிருந்தது.

மாதமொன்றாக மருத்துவத்துக்குச் சவால் விட்டபடியாறு அல்பா படுத்திருந்தாள். ஆனாலும் அவள் மீளவில்லை. கடற்கரும்புலி என்ற அடையாளத்தோடு விதையானாள்.



அல்பாவை ஒருபோதும் பொறுப்பாளராய் கட்டளை அதிகாரியாய் பார்த்ததேயில்லை. எந்தப் பணியில் என்றாலும் தானும் ஒரு ஆளாய் பங்கெடுத்துக் கொண்டேயிருப்பாள். 'பிறைற் ஒவ் சவுத்' என்ற கப்பலோடு டோறாவையும் தாக்குவது என்ற திட்டங்களும் விளங்கப்படுத்தப்பட்டு படகுகளும் கடலில் இறக்கப்பட்டாயிற்று. எப்போதும் போலவே அல்பா இங்கு விழிப்பாக இருந்தாள். கண் இமை மூடியவாறு படுத்திருந்த அல்பா, சாதனங்கள் கூப்பிட்டால் எழும்பிக் கதைப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03, ஜூலை – 09ஜூலை, 2013

sudarolijaffna@gmail.com

சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி-: 021 567 7609

தேர்தல் மழை கழுவிய பாவங்கள்

வடக்கு மாகாணத் தேர்தல் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படாத நிலையில் அது தொடர்பான ஆயத்தப்பணிகள் மட்டும் களை கட்டியுள்ளன. ஒவ்வொரு கட்சியும் தத்தம் வேட்பாளர்களை முடிவு செய்யும் பணிகளில் மும்முரமாக ஈடுபடத் தொடங்கியுள்ளன. தேர்தல் திணைக்களப் பணியாளர்களுக்கான விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டு அவர்கள் கண்டிப்பாக கடமைக்கு வரவேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது. இது தவிர தேர்தல் திகதி அறிவிக்கப்படுவதற்கிடையில் அவசர அவசரமாகப் பல்வேறு வேலைகளுக்கான நியமனங்களும் கூவிக் கூவி விற்கப்படுகின்றன. இவையெல்லாம் தேர்தல் திருவிழாவின் வழமையான காட்சிகள் தான்.

ஆனால், இந்தமுறை புதுமையான காட்சி ஒன்றும் புகுத்தப்பட்டுள்ளது. தசாப்தக்கணக்கில் எந்தவித விசாரணையும் இன்றி சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளிடம் பேரம் பேசுகிறது அரசு. "விடுதலை வேண்டுமானால் தேர்தலில் குதியுங்கள்" என்பதே அந்தப் பேரம்.

அரசுக்கு எதிரான வாக்குகளை சிதறடிப்பதற்காகவே மக்களிடம் செல்வாக்குப் பெற்ற அரசியல் கைதிகளை களம் இறக்க திட்டமிடப்படுகிறது. தேர்தல் இலாபத்துக்காக அவர்களை எந்த நொடியும் விடுதலை செய்ய அரசு தயார்.

அப்படியானால் - தேர்தலுக்காக அரசியல் கைதிகளை விடுவிக்க முடியுமானால் - இதுநாள் வரை அவர்கள் எத்தனையோ போராட்டங்கள் நடத்திய போது விடுவிப்பதற்கு ஏன் அரசு முன்வரவில்லை? இந்தக் கேள்விக்கு எல்லோருக்குமே பதில் தெரிந்தாலும் யாரும் வாய் திறக்கப் போவதில்லை. சில வேளைகளில் தேர்தல் மழை கைதிகளின் பாவங்களை கழுவி விட்டதுபோலும்.

களியாட்ட விடுதியா? பல்கலைக்கழகமா?

குறுக்காலபோவான்

கடந்த வாரம் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்கள் நடத்திய புதுமுக மாணவர்களுக்கான வரவேற்பு விருந்து உபசாரம் சர்ச்சைகளைக் கிளப்பிவிட்டிருக்கிறது.

என்றுமில்லாத விநோதமாக இந்தமுறை மேலைத்தேய களியாட்ட விடுதிகளில் ஆடப்படும் 'தம்பதியர் நடனத்தை' (Couples Dance) விஞ்ஞான பீட மாணவர்கள் அரங்கேற்றி இருக்கிறார்கள். தென்பகுதி மாணவர்களும் மாணவியருமே இந்த தம்பதியர் நடனத்தை நிகழ்த்தி பார்ப்போரைப் பேரின்பப் பெருவாழ்வு பெறச் செய்திருக்கிறார்கள்.

வழக்கமாகவே பல்கலைக்கழகத்திற்கு வந்து சேரும் புதிய மாணவர்களை வரவேற்று நடத்தப்படும் விருந்து உபசார நிகழ்வுகளில் கலை நிகழ்ச்சிகள் என்று மாணவர்களின் பாட்டுக் கச்சேரிகளே அரங்கேறுவது உண்டு. சில சமயங்களில் சக மாணவர்கள் பகிடி வதைக் காலங்களில் செய்த திருவிளையாடல்களை கிண்டல் செய்யும் வகையில் குறு நாடகங்களை நடத்துவார்கள். இவை தவிர வேறு நிகழ்வுகள் நடப்பது அரிது.

இந்த நிலையில்தான் விஞ்ஞான பீட மாணவர்கள் நடன நிகழ்வுகளை வரவேற்பு விருந்தில் நடத்த முடிவு செய்தார்கள். இதன்போது தமிழ் மாணவர்கள் பறைநடனத்தையும் தென்பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் தமது கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் கண்டிய நடனத்தையும் ஆடுவதென முடிவாயிற்று. இந்த நேரத்தில்தான் மேலதிகமாக தம்பதியர் நடனத்தையும் ஆடப் போகிறோம் என்று தென்பகுதி மாணவர்கள் அறிவித்தார்கள். ஆரம்பத்தில் இது தொடர்பாக எதுவித எதிர்க்குரல்களும் எழவில்லை.

தம்பதியர் நடன ஒத்திகைக்கான இடம் கிடைக்காமையால் அவர்கள் மாணவர் பொது அறையில் உள்ள உள்ளக விளையாட்டு அரங்கை பயன்படுத்தத் தொடங்கினர்.

பாலியல் இச்சையைத் தூண்டும் வகையில் இசை ஒலிக்க விரசம் நிறைந்த அசைவுகளுடன் எல்லோருக்கும் முன்னிலையில் தென்பகுதி மாணவர்களும், மாணவிகளும் ஜோடிகளாக ஆடிய காட்சியை ஏனைய மாணவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. "இப்போது 'கப்பிள் டான்ஸ்' ஆடுவதற்கு என்ன அவசியம் வந்தது? இது எங்களுடைய கலாசாரமும் இல்லை. சிங்களவர்களுடைய கலாசாரமும் இல்லை. அப்படியிருக்கும் போது விரசம் நிறைந்த இந்த நடனத்தை நடத்த எப்படி அனுமதிப்பீர்கள்?" என்று ஏனைய மாணவர்களும், மாணவர் அமைப்புகளும் விஞ்ஞான பீட விரிவுரையாளர்களை அணுகினர்.

"நாங்கள் ஓம் எண்டு சொல்லிப் போட்டம். புரோகிறாமில நாங்களும் நிப்பம் தானே. ஏதாவது வித்தியாசமா ஆடினால் உடனேயே மேடையை விட்டு ஆக்களை இறக்கிறம்.

நீங்கள் நினைக்கிற மாதிரி அது ஒண்டும் கூடாத டான்ஸில்லை. எல்லா இடமும் வழமையா நடக்கிறதுதான். இங்க அது பழக்கத்தில இல்லாததால உங்களுக்கு உது புதிசாக் கிடக்கிது" என்று விரிவுரையாளர் தரப்பிலிருந்து பதில் கிடைத்திருக்கிறது. அதன் பின்னரும் 'கப்பிள் டான்'சிற்குத் தடை போட எதிரணியினர் எடுத்த முயற்சிகள் விழலுக்கு இறைத்த நீர்தான்.

திட்டமிட்டபடியே 'கப்பிள் டான்ஸ்' நடந்து முடிந்திருக்கிறது. விஞ்ஞான பீடத்தினர் உட்பட பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் 'கப்பிள் டான்'ஸை நடத்தக் கூடாது என்று விடாப்பிடியாக நின்றும் அதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் செவி சாய்க்கவில்லை.

"எங்கட உரிமைக்காக உயிர்நீத்த போராளிகளுக்குத் தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்துறது எங்கட கலாசாரம் தானே. ஆனால் அதுக்கு இங்க தடை. ஆர் செய்தது? என்ன செய்தவை? எண்டு ஆயிரத்தெட்டுக் கேள்விகள். பத்தாததுக்கு ஆமியும் பொலிசும் வந்து அடிக்கிறாங்கள். பேரினத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்கள் 'கப்பிள் டான்ஸ்' மட்டுமில்ல 'அரை டான்ஸ்' ஆடினாலும் ஆச்சரியப்பட முடியாது" என்று புழுங்குகிறார் மாணவர் ஒருவர்.

ஒரு சில விரிவுரையாளர்கள் தங்கள் பின்னால் நிற்கிறார்கள் என்ற தைரியத்தில்தான் இவ்வளவு எதிர்ப்புகள் வந்த போதும் கூட தென்பகுதி மாணவர்கள் 'கப்பிள் டான்ஸ்' ஆடியே தீருவது என்று விடாப்பிடியாக நின்றுள்ளார்கள். "கப்பிள் டான்ஸ் அவர்களின் கலாசாரம். அதை நாங்கள் தடுக்க முடியாது தானே" என்று விரிவுரையாளர்கள் அவர்களுக்கு 'சப்போர்ட்' பண்ணினார்கள் என்றும் தமிழ் மாணவர்கள் சொல்கிறார்கள்.

இந்த நிகழ்வில் எடுக்கப்பட்ட 'கப்பிள் டான்ஸ்' புகைப்படம் ஒன்று பேஸ் புக்கில் பதிவேற்றப்பட்டிருந்த போது, இந்தக் களியாட்டத்திற்கு ஆதரவாகவும், எதிராகவும் பல கருத்துகள் பின்னூட்டமிடப்பட்டதை அவதானிக்க முடிந்தது. களியாட்டத்திற்கு ஆதரவான கருத்துகள் மெல்ல மெல்ல எங்கள் சமூகம் தனது இருப்பைத் தொலைத்து விட்டு இரவல் இருப்பை வாங்கிக் கொள்ளும் நிலைக்கு சென்று கொண்டிருப்பதை பட்டவர்த்தனமாக்கின.

"இதே போக்கில் பல்கலைக்கழகம் செல்லுமாக இருந்தால் இன்னும் சில காலத்தில் பல்கலைக்கழகத்திற்குள்ளேயே மதுபானசாலைகளும் உல்லாச விடுதிகளும் தோன்றினாலும் ஆச்சரியப்பட முடியாது" என்று சமூக அக்கறை உள்ள ஒருவர் ஆதங்கப்பட்டார். அவரின் ஆதங்கத்திலும் நியாயம் இருக்கத் தானே செய்கிறது?

(இது தொடர்பான வாதப் பிரதிவாதங்களை பிரசுரிக்கவும் சுடர் ஒளி தயாராக இருக்கிறது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூகம்பத்தின் முதற் புள்ளி

● மறவன்

வல்லிபுரம் வசந்தன். இது தான் உலகையே அதிரச் செய்த கப்டன் மில்லரின் உண்மையான பெயர். 1966 ஜனவரி மாதத்தின் முதல் நாளில் வீட்டில் இரண்டாவது பிள்ளையாக பிறப்பெடுத்தவன். சிறுவயதிலிருந்தே விளையாட்டுப் புத்தியும், துடுக்குத்தனமும் எதையும் பரீட்சித்துப்பார்க்க வேண்டும் என்ற எண்ணமும் கொண்டவன் மில்லர். துன்னாலை ஐக்கிய விளையாட்டுக்கழகப் போட்டிகளில் இவன் ஒரு புயல். எந்த மூலையில் நின்றாலும் கிரிக்கெட் போட்டி என்று கேள்விப்பட்டால் விளையாட்டுக் கழகத்துடன் தானே வந்து தொற்றிவிடுவான். இவன் படித்த ஹாட்லிக் கல்லூரி கிரிக்கெற் அணியிலும் இவன் ஒரு அங்கத்தவன். துல்லியமாகப் பந்தை வீசி எதிரணிகளின் இலக்குகளைச் சரிப்பதில் இவனுக்கு நிகர் இவனே. வசந்தன் வந்தாலே அணி வெற்றி பெறும் என்ற நம்பிக்கை நண்பர்களுக்கு எப்போதும் இருந்தது.

அடிக்கடி தம்பியுடனும் சகோதரியுடனும் செல்லமாகத் தனகுப்படுவான். வீட்டில் சும்மாவே இருக்கமாட்டான். எப்போதும் ஏதோ ஒன்றை நோண்டிக் கொண்டே இருப்பான். தந்தை வங்கி முகாமையாளராக இருந்ததால் இவனின் வீட்டில் எப்போதுமே கார் நிற்கும். தந்தை இல்லாத நேரங்களில் அந்தக் காரில் ஏறி திறப்பைத் திருகி காரை இயங்கு நிலைக்கு கொண்டு வருவான். பின் தாயாரின் ஏச்சு விழுந்த பின்னர் தான் இறங்குவான். வீட்டிலுள்ள வயர், பற்றரி என்பவற்றை எடுத்து விஞ்ஞானி போல விதவிதமான ஆராய்ச்சிகளில் இறங்குவான்.

விளையாட்டும், குறும்புமாக நகர்ந்த அவன் வாழ்வு புதிய திசை நோக்கிப் பயணிக்கத் தொடங்கியிருந்தது. அமைதியாக இருந்த துன்னாலைக் கிராமம் இராணுவ வேட்டுக்களால் அல்லோல கல்லோலப்படத் தொடங்கியது. இராணுவம் வடமராட்சியில் அகலக் கால் பதித்து அட்டகாசங்களை நிகழ்த்திய காலப்பகுதி. அவற்றைக் கண்முன் கண்ட வசந்தன் இவங்களுக்குச் சரியான பாடம் படிப்பிக்க வேண்டுமென்று தன் நண்பர்களுக்கு அடிக்கடி கூறிக்கொள்வான். அதற்கான காலமும் வந்தது.

துப்பாக்கிகளுடன் புலிகளின் அணிகள் வடமராட்சிக்குள் தலைகாட்டத் தொடங்கியிருந்தனர். விடுதலைப்புலிகள் அமைப்பின் நான்காவது அணியாகத் தன்னை இணைத்துக் கொண்டான் அவன். வசந்தன் மில்லராக மாறினான். வீட்டுப் பக்கம் தலைகாட்டுவதைக் குறைத்துக் கொண்டான். ஒரு நாள் இவன் குஞ்சர் கடையடிச்சந்தியில் விடுதலைப் புலிகளின் பதாதைகளை பொதுமக்களுக்கு விநியோகித்துக் கொண்டிருந்த போது இவனின் உறவினர் ஒருவர் கண்டுவிட்டார். உடனடியாகத் தந்தை வல்லிபுரத்திடம் சென்று உங்கடை மகன் "இயக்கப் பெடியளோட சேர்ந்து சுத்துறான். உங்க நோட்டீஸ் எல்லாம் கொடுக்கிறான் கொஞ்சம் கண்டிச்சு வையுங்கோ. அவன் இயக்கத்தில சேரப்போகிறான் போலக் கிடக்குது" என்றார். ஆனால் மில்லரின் தந்தை அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

யாழ். குடாநாட்டை முற்று முழுதாகத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக இராணுவம் 'ஒப்பரேசன் லிபரேசன்' என்ற நடவடிக்கையை மனிதப் படுகொலைகளோடு ஆரம்பித்தது. எறிகணை மழையோடு, டாங்கிகள் சகிதம் முன்னேறிய படைகளுக்கு முன்னால் புலிகளால் நின்றுபிடிக்க முடியவில்லை. இழப்புகளுடன் புலிகள் அணி வடமராட்சியை விட்டுப் பின்வாங்கியது. வடமராட்சியை முழுதும் பிடித்த எக்காளத்தோடு முழு யாழ்ப்பாணத்தையும் விழுங்கப் படைகள் திட்டமிட்டன.

வடமராட்சியில் முழத்துக்கு முழம் நிலைகொண்டிருந்த இராணுவத்தின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு துன்னாலை ஞானசாரியார் பாடசாலையின் பின்பக்கப் பகுதியூடாக வந்து தாமரைக்குள வீதியில் ஏறி வீட்டுக்கு வந்தான் மில்லர்.

"அம்மா சரியாகப் பசிக்குது சாப்பாட்டைப் போடுங்கோ" என்று தாயின் கையால் வாங்கி உண்டு விட்டு சில நிமிடம் தாயின் மடியில் தலை வைத்துப் படுத்தான். வழமையாக சகோதரியுடனும் தம்பியுடனும் தனகுப்படும் அவன் அன்று அப்படித் தனகுப்படவேயில்லை. அவனின் நடவடிக்கையில் மாற்றம் தெரிந்தது. தனது உறவுக்காரப் பெடியன் ஒருவனிடம் காசு கொடுத்து "ஒரு கொக்கோ கோலா எடுத்து வை. நாளைக்கு நாளால வந்து குடிக்கிறன்" என்றான். அந்தப் பெடியனுக்கு ஒரே ஆச்சரியம். புலிகள் இயக்க போராளிகள் எவரும் 'கொக்கோ கோலா' குடிப்பதில்லை. அப்படியிருக்க மில்லர் ஏன் 'கொக்கோ கோலா' வாங்க காசு தந்தான் என்று அவனுக்கு முதலில் புரியவில்லை. புரிந்தபோது வடமராட்சி மட்டுமல்ல உலகமே மில்லரால் அதிர்ந்து அடங்கியது.

நெல்லியடியில் சொல்லியடித்தவன்

எப்படியாவது படைகளை விரட்ட வேண்டும். அரச படைகளுக்கு முன்னால் புலிகளின் ஆளணியும், ஆயுத பலமும் மிகக் குறைவு. ஆனால் படைகளை இப்படியே விட்டால் இதே வேகத்தோடு யாழ்ப்பாணத்தையும் பிடித்து விடுவார்கள். அந்த வேளையில் தான் விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான பிரபாவும், மில்லரும் சேர்ந்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்திற்குள் குண்டு நிரப்பப்பட்ட வாகனத்தின் மூலம் தாக்குதல் நடத்தி படைகளை விரட்ட தலைமையிடம் அனுமதி கேட்டு விண்ணப்பித்தார்கள். வெடி குண்டு நிரப்பப்பட்ட முதலாவது வாகனத்தை பிரபாவும், இரண்டாவது வாகனத்தை மில்லரும் செலுத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது. முகாமுக்குச் செல்லும் வழியில் அமைந்திருந்த இராணுவத் தடைகாப்பரண்களை அகற்றும் பணி மேஜர் காமினிடம் ஒப்படைக்கப்பட்டது. சரியாக ஏழு மணிக்குத் துப்பாக்கிகள், லோஞ்சர்கள் முழங்க பிரபாவின் கொமாண்டோ படையணி களத்தில் இறங்கி தடைகளை அகற்றும். அந்த இடைவெளியில் குண்டு நிரப்பப்பட்ட வாகனங்கள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தைத் தாக்கி சிங்களத்தைச் சிதறடிக்க வேண்டும். இது தான் திட்டம். சக்கை எனப்படும் சீ4 ரக குண்டுகளை வாகனத்தில் பொருத்தி அதற்கான இணைப்பையும், தனது உடல்வைக்கப்பட வேண்டிய சவப்பெட்டியையும் தானே தயார் செய்தான்.

1987 ஜூலை 5, மாலையில் திறக்கப்பட்டது களம். காமினின் ஒரு குழு தடையாக இருந்த காப்பரணுக்கு பக்கவாட்டில் நிலையெடுத்துக் கொண்டது. மற்றக்குழு மாலைசந்தியின் வீதியூடாக நகர்ந்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் மாணவர் விடுதி இருக்கும் பின்பக்கமாக நிலையெடுத்துக் கொண்டது. காமினின் குழு சரமாரியாக

(தொடர்ச்சி 15 ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விதை

- கணேசன் சேந்தன்.

சிறுகதை



> "இப்படித்தானே ஆமிக்காரர் இளங்கோ மாமாவைச் சுட்டிருப்பினம்? சூழ நின்ற விவரந் தெரிந்த அனைவரும் விக்கித்துப் போயினர்.

வழமை போலத்தான் இன்றும் பக்தர் கூட்டம் முண்டியடித்துக் கொண்டு அருச்சனையை முடித்து, பிரசாதம் பெற்றுக் கொண்டு வெளியில் வருவதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது. துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பிற்கான கட்டணச் சிட்டையையும், அதற்குக் கொடுப்பதற்காகப் பக்தர் பிரயத்தனப்பட்டுத் தேடி வைத்த இரண்டு ரூபாய்க் குற்றியையும் எடுக்கும் போது எப்போதும் போல் மனதிற்குள் அந்தக் கேள்வி எழுந்தது. 'சுமார் ஐயாயிரம் பெறுமதியான துவிச்சக்கர வண்டியைப் பாதுகாக்க இரண்டு ரூபா, அதே நேரம் ஓர் இலட்சத்திற்கும் அதிகமான பெறுமதியுடைய உந்துருளியைப் பாதுகாக்க ஆக ஐந்து ரூபா! என்ன அடிப்படையில் இந்த அறவீடு?', உள்ளம் அசைபோட்டது. மனித வாழ்வின் அடிப்படைத் தராதரங்களிற்குரிய கௌரவமே போலிப் பகட்டுக்களின் காளிகரத்திற்கு ஆளாகும் இன்றைய சமூக நிலையில் இந்த வியாக்கியானம் அவசியமா?, என்னுள்ளிருந்த இன்னொரு தேடல் விழித்துக் கொண்டு கேட்டது. வேறு வழியின்றி பெருமூச்சொன்றை விடையாக வழங்குவதற்காக உள்ளிழுத்த மூச்சுக்காற்று, அடுத்த நேரப் பூசைக்காக ஒலித்த மணியோசையைக் கேட்டு எழுந்த "அரோகரா" என்ற உச்சாடத்துடன் அடங்கிப் போனது.

வீட்டு வாசலை அண்மித்து வண்டியால் இறங்குகின்ற நேரம், 'சித்தப்பா!', இந்துக் குட்டியின் குரல் தெருவிற்கு அப்பால் இருந்து ஒலித்தது. திரும்பிப் பார்த்தேன், கோப்ரல் அசோகாவின் தோள்களின் மேலே ஏறியிருந்தவாறு என்னைப் பார்த்துக் கையசைத்தாள். இது அடிக்கடி நிகழ்கின்ற தரிசனந் தான், என்றாலும் எதற்கு தெருவிற்கு அப்பாலுள்ள காவலரண் வரை தனியே சென்றிருப்பாள்? ஒரு கணம் திடுக்குற்ற மனம் காவலரணிற்கு அருகிலுள்ள கடையில் நின்று கொண்டிருந்த அண்ணாவைக் கண்டதும் அமைதியடைந்தது. துவிச்சக்கர வண்டியை நிறுத்திவிட்டு அவர்களிடம் சென்றேன். விபூதியை எடுத்து இந்துவின் நெற்றியில் பூசுவதற்காய் எட்டியபோது குறிப்பறிந்து கோப்ரல் கொஞ்சம் குனிந்து கொண்டார். விபூதியைப் பூசிவிட்டு கைகளால் அவள் கண்களை மூடிக்கொண்டு ஊதிவிட்ட பின்னர் நிமிர்ந்தவர், "உங்க கோயில்ல நூல் தரமாட்டாங்களா?" எனக் கேட்டார். "தருவினம், உங்களிற்கொன்று வாங்கித் தரவோ?" அக்கறையுடன் வினவி முடிப்பதற்குள் "ஓமோம் அடுத்த முறை போகேக்கை சொல்லுங்கோ, சல்லி தந்து விடுகிறேன்" ஆர்வம் தெறித்தது. "பாப்! இந்துவையும் கூட்டிக் கொண்டு வா!" கையில் கூடையுடன் வீட்டு வாசலில் நின்று கோப்ரலைப் பார்த்துப் புன்னகைத்தவாறு எங்களிற்கு குரல் கொடுத்தார் அண்ணா. இந்துவை அப்படியே அலாக்காகத் தூக்கி தன் தோள்களிலிருந்து என் தோளிற்கு மாற்றிய அசோகா இந்து கொறித்துவிட்டு வைத்திருந்த அவர் வாங்கிக் கொடுத்த 'கிற்-கற் கண்டோஸ்' ன் மீதியையும் என் கைகளில் தந்துவிட்டு அவள் கன்னத்தை மெல்லக் கிள்ளினார். இவளிற்கென்ன தோன்றியதோ, தானும் பதிலிற்குத் தன் பிஞ்சு விரல்களால் அவர் தாடையைத் தடவிவிட்டவாறு கையசைத்தாள். அவரும் தன் கையைத் தூக்கி அசைத்த போது சற்றே பனித்த அவர் விழிகளைப் பார்த்தவாறே, பல வித வண்ணங்களில் மணிக்கட்டைச் சுற்றி பந்தம் போல் தென்பட்ட கோயில் நூல்களையும் என் கண்கள் அவதானித்தன. ஏனோ சற்றே கனத்த மனதுடன் வீட்டினுள் நுழைகையில் 'வித்தியாசாகரின் இசைக் கோலங்கள்' நிகழ்ச்சியில் 'அன்பே சிவம்' படத்தில் 'யார் யார் சிவம்? அன்பே சிவம்!' பாடல் காட்சி ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.

இரவுப் போசன நேரம். உருளைக்கிழங்குப் பிரட்டலுடன் அம்மியில் அரைத்த சம்பலுடனும் அரைபட்டுக்கொண்டிருந்த இடியப்பம், அண்ணியின் கைப்பக்குவத்திற்கு ஜோராகக் கைதட்டியவாறே வாய்க் குழியிலிருந்து வயிற்றிற்குள் இறங்கிக் கொண்டிருந்தது. அண்ணாவின் மடியிலிருந்த இந்துவிற்கு ஊட்டிவிட்டவாறே அண்ணி தான் ஆரம்பித்தார். "இவளிற்குச் சொல்லிக் களைத்துப் போனான். நீயாவது யோசிக்கக் கூடாதா? இப்ப இருக்கிற நிலைமைக்கு... இவளும் அங்க ஓடிப்போக நீங்களும் போய் சென்றியில நின்று கதைக்க, தேவையில்லாத பிரச்சினை தானே?" நான் அண்ணாவைப் பார்த்தேன். இடியப்பத்திலேயே கண்ணாயிருப்பது போல் பட்டது. ஆனால் இதழோரம் படர்ந்த புன்னகை இந்த விவாதத்தில் தான் கலந்துகொள்ளப் போவதில்லை என்பதை உறுதிப்படுத்தியது. அண்ணன் - அண்ணி இடையிலெழும் கருத்து வேறுபாடுகள் பொதுவாக ஒரு கணவன் மனைவிக்கிடையேயான வாக்குவாதங்களாகவன்றி, ஒரு சமூகவியல் விரிவுரையாளரிற்கும் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியருக்குமிடையிலான காத்திரமான வாதப்பிரதிவாதங்களாக நடந்து ஆரோக்கியமான சமரசம் எட்டப்படும் சூழ்நிலைகளைத் தோற்றுவிப்பதை அனுபவித்தவன் நான். ஆனால் தற்போதைய பிரச்சினை சற்று வித்தியாசமானது.

இது ஆரம்பித்ததே அவ்வப்போது இங்கு வரும் அண்ணியின் அப்பாவால் தான். நன்கு சிங்களம் தெரிந்ததனால் பொழுதுபோக்காக அந்தக் காவலரண் சிப்பாய்களுடன் அவ்வப்போது உரையாடப் போகும் போது இந்துவும் அவருடன் ஒட்டிக்கொள்வாள். அப்போது தான் கோப்ரல் அசோகாவின் அறிமுகமும் ஆரம்பமானது. தந்தையற்ற குடும்பத்தைக் காப்பாற்றவென்றாகஇராணுவ வீரனான அண்ணனின் மரணத்தைத் தொடர்ந்து தாயையும் இரண்டு தங்கைகளையும் பேணுவதற்காகப் படையில் இணைந்து கொண்டவர். பொறுப்புக்கள் பூர்த்தியாகாத காரணத்தால் இன்னும் திருமணம் செய்யாத போதும், தன் மூத்த தங்கையின் பெண் குழந்தையை இந்துவில் காண்பதாகக் கூறிய அந்த உறவுத் தளையை எம்மால் உடனடியாக அறுக்க முடியவில்லை. எல்லைப்புறக் கிராமத்தைச் சேர்ந்தவராதலால் தமிழில் உரையாடத் தெரிந்திருந்தும், ஊதியத்திற்காக யுத்த தர்மத்திற்கு ஒவ்வாத காரியங்களைத் தன் தொழிலில் பார்க்க வேண்டியிருப்பதாகக் கூறிய நேர்மையும் எங்கள் அன்னியோன்னியத்தை மேலும் வலுப்படுத்தியது.

"இப்படியே பேசாம இருந்த எப்படி? எங்க இளங்கோவின்ர விஷயம் இவங்களிற்குத் தெரியவந்தாலும் வீண் பிரச்சினை. ஏதோ பார்த்துச் செய்யுங்கோ" அண்ணியின் குரலுடன் நிகழ்காலத்திற்கு வந்த மனம், மீண்டுமொரு முறை பின் நோக்கிச் சுழன்றது. இளங்கோ, அண்ணியின் தம்பி, என்னிலும் பார்க்க இரண்டு,மூன்று வயது மூத்தவன். கரந்தடித் தாக்குதலணியின் பிராந்தியத் தளபதியாக விளங்கி, இரண்டு வருடங்களிற்கு முன்னர் முயற்சி செய்யப்பட்ட ஒரு முக்கிய தாக்குதலின் போது வீரச்சாவடைந்தவர். இந்தத் தாய்மாமனின் முகச்சாயல், குறிப்பாக அந்தக் கண்கள் இந்துவிடம் அப்படியே இருந்துள்ளதாகப் பலர் ஒப்புக் கொள்வர். இந்து கூட இளங்கோவின் புகைப்படத்தை மெய்மறந்து இரசிப்பாள். அவனைப் பற்றிய விடயங்களை எங்களிடம் கேட்டும், தற்செயலான உரையாடல்களைச் செவிமடுத்தும் ஏறத்தாள தனது விளக்கத்திற்கேற்ப பூரணமாக அறிந்து வைத்திருந்தாள்.

அன்று இளங்கோவின் ஆண்டுத் திவசச் சடங்குகளை முடித்துக் கொண்டு பூசகர் புறப்படும் நேரம். நெருங்கிய உறவினர்க்கும் அயலவர்க்கும் மதிய விருந்து வைக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தோம். திடீரென்று.... பெருத்த ஓசையுடன் குண்டொன்று வெடித்தது! தொடர்ந்து வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. ஒரு நிமிடப் பதற்றம், அதிர்ச்சி... தொடர்ந்து மயான நிசப்தத்துள்ளே பரபரப்பான சிங்களக் குரல்கள் மட்டும்! இவ்வளவு கால யுத்த அனுபவத்திலிருந்து புரிந்து கொண்டோம். எமது பக்கத்துக் காவலரண் மீது 'கிரனேட்' வீசப்பட்டு வேட்டுக்கள் தீர்க்கப்பட்டிருக்கின்றது. இயல்பான வரை அடக்கமாக, சூழ்நிலைக்கேற்ப உணவைப் பரிமாறி முடித்தோம்.

சற்று நேரத்தின் பின் நிலைமை சற்று இளகியது போல் பட்டது. வேடிக்கை பார்க்க நின்ற சிறுவர்களையெல்லாம் மிரட்டி உள்ளே அனுப்பிவிட்டு சூழ்நிலையை அவதானிக்க விரைந்தோம். அப்போது கடைக்கார பாலன் அண்ணர் இன்னும் பதற்றம் குறையாது அவசரமாக வந்தார். சாப்பிட வாறதுக்காகக் கடையைப் பூட்டிக் கொண்டு நின்றனான். 'தம்பி ஹெல்மெட் போட்ட இரண்டு பேர் ஒரு மோட்டார் சைக்கிளில வேகமாகப் போனது தான் தெரியும்! மிச்சமெல்லாம் கனவு தான்! முடிஞ்சது இவன் அசோகா தானாம்.

ஏனோ இதயம் இறுகித் தளர எல்லோரும் வீட்டிற்குள் இருந்தோம். "என்னசித்தப்பா" இந்து கேட்டாள். "ஓர் ஆமியை சுட்டுப் போட்டினமாம்" சொல்லி முடிக்க சில நொடிகள் விறைப்பாக நின்றவள் சர்வ சாதாரணமாய்ப் பதிலொன்றைச் சொன்னாள். "இப்படித்தானே ஆமிக்காரர் இளங்கோ மாமாவைச் சுட்டிருப்பினம்?" தூரத்தில் நண்பகல் பூசைக்கான கோயில் மணி ஏதோ கூறி ஒலித்தது!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகள் இல்லாமல்

இருளிலிருந்து
உன்னிடம்....
மௌன
வார்த்தைகளால்
வேண்டுகோள்
ஒரு
பகலுக்காக...

மாண்டு போன வாழ்வு

ஒற்றையடிப் பாதையிலே
ஓட்டைகள் அங்குமிங்கும்
ஒரு வழியும் புரியலையே

நிழல் தந்த வேம்பும்
நீட்டுக் கருகியதால் நிழலையும்
நெருப்பாய்க் கொளிகிறது

முற்றத்து மல்லிகையும் வாடி
தேன் சொட்ட மறந்து
கண்ணீர் வடிக்கிறது

வீடிருந்த அடையாளமாய்
விட்டு வைத்த நிலையொன்றில்
கறையான் குடியிருப்பு

பண்பாட்டு மூங்கிலும்
புயல் காற்று வீசுகையில்
முகாரி ராகம் இசைக்கிறது

வாழையடி வாழையாய் வாழ்ந்த
நம் வம்சத்தின் வாரிசாய்
கிளிசல்களோடு ஒரு வாழைமரம்

உயர்ந்து நின்ற இரும்பிலிப்பிலில்
கொட்டிய விதைகள் தீட்டிடும்
அந்த
ஆட்டையில் ஓட்டிய நூல்களத்தை

தரை தொட்ட
மழைத்துளியுந்தரை
புரண்டு ஓடுகையில் நிலம் குடித்த
குருதியோடு குடிகொண்டு
ஓடுகிறது

நெல் விதைத்த வயல் நிலமும்
செல்லரித்துப் போனதால்
புதைநிலமாய் புதையுண்டு
போனது

தொலைதூரம் போனதனால்
தொலைந்துபோன முகவரிகள்
தொகைதொகையாய்
வாக்கிலுண்டு

மீண்டு வந்த நாட்களிலும்
மீளாத நினைவுகளும் மாண்டு
போன வாழ்வும் மீண்டிடுமா?

அ. அஜந்தன்
கந்தர்மடம்

கவிதைப் புனல்

வலிகள்

....ரோ...
ஒரு துயரை வலிகளைத்
தாண்டி எழுந்தாலும் மறுதுயரை
நிமிர்ந்து நிற்பதற்குள் புதிதாக
இன்னொரு வலி....
போதும் இறைவா உன்
லீலை என்னும் அகராதியில்
இருந்து நீ
எனக்கு அளித்த வலிகள்
என்னும் அற்புத பரிசுகள்...
என் இத்தனை வலிகளுக்குள்ளும்
காரணமாய் இருந்த
பருவ வயதுக் காதலின்
விளைவால் இன்று
என் வாழ்க்கையை
விடை இல்லா வினாவாகிவிட்டது.

க. சுபநிலா
கன்னாகம்

முத்தம்

என் கன்னத்தைத் தொட்டுச் சென்ற
உன் உதடு என் உறக்கத்திலும்
தொல்லை செய்யுதடி...
என் சிற்ப உடல் உயிர் பெற்றது
உன் முத்த அபிஷேகத்தாலோ....?

கே. [illegible]
கல்வாடு நகர்.

தமிழ் மொழியின் தனிச் சிறப்பு

கவிதை உலகில்
தமிழுக்கு முதலிடம்
கற்பனை உதிப்பில்
கவிஞர்க்கு தனியிடம்!

இனிமை மொழியில்
தமிழுக்கு முதலிடம்
இல்லறம் காப்பதில்
பெண்ணுக்குச் சிறப்பிடம்!

தொன்மை மொழிகளில்
தமிழுக்கு முதலிடம்
செம்மொழி யானதில்
தமிழுக்கு சிறப்பிடம்!

சிறப்பான மொழிகளில்
தமிழ்மொழிமுதலிடம்
சிவனவன் அருளினால்
ஜெயம் பெறும் செம்மொழி!

சேனையூரான்
மூதூர் கிழக்கு.

காதல்

குயிலின் குரல்
[illegible] கடுகின்றதே!

ஒன்றும் ஒன்றும்
இரண்டு
என்று கணிதம்
சொல்லுதே
ஒன்றும் ஒன்றும்
ஒன்றே என்றே
என்றும் காதல்
சொல்லுதே!

பாண்டிருப்பு
[illegible]

தினம் ன ம்

கண்ணே!
சீரியல் நாயகத் தொடரைப் பார்த்து
நீ சிந்துகின்ற கண்ணீரைக் கண்டு
மனம் நொந்து போனதால்தான்
அரை விலை கொடுத்தாலும் போதும்
என்று
எங்கள் அழகான தொலைக்
காட்சியை
விற்றுத் தொலைத்தேன்.

தியாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பஸில் காமப் பேய்கள்-4

அனுஷ்கன்

கண்ணா! லட்டு தின்ன ஆசையா?

பல்கலைக்கழகம் இருந்து புதிய பட்ட மாணவர்களின் வரவுக்காய் தயாராகி வந்த காலப்பகுதி. பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் ஒருவர் தன்னுடைய தனிப்பட்ட வேலையாக வவுனியாக்குச் சென்றிருந்தார். வந்தவருக்கு அலுவல் முடிந்ததும் தன்னிடம் கற்கும் மாணவியின் நினைவு வந்துவிட்டது. கம்பஸில் நல்லோரு நாம் சகஜமாகப் பழகும் அந்த மாணவி விரிவுரையாளருடனும் அதே சிநேகபாவத்துடன் பழகினார். ஆனால் அதை விரிவுரையாளர் வேறுவிதமாக எடுத்துக் கொண்டுவிட்டார். அவருக்கு வன்னியில ஒரு பிளான் இருக்கு என்று தன் பட்டத்தினரிடம் பல ஒரு முறை சொல்லியுமிருக்கிறார்.

ஆகவே வந்ததேபடு மாணவியின் வீட்டுக்கும் சென்றுவிடுவோம் என்று எண்ணிக் கொண்டார். அதற்காகச் சின்னதொரு நாடகமாட வேண்டிய நிலையும் அவருக்கு ஏற்பட்டது. மாலை முடிந்தும் வவுனியாவில் தன் உறவினர் வீடுகளுக்கு விசிட் அடித்துவிட்டு இரவு 7.00 மணி போல மாணவிக்கு போன் பண்ணினார்.

வைகோ நான் சோர்ந்துகிறன். நான் இப்ப வவுனியாவில நிக்கிறன் என்று சொல்லியிருக்கிறார். தனக்கு கற்பிக்கும் விரிவுரையாளர் தங்கள் ஊருக்கு வந்து நின்று போன் பண்ணும் போது அவரை சம்பிரதாயத்துக்கு வீட்டுக்கு அழைக்காமல் விடுவது பண்பாடில்லையே. அதனால் மாணவியும் அப்பிடியோ சேர்! எங்கட வீட்டை வந்து ரீ குடிச்சிட்டு போகலாம் தானே என்று கேட்டுள்ளார். இதை மாணவி தனக்கு விடுத்த ஒரு சிக்னலாக எடுத்துக் கொண்ட விரிவுரையாளருக்கு லட்டு தின்ன ஆசை வந்தது. போனிலேயே மாணவியின் வீட்டு முகவரியை வாங்கிக் கொண்டு அடுத்த பத்தாவது நிமிடத்தில் ஆட்டோவில் சென்று இறங்கினார். வரவேற்பு தடல்புடலாக இருந்தது. சூடு பறக்க ரீயும், பிஸ்கற்றும் வந்தன. ரீயைக் குடித்தபடியே வீட்டை ஒருமுறை நோட்டம் விட்டார் லெக்சரர். வீட்டில் மாணவியும், வயதான பெற்றோரும் தான். லெக்சரருக்கு இன்னொரு லட்டுத் தின்னவும் ஆசை வந்தது. "எனக்கு வவுனியாவில விடியப் ஒரு அலுவல் இருக்கு. ஆனா இரவு வந்ததால குவாட்டர்ஸிலையும் இடமில்லை. ஒரு லொட்ஜிலையும் இடமில்லையாம். சொந்தக்கார வீடுகளும் இல்லை. அதுதான் என்ன செய்யிறதெண்டு யோசிக்கிறன்" என அவர் இழுத்தார். அவர் இப்படிச் சொன்னதும் "அப்பிடியெண்டா இரவு இங்கேயே தங்குங்கோவன்" என்று மாணவியும் பெற்றோரும் சொல்வார்கள் என்று அவர் எதிர்பார்த்தார். ஆனால் அவரது திருவிளையாடல்கள் பற்றி மாணவியும் பெற்றோரும் முன்னரே சாடைமாடையாக அறிந்து வைத்திருந்ததால் அவர்கள் லெக்சரர் சொன்னது காதிலே விழாதது போன்றிருந்தார்கள்.

எனவே பயிலிறதை விட்டு பறிக்க நினைத்தார். "ஒரு ஹெல்ப் செய்ய முடியுமா? இண்டைக்கு நைட் இங்க தங்கிட்டு போகட்டா?" என்று வெட்கத்தைவிட்டுக் கேட்டார். உடனேயே மாணவியின் தந்தை "சேர்! எங்களுக்கும் உங்களுக்கு உதவி செய்யத்தான் விருப்பம். ஆனா இது பொம்பிளைப்பிள்ளையள் இருக்கிற வீடு. இங்க உங்களைத் தங்க வைச்சா நாளைக்கு சனம் வெளியால நாலுவிதமாக் கதைக்கும்" என்று மறைமுகமாக மறுதலிக்க, லெக்சரருக்கு என்னசெய்வதென்று புரியவேயில்லை. "சனம் அப்பிடித்தான். நாங்கள் நல்லவிதமாக இருந்தா சனத்தைப் பற்றி ஏன் கவலைப்பட வேணும்?" என்று ஒரு தத்துவப் பொறியை வைக்க முயற்சித்தார். அந்தப் பொறியிலும் சிக்காமல் தாதுப்பிடியிலேயே மாணவியும், பெற்றோரும் நின்றதால், சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும் என்ற நரி போல லெக்சரர் பின்வாங்கவேண்டியிருந்தது. "நீங்கள் என்னை இன்சல்ட் பண்ணிட்டீங்கள் என்று முனகிக் கொண்டே வெளியேறினார் லெக்சரர். அவர் வெளியேறிய கையோடு வவுனியாவெங்கும் கொட்டு மழை. அந்த மழையில் நனைந்தபடியே குவாட்டர்ஸ்க்குப் போய்ச் சேர்ந்தார் லெக்சரர். அதற்கடுத்த பருவநிலைப் பரீட்சைகளில் அந்த மாணவிக்கு அதிமோசமான பெறுபேறுகள் கிடைத்தமையும், வகுப்பறையில் குறித்த விரிவுரையாளரின் மோசமான ஏச்சுக்களை தினமும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

(காமப் பேய்களின் கதை அடுத்த வாரம்...)

ராசி பலன்

03.07.2013 - 09.07.2013

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

உத்வேக மனதுடன் பணிகளில் ஈடுபடும் மேஷ இராசிக்காரர்களே!

முக்கியமான பணிகளை, தகுந்த திட்டமிடுதலுடன் நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த பணவரவு திருப்திகரமான அளவில் இருக்கும். உறவினர்களின் வருகையால், குடும்பத்தில் மகிழ்ச்சி வளரும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றுவது அவசியம். மாணவர்கள் அதிக மதிப்பெண்பெற ஆர்வமுடன் பயிற்சி மேற்கொள்வர்.

கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்

நடை, உடை சொல்லில் வசீகரமுள்ள ரிஷப இராசிக்காரர்களே!

எவரிடமும் விட்டுக் கொடுக்கும், மனப்பான்மையுடன் நடந்து கொள்வீர்கள். விலகிச் சென்ற நண்பர், உறவினர் பண்பு, பாசத்துடன் தேடி வருவர். குடும்பத்தின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்ற அதிகம் பணிபுரிவீர்கள். புத்திரர் நண்பர்களிடம், அதிருப்தி கொள்கிற கிரக நிலை உள்ளது. தகுந்த ஆறுதல் சொல்லி வழி நடத்துவீர்கள். மாணவர்கள் உடல் நலம் ஆரோக்கியம் பெறும்.

மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

உலக நடப்புகளை அறிவதில் ஆர்வம் நிறைந்த மிதுன இராசிக்காரர்களே!

உங்கள் வாழ்வில், தெய்வ அனுக்கிரகத்தால் நடந்த முக்கிய செயல்களை எண்ணி மகிழ்வீர்கள். அரசு தொடர்பான உதவியைப் பெறுவதற்கு முக்கியஸ்தர் உதவுவார். உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவு வகைகளை உண்ண வேண்டாம். மாணவர்கள் சக மாணவர்களுடன் படிப்பு தவிர, பிற விஷயங்களில் விவாதம் பேச வேண்டாம்.

புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

அடுத்தவர் நலன் சிறக்க இயன்ற அளவில் உதவும் கடக இராசிக்காரர்களே!

மனதில் உற்சாகமும், செயல்களில் அதிக கவனமும் நன்மை பெற உதவும். தன்னைச் சார்ந்தவர்களின், ஆடம்பர பணச்செலவுக்கு இணையாக, தாமும் பணச்செலவு செய்ய வேண்டும் என்கிற கௌரவ எண்ணம் உருவாகும். உடல் நலம் சீராக இருக்க, சத்து நிறைந்த உணவுகளை உண்டு மகிழ்வீர்கள். மாணவர்கள், சாகச விளையாட்டுகளில் ஈடுபடக்கூடாது.

மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்

இலட்சியத்தில் வெற்றி பெற உறுதியுடன் செயல்படும் சிம்ம இராசிக்காரர்களே!

சமூகத்தில் கூடுதல் மதிப்பு, மரியாதை கிடைக்கும். தம்பி, தங்கைக்கான மங்கல நிகழ்ச்சி நடத்த அனுபவம் உருவாகும். இல்லறத் துணையின் கருத்துக்கு உரிய மதிப்புத் தருவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பெண்கள், குடும்ப பணவசதிக்கு ஏற்ப ஆடை, அணிகலன் வாங்குவர். மாணவர்கள், புதியவர்களை நண்பராக ஏற்பதில் தகுந்த கவனம் வேண்டும்.

உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்

நண்பரின் ஆலோசனையை உணர்ந்து செயல்படும், கன்னி இராசிக்காரர்களே!

எந்தச் செயலையும் முன்யோசனையுடன் மேற்கொள்வதால், உரிய நன்மை பெறலாம். பணிசார்ந்த தொழில்நுட்ப அறிவை வளர்ப்பதில் ஆர்வம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பினால், திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள். உத்தியோகஸ்தர் நிர்வாக நடைமுறை சிறக்க, அதிக பொறுப்புணர்வுடன் பணிபுரிவர். மாணவர்கள் அக்கறையுடன் படித்து சிறந்த தரதேர்ச்சி பெறுவர்.

சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

மனதிற்குச் சரியெனப்பட்டதை மட்டும், ஏற்கின்ற துலாம் இராசிக்காரர்களே!

இதனால், பணிகளில் முன்யோசனையுடனும், ஆரவாரம் தவிர்த்தும் செயல்பட வேண்டும். குடும்பத் தேவைகளுக்கான பணச்செலவு அதிகரிக்கும். அதிக உழைப்பினால் நிலைமை சீராகும். வியாபாரத்தில் சில மாற்று உபாயம் பின்பற்றுவதால் உற்பத்தி, விற்பனை சீராகும். மாணவர்கள் விலை அதிகம் உள்ள பொருட்களை, கவனமுடன் பயன்படுத்தவும்.

விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

சூழ்நிலைகளுக்கு ஏற்ப, திட்டமிட்டு செயல்படும், விருச்சிக இராசிக்காரர்களே!

தாமதமான பணிகளை உத்வேகத்துடன் செயல்படுத்தி, முழு அளவிலான நன்மை பெறுவீர்கள். வீடு, வாகனத்தில் பெறுகிற வசதி சராசரியாக கிடைக்கும். இயந்திர தொழிற்சாலை பணியாளர், பாதுகாப்பு நடைமுறை தவறாமல் பின்பற்ற வேண்டும். மாணவர்கள், ஆன்மீக கருத்துக்களை அறிவதில் ஆர்வம் கொள்வர்.

மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்

நல்லவர்களை, நண்பராக பெற விரும்பும் தனுசு இராசிக்காரர்களே!

புதிய வீடு, வாகனம் வாங்குகிற திட்டம் செயல்வடிவம் பெறும். புத்திரரின் தேவைகளை, தாராள பணச் செலவில் பூர்த்தி செய்வீர்கள். உங்கள் வாழ்வில் முன்னேற்றம் கண்டு, எதிரி வியந்து விலகுவர். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். இல்லறத்துணை குடும்ப நலன் சிறக்க, தேவையான பணிகளை மேற்கொள்வர். மாணவர்கள் நன்றாகப் படித்து ஆசிரியர், பெற்றோரிடம் பாராட்டுப் பெறுவர்.

உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்

சுயகௌரவத்தை, நற்செயல்களால் பாதுகாக்கும், மகர இராசிக்காரர்களே!

செயல்களில் சமயோசித தன்மையை உருவாக்கும். உங்களிடம் முன்னர் உதவி பெற்றவர், உதாசீனமாக நடந்து கொள்கிற கிரகநிலை உள்ளது. பொறுமையும், ஆறுதல் வார்த்தையும், குடும்ப நலன் பாதுகாக்கும். தொழில், திட்டமிட்ட இலக்கை அடைய, அதிக அளவில் பணிபுரிவது அவசியம். மாணவர்கள், உடல்நலத்தில் கூடுதல் அக்கறை வேண்டும்.

அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்

வாழ்வில் பெற்ற சிறு நன்மையையும், பெரிதென மதிக்கும், கும்ப இராசிக்காரர்களே!

நிதானமாக நடத்த வேண்டிய பணி ஒன்று, அவசர கதியில் நிறைவேற்ற நேரிடலாம். பயனற்ற வகையில் பேசுபவரிடம் விலகுவது நல்லது. தம்பி, தங்கையின் நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழிலில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். பெண்கள், குடும்ப செலவில் சிக்கனம் பின்பற்றுவது சிரமம் தவிர்க்கும். மாணவர்கள் பிறர் பொருளை பாதுகாக்கும் பொறுப்பு ஏற்கக் கூடாது.

பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

முயற்சி நிறைவேற, மாற்று உபாயம் பின்பற்றும், மீன இராசிக்காரர்களே!

வாழ்வில் கூடுதல் வளம் பெற, பணிகளில் அக்கறையுடன் ஈடுபடுவீர்கள். நண்பர்களிடம் இருந்த மனக்கிலேசம் விலகி, நல்அபிப்பிராயம் உருவாகும். பெண் தெய்வ அருளும், மகளின் ஜாதக யோக பலனும், உங்கள் வாழ்க்கையை குன்றிலிட்ட தீபம் போல பிரகாசிக்க வைக்கும். தொழிலில் ஆர்வமுடன் ஈடுபட்டு உற்பத்தி, விற்பனையை அதிகரிப்பீர்கள். மாணவர்கள், நற்குணம் உள்ளவரை நண்பராக அடைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயைக் காத்த தனயன்

உண்மைச் சம்பவம்

— தமிழில்: ஜெகன்

கடும் மழை புயல் அபாய அறிவிப்பு வேறு தனது பத்து வயது மகன் ரோனியுடன் பள்ளிக்கூட விளையாட்டு நிகழ்வுக்காக மகன் ரோனியைக் காரில் அழைத்துச் சென்ற தாய் சில்வியா மகனுடன் வீடு திரும்பிய போது வழியில் அவர்கள் மழை வெள்ளத்தில் அகப்பட்டுக் கொள்கின்றனர்.

[சென்ற வார தொடர்ச்சி]

பின் சீற்றிலிருந்து முன் சீற்றுக்குத் தாவினான் ரோனி. தாய் மகன் இரு வருமாக மெதுவாக இருபக்க ஜன்னல் கண்ணாடிகளையும் இறக்கினார்கள். இதனால் வெளியே இருந்த வாயு அமுக்கமும், உள்ளிருந்த அமுக்கமும் சமமாகவே கதவைத் திறப்பது எளிதாகிவிட்டது. கதவைத் தள்ளியவுடன் திறந்து கொண்டதோடு நீர் சளசளவென உள்ளே பாய்ந்து காரை நிறைத்தது.

இருவரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்தபடி மெதுவாக உருண்டு நீரில் இறங்கினார்கள். எந்த நிலையிலும் கடவுளை நம்பிக்கையோடு வேண்டினால் ஏதோ ஒரு வகையில் அவன் உதவுவான் என்பது உண்மையான கூற்று. அவர்கள் இறங்கிய இடம், நீரின் கடுமையான ஓட்டத்தைத் தடுத்துக் கொண்டிருந்த காரின் பக்கமாகவிருந்தது. இதனால் காரின் இரு பக்கமும் வெள்ளம் சீறிப்பாய்ந்து கொண்டிருந்தது. இல்லையேல் இருவரும் வேகமாக நீரோட்டத்தில் அள்ளுப்பட்டுப் போயிருப்பார்கள். நிமிர்ந்து நின்ற போது சில்வியாவின் இடுப்பளவுக்கும், ரோனியின் நெஞ்சளவிற்கும் நீர்மட்டம் இருந்தது.

இடையிடையே மின்னிய மின்னலின் ஒளியில் சுற்றியிருந்த பயங்கரம் தெரிந்தது. அவர்கள் நின்ற இடத்திலிருந்து பாலம் சுமார் இருபதடி தூரத்தில் இருந்தது. ஆனால் நீர்மட்டம் உயர்ந்து ஏறி பாலத்தின் விளிம்பைத் தொட்டு ஓடிக் கொண்டிருந்தது. எப்படியும் பாலத்தில் ஏறினால் சிறிது நேரம் ஆசுவாசப்படுத்திக் கொண்டு மேற்கொண்டு என்ன செய்வது என்று தீர்மானிக்கலாம். ஆனால் என்ன நடக்குமென்று சொல்ல முடியாதிருந்தது. எப்படியும் பாலத்தை அடைந்தாக வேண்டும் இப்போது என்ன செய்யலாம்? வேறு வழியின்றி இருவரும் மெதுவாகப் பாலத்தை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள். ஆனால் அந்தோ பரிதாபம்!

கடும் மழை புயல் அபாய அறிவிப்பு வேறு தனது பத்து வயது மகன் ரோனியுடன் பள்ளிக்கூட விளையாட்டு நிகழ்வுக்காக மகன் ரோனியைக் காரில் அழைத்துச் சென்ற தாய் சில்வியா மகனுடன் வீடு திரும்பிய போது வழியில் அவர்கள் மழை வெள்ளத்தில் அகப்பட்டுக் கொள்கின்றனர்.

நீரோட்டத்தை மறித்துக் கொண்டிருந்த காரை விட்டு விலகி நடக்கத் தொடங்கியதும் நீரின் வேகத்தால் இருவரும் அள்ளுண்டார்கள்.

அந்தச் சிறிய ஆற்றை அண்டி ஒரு அணை கட்டப்பட்டிருந்தது. அதைச் சுற்றிவர முட்கம்பி வேலி போடப்பட்டிருந்தது. நீரின் அதி வேக ஓட்டத்தால் அள்ளுண்ட போது ரோனியின் இடையை இறுக்கமாக சில்வியா பற்றிக் கொண்டபடியால் இரு வரும் சேர்ந்தே அள்ளுண்டார்கள். நீரின் ஓட்டம் அவர்களை முட்கம்பி வேலியுடன் மோதிய வேளையில் சில்வியா அச்சந்தர்ப்பத்தைத் தவறவிடாது உறுதியாக வேலியைப் பிடித்துக் கொண்டாள். முட்கம்பிகள் அவளது துடையின் சதையைக் கிழித்துப் பதம் பார்த்தன. சதை கிழிந்து எலும்பு தெரிவதை அவள் உணர்ந்தாலும் பிடியை விடவில்லை. கம்பிவேலி இணைக்கப்பட்டிருந்த தூண் ஒன்றைத் துழாவிப் பிடித்தவள் ரோனியை அதை நோக்கி நகர்த்தினாள்.

"ரோனி இறுக்கிப் பிடித்துக் கொள்" என்று கூறிய சில்வியா, அவனை அணைத்தபடி தன் கைகளால் அவனுக்கு பாதுகாப்பு வேலிபோல் இருபக்கமும் இருந்த முட்கம்பிகளை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள். அவர்களைச் சுற்றி ஓடிக் கொண்டிருந்த நீர் மிகவும் குளிராக இருந்ததால் சில்வியாவின் கைகளும் கால்களும் விறைக்கத் தொடங்கின. அவளது கைகளுக்கிடையே இருந்த ரோனியும் குளிரால் விறைக்கத் தொடங்கினான். எவ்வளவு நேரம் போயிருக்குமோ தெரியாது. இன்னும் எவ்வளவு நேரம் தான் இந்தக் குளிரையும், காற்றையும் தாங்கிக் கொள்வது? நேரம் நள்ளிரவைக் கடந்திருக்கலாம் என்று சில்வியா நினைத்தாள்.

"தந்திக்கம்பத்தருகில் சென்று சில்வியா குட்டைக்குள் விழுந்த கம்பத்தை பொலிசார் எப்படி அறிவார்கள்? காரிருள் வேறு விடிந்த பின் பார்க்கலாம் என்று அவர்கள் திரும்பி விட்டார்கள்.

திடீரென்று அவள் கண்கள் நம்பிக்கையோடு ஒளிர்ந்தன. குதூகலத்தில் கைகளின் விறைப்புக்கூட எடுபட்டு விட்டது போலத் தோன்றியது. "ரோனி அங்கே பார்!" பாதையின் மேட்டுப் பக்கமாக பாலத்துக்கு மேலே ஒரு வாகனத்தின் ஹெட்லைட் வெளிச்சம் பளீரென்று தெரியவே நம்பிக்கை துளிர்விடத் தொடங்கிற்று. ஆனால், அவர்களால் சத்தம் போடவோ கைகளை விடுவித்துக் கொண்டு கைகளை விட்டால் நிச்சயம் வெள்ளத்தோடு அள்ளுண்டு ஆற்றோடு போய் விடுவார்கள்.

சில்வியாவின் பண்ணைக்கு அடுத்ததாக உள்ள பண்ணைக்குச் சொந்தக்காரனான டிக் றோஜர் என்பவன் சில குதிரைகளை ஏற்றிக் கொண்டு ஒரு டிரக்கில் வந்து கொண்டிருந்தான். பாலத்தில் ஏறியவுடன் ஹெட்லைட் வெளிச்சத்தில் ஒரு வெண்ணிறக் கார் அரைவாசி வெள்ளத்தில் மூழ்குண்டு இருப்பதை அவன் கண்டு விட்டான்.

அந்தக் கார் சில்வியாவின் கார் என்பது அவனுக்கு நன்கு தெரியும். ஆனால், காரில் ஒருவரும் இருப்பதாகத் தெரியவில்லை. மேலே போகவும் முடியாது. அயினும், கூடுமானவரை டிரக்கைக் காருக்கருகில் செலுத்தி வந்து யாராவது இருக்கிறார்களா என்று உன்னிப்பாகப் பார்த்தான். கம்பி வேலிக்கருகில் ஒரு தூணைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருந்தவர்களை அவன் கவனிக்க வில்லை. கவனிக்கும் வாய்ப்புக் கிட்டவில்லை. அப்படியிருந்தும் அவர்கள் இருவருமாக ஈனக் குரலில் எழுப்பிய சத்தமும் டிரக் எஞ்சின் சத்தத்தில் அமுங்கி விட்டது.

ஒருவரையும் காணாது திகைத்த டிக்றோஜர் டிரக்கை றிவேர்சில் எடுத்து அவசர அவசரமாகப் பண்ணைக்குத் திரும்பி உடனே பொலீசுக்குத் தகவல் கொடுத்தான்.

பொலிஸார் உடனடியாகவே செயற்பட்டனர்கள் அதற்கிடையில் சில்வியாவும் ரோனியும் பிடித்துக் கொண்டிருந்த தூண் சரியத் தொடங்கியது. டிரக் அருகில் வந்த போது தங்களுக்கு மேலேயே டிராக் ஏறப் போகிறது. என்று பயந்த அவர்கள் டிரக் திரும்பிப் போனவுடன் பிடித்துக் கொண்டிருந்த தூணும் சரியத் தொடங்கவே நம்பிக்கையை முற்றாக இழந்து விட்டார்கள்.

[தொடரும்....]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் 25!

கடந்த மாதம் தனது பிறந்தநாளைக் கொண்டாடிய இளையதளபதி விஜய் பற்றிய சில சுவாரசியமான குறிப்புகள் -

முதல் நான்கைந்து படங்களுக்குப் பிறகு விஜயகாந்த்தோடு நடித்த செந்தூரபாண்டி, விஜய்யைப் பட்டி தொட்டி எங்கும் கொண்டு போய்ச் சேர்த்தது. அதை மிகவும் பெருந்தன்மையோடு இப்போதும் ஒப்புக்கொள்வார் விஜய்!

பின்னணிப் பாடகராக 'தேவா' படத்தில் பாட ஆரம்பித்த விஜய், 2005இல் சச்சின் வரை 23 பாடல்களைப் பாடினார். அதன் பின்னர் ஏனோ பாடுவதைத் தவிர்த்து வந்தவர், தற்போது துப்பாக்கி, தலைவா என அடுத்த சுற்றை ஆரம்பித்திருக்கிறார்.

விஜய்க்குத் திருமணம் ஆனவுடனேயே அவரது ஆடை வடிவமைப்பாளராக மாறிவிட்டார் மனைவி சங்கீதா. இன்றுவரை அவர் தேர்ந்தெடுத்துத் தருகிற ஆடைகளை மட்டுமே அணிகிறார் விஜய்.

திடீரென்று நினைவு வந்தால் நண்பர்களோடு காரில் வந்து ஆசையாக லொயோலா கல்லூரி வகுப்பு இருக்கையில் உட்கார்ந்து விட்டுச் செல்வார் விஜய். அன்றைக்கு மாணவர்களோடு உட்கார்ந்து கலகலப்பாக உரையாடும் விஜய்யை நீங்கள் இதற்கு முன் கண்டிருக்க மாட்டீர்கள்!

ஜூன் 22 பிறந்த நாளன்று எங்கே இருந்தாலும் ஓடிவந்து தாயின் அருகில் இருக்கவே விரும்புவார். வெளிநாட்டில் இருந்தாலும் அங்கிருந்து கிளம்பிவந்து அன்று முழுவதும் அம்மா பக்கமே இருக்கிற அம்மா பிள்ளை விஜய்!

எவ்வளவு வேலை, படப்பிடிப்பு முடிந்து வந்தாலும் வீட்டிற்கு வந்து ஏதாவது ஒரு ஆங்கிலப் படம் பார்த்துவிட்டுத்தான் தூங்குவார். அதிசயிக்கும்படியான பெருவாரியான டி.வி.டி களை வைத்திருக்கிற பெருமை அவருக்கு உண்டு!

அசைவ உணவுகளின் மேல் விஜய்க்குப் பிரியம் உண்டு. அதுவும் அம்மா சமைத்த அசைவ உணவுகளுக்கு விஜய் அடிமை!

விஜய்க்கு நகைகளின் மீது அவ்வளவாக ஆசை கிடையாது.

ஹிந்தியில் அவருக்கு மிகவும் பிடித்த நடிகர் அமிதாப்தான். இன்றைக்கும் அவர் நடித்து வெளியாகிற ஹிந்திப் படங்களுக்கு முதல் நாள். முதல் காட்சி பார்க்க ஆசைப்பட்டுப் போவார்!

வருடத்துக்கு ஒரு தடவையாவது மனைவி, குழந்தைகளுடன் நிச்சயம் லண்டனுக்கு போவார். சங்கீதாவின் அப்பா வீட்டில் கொஞ்சநாள் இருந்த பிறகு, அதற்கடுத்த ஐரோப்பிய நாடுகளுக்கும் இந்தப் பயணம் விரிவடையும். எந்த நாட்டுக்கு, எந்த இடம் என்று முடிவெடுப்பது விஜயின் மகன் சஞ்சய் தான்!

தி.நகரில் சூர்யாவின் அடுத்த வீட்டுக்காரராக இருக்கிற டைரக்டர் பாரதிராஜா, கொட்டிவாக்கத்தில் விஜய்க்குப் பக்கத்து வீட்டுக்காரராக இருக்கிறார்!

விளையாடுவதற்கு மிகவும் பிரியப்படுவார். ரென்னிஸில் விடாப்பிடியாக இவரிடம் ஜோடி கட்டுவது மகன் சஞ்சய்தான்!

சஞ்சய்யின் ஒவ்வொரு வயது கூடும்போதும் அவனது நடவடிக்கைகளை வீடியோவில் பதிவுசெய்து வைத்திருக்கிறார். 20 வயது ஆனதும் அவனது பிறந்த நாளுக்கு விஜய் அளிக்கப்போகிற பெரிய பரிசு அதுதான்!

அப்பாவிடம் முதலில் சினிமாவில் நடிக்கிற ஆசையைச் சொல்ல, பேசிக் காட்டியது அண்ணாமலை பட வசனம்தான். அதனால் இன்றைக்கும் அந்த வசனத்தை மனப்பாடமாகப் பேசிக் காட்டுவார்!

நடனத்தில் மிகவும் பெயர் பெற்ற விஜய்க்கு பிடித்த நடனக்காரர்கள் பிரபுதேவா, லாரன்ஸ், மாதுரி தீட்சித்தானாம்!

நெருக்கமான கல்லூரி நண்பர்களை அழைப்பது மச்சி . மற்றவர்களை விஜய் அழைப்பது என்னங்கண்ணா!

கிச்சன் பக்கமும் எட்டிப் பார்ப்பார் விஜய். நெருங்கிய நண்பர்கள் குடும்பத்தோடு வந்தால், அழகிய தோசை வார்த்துக் கொடுப்பது இந்த அழகிய தமிழ் மகன்தான். அவர் தயாரித்துத் தருகிற காபி விசேஷ சுவையாக இருக்குமாம்!

எப்போதும் விரும்பிச் சாப்பிடுவது மட்டன் குருமா, தோசை. இளம் தோசையாக இருந்தால் இன்னும் பிடித்தமாகச் சாப்பிடுவார்!

வீட்டின் வராந்தாவில் காத்திருக்கும் எல்லா கார்களின் நிறமும் கறுப்பு.

அம்மா ஷோபா சந்திரசேகர் இசைக் கச்சேரிகளில் பாட ஊக்கம் கொடுத்து உற்சாகப்படுத்துவார். அம்மாவின் கச்சேரிகளுக்கு முதல் ஆளாக ஆஜர் ஆவார் எப்போதும்!

மகன் சஞ்சய்யும், மகள் திவ்யா சாஷாவும் அப்பாவின் நடிப்பில் ஆர்வமாக இருந்தாலும் படிப்பிலும் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார் விஜய். நாலு வயதில் இருந்தே கணனியில் விளையாடுகிறாள் சாஷா!

எவ்வளவோ அழைப்புகள் வந்தும் பிற மொழிப் படங்களில் நடிக்கச் சம்மதிப்பது இல்லை விஜய். தமிழில் மட்டுமே நடிப்பேன் என்பதில் உறுதியாக நிற்கிறார்! சமீபத்தில் பிரபுதேவாவின் விருப்பத்திற்காக 'ரவுடி ரத்தோர்' படத்தில் அக்ஷய் குமாருடன் ஒரு குத்தாட்டம் போட்டார்.

உலக அழகி ப்ரியங்கா சோப்ரா அறிமுகமானது விஜய்யுடன் ஜோடி சேர்ந்த 'தமிழன்' படத்தில் தான்.

ஒவ்வொரு படம் முடியும் போதும் அதில் பங்குபெற்ற தொழில்நுட்பக் கலைஞர்கள் அனைவருக்கும் அன்பளிப்பு கொடுத்து மகிழ்வது விஜய் வழக்கம்.

விஷாலின் யானை

'அவன்', 'இவன்', 'சமர்' எனத் தொடர் தோ படங்களைக் கொடுத்த வி இப்போது பூபதி பாண்டியன் இயக்கத்தில் நடித்துள்ள 'பட்ட யானை' படத்தை நம்பியிருக்கிற முக்கியமாக, ஏற்கனவே தன்னை வைத்து 'மலைக்கோட்டை' என்ற வெற்றிப் படத்தை இயக்கியவர் பூபதிபாண்டியன் என்பதால் இப்பட மலைபோல் நம்பி யிருக்கிறார் விஷா 'காதல் சொல்ல வந்தேன்' படத்துக் பிறகு தமிழில் பட வாய்ப்பின்றி தெலுங் சென்ற பூபதிபாண்டியன், அங்கேயும் ப டைக்காமல் திரும்பி வந்த நேரத்தில், விஷால் மூலம் வந்த வாய்ப்புத்தான் இந்தப் 'பட்டத் னை' அதனால் வணிக யுக்திகளை கலந்து ஒரு நகைச்சுவை கலவையாக படத்தை யக்கியிருக்கிறார். அதனால் இந்த படம் ஓடினால்தான் தனக்கு சினிமாவில் எதிர் லம் லையில் நின்று கொண்டிருக்கிறார் பூபதி பாண்டியன்.

யானையை முதன்மையாகக் கொண்ட 'கும்கி' படம் வெற்றி பெற்றதைப் போல தங்க ட்டத்து யானை யும் பட்டையைக் கிளப்ப வேண்டும் என்று தனித் தனியே பிரார்த்தித்துக் ாண்டிருக்கிறார்கள்.

புல்லும் வெற்றியடையுமா?

கண்ணா லட்டு தின்ன ஆசையா' படம் தந்த வெற்றிக்குப் பிறகு இனி நாயகனாகத்தான் சந்தானம் நடிப்பார் என்றே பலரும் எதிர்பார்த்தனர். ஆனால், அவரோ வழமைபோல நாயகனின் நண்பனாகவே திரையில் கலகலப்பூட்டுகிறார்.

என்றாலும் ஓகஸ்ட் மாதம் தொடங்கவிருக்கும் புதியபடம் ஒன்றில் சந்தானம் தான் கதை நாயகன். இது நகைச்சுவைக்கு மட்டுமல்லாமல், நடிப்பதற்கும் வாய்ப்புள்ள படம்.

படத்துக்கு வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்று தலைப்பிட்டு, திரைக்கதை வேலைகளில் இயக்குநர் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்.

புதியவரான ஸ்ரீநாத்தான் இயக்குனர். சந்தோஷ் சுப்ரமணியம் படத்தில் ஜெயம் ரவிக்கு நண்பனாக சந்தானம், பிரேம்ஜியோடு ஒருவர் வருவாரே... அவர் தான் ஸ்ரீநாத்.

மறைந்த இயக்குனர் ஜீவாவின் உதவி இயக்குனரான இவர், ஏற்கெனவே 'முத்திரை' என்னும் படத்தை இயக்கியவர். லட்டு போலவே புல்லும் வெற்றியடையுமா?

சூர்யாவைக் கரு

சூர்யாவை ஹீரோவாக வைத்து 'துருவ வாசுதேவ் மேனன். இந்தப் படத்துக்கு கதாநா செய்வதாக இருந்தது.

ஆனால், திடீரென த்ரிஷாவைத் தூக்கிவிட் இதற்கு முழுக் காரணமும் சூர்யா தானாம்.

'காக்க காக்க' படத்தில் நடித்தபோது கௌ பவ்வியமாக நடித்தாராம் சூர்யா. கௌதம் பேச் படத்தில் ஜோதிகாவின் சம்பளம் 40 லட்சம், சூ

ஆனால், இப்போது நிலமை அப்படியே த நிலைக்கு கௌதம் மேனன் தள்ளப்பட்டுள்ளா

'துருவ நட்சத்திரத்தில்' நாயகிக்கு பள்ளி மா த்ரிஷாவுக்கு வயதாகிவிட்டது. அவருக்கு மா அமலாபாலை ஒப்பந்தம் செய்யுங்கள் என்று சூ மேனனும் சம்மதித்து விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் ஜோதிகா

திருமணத்துக்குப் பிறகு நடிக்க மாட்டேன். குடும்பத்தைப் பார்த்துக் கொள்வதிலேயே என் முழு நேரத்தையும் செலவிடுவேன் - திருமணமாகப் போகும் எல்லா நடிகைகளும் இயக்குநர் உதவி இல்லாமல் சொந்தமாகச் சொல்லும் வசனம் இது.

ஆடுற காலும் பாடுற வாயும் சும்மா இருக்காது என்பார்கள். அப்படித்தான் திருமணத்துக்குப் பிறகு நடிக்க மாட்டேன் என்று சொல்பவர்கள், 2 வருடங்களுக்குப் பிறகு மறுபடியும் கோடம்பாக்கத்துக்கு படையெடுப்பார்கள். ஸ்ரீதேவி முதல் சினேகா வரை யாரும் இதற்கு விதிவிலக்கு கிடையாது.

ஆனால், இதன் போது அவர்களுக்குக் கிடைப்பதென்னவோ அக்கா, அண்ணி வேடங்கள் தான். சிலருக்கு அம்மா வேடத்துக்கான வாய்ப்புகள் கூட கதவைத் தட்டும். அதைப் பார்த்து பயந்த நடிகைகள், பின்னங்கால் பிடரியில் பட வீட்டுக்கே ஓடி விடுவார்கள்.

இதுவரைக்கும் இருக்கிற நல்ல(?) பெயரை வைத்துக் காலத்தை ஓட்டி விடலாம் என்று நினைப்பார்கள். நாம் கேட்பதல்ல மட்டும், நல்ல பாத்திரத்திற்காக காத்திருக்கிறேன் என்பார்கள். தமிழ்நாடே தூக்கிவைத்துக் கொண்டாடிய சிம்ரனுக்கு நடந்த கதை உலகம் அறிந்த ரகசியம்.

இதனால்த் தான் திருமணத்துக்குப் பிறகு நடிப்பதில்லை என்ற முடிவில் இருந்தார் ஜோ. சூர்யாவுக்காக ஒரே ஒரு விளம்பரப் படத்தில் மட்டும் அவருடன் ஜோடியாக நடித்தார்.

தற்போது திருமணமான பிறகும் சினேகாவுக்கு வாய்ப்புகள் குவிவதைப் பார்த்து, ஜோதிகாவுக்கும் நடிப்பு ஆசை துளிர்விட்டிருக்கிறதாம். இன்றைக்குத் தொலைக்காட்சி, பத்திரிகைகள் என்று பார்த்தாலும் எல்லா விளம்பரங்களிலும் பிரசன்னா - சினேகா ஜோடியாக இருப்பதைப் பார்த்து, நாமும் இப்படி நடித்திருக்கலாமே என்று சூர்யாவிடம் கேட்டதாகச் சொல்கிறார்கள்.

அதுக்கென்ன? இனிமேல் நடித்தால் போச்சு என சூர்யாவும் பச்சைக்கொடி காட்டி விட்டாராம். சினிமாவிலும் நடிக்கும் ஆசை இருப்பதையும் ஜோ. தயக்கத்துடன் வெளிப்படுத்த, யோசித்த சூர்யா, நல்ல பாத்திரங்கள் என்றால் பார்க்கலாம் என சொல்லியிருக்கிறாராம்.

மைதிலி சினேகா, இங்கிலீஷ் விங்கிலீஷ் ஸ்ரீதேவி போல நடிப்பை வெளிப்படுத்தும் பாத்திரம் கிடைத்தால் சூர்யா - ஜோ இருவருக்கும் சம்மதமாம். குழந்தைகள் இருவரும் ஓரளவுக்கு வளர்ந்துவிட்டதால் விரைவில் ஜோதிகாவை திரையில் பார்க்கலாம் என்கிறார்கள்.

கமலுடன் இணையும் யுவன்!

'விஸ்வரூபம்-2' படத்தைத் தொடர்ந்து திருப்பதி பிரதர்ஸ் லிங்குசாமி தயாரிக்கும் படத்தில் நடிக்கிறார் கமல்ஹாசன்.

இந்தப் படத்திற்கு கிரேஸி மோகன் கதை, வசனம் எழுதுகிறார். அதிரடி, காதல், பாசம், நகச்சுவை என்று கலக்கும் கமல், இந்தமுறை நகைச்சுவையைக் கையில் எடுத்திருக்கிறார்.

'தசாவதாரம்' படத்தில் வரும் பல்ராம் நாயுடு கதாபாத்திரம் போன்று நகைச்சுவை கலந்த வில்லன் வேடத்தில் நடிக்கிறார் கமல்.

இந்தப் படத்தை முதலில் கமலே இயக்குவதாக இருந்தது. பின்னர், நடிகரும், கமலின் நண்பருமான ரமேஷ் அரவிந்த இயக்குவதாகச் சொன்னார்கள். ஆனால், இயக்குநர் யார் என்பது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு இன்னும் வரவில்லை.

தற்போது இந்தப் படத்துக்கு இசை அமைக்க யுவன்சங்கர் ராஜா ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார். கமலுடன முதன்முறையாக யுவன் இந்தப் படத்தில் தான் இணைகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

கமல் -'இளையராஜா கூட்டணி 1980, 90-களில் மிகப்பெரிய வெற்றிப் பாடல்களைக் கொடுத்தது. யுவனின் சகோதரர் கார்த்திக் ராஜாவும் 'காதலா காதலா' படம் மூலம் கமலுடன் இணைந்து பணியாற்றினார். தற்போது அந்த வரிசையில் யுவனும் கமலுடன் இணைந்துள்ளார்.

இயக்குநரான டாப்ஸி

நடிகர் ராகவா லாரன்ஸ் இயக்கத்தில் உருவாகி வரும் புதிய படம் 'கங்கா முனி' படத்தின் மூன்றாம் பாகமாக உருவாகி வரும் இந்தப் படத்தின் நாயகியாக நடிகை டாப்ஸி நடிக்கிறார் என்பது ஏற்கனவே வெளியான தகவல் தான். தற்போது அவர் என்ன மாதிரியான பாத்திரத்தில் நடிக்கிறார் என்ற தகவல் வெளியாகியுள்ளது. நடிகை டாப்ஸி இந்தப் படத்தில் ஆவணப்பட இயக்குநராக நடிக்கிறாராம்.

படத்தில் ராகவா லாரன்ஸ் ஒளிப்பதிவாளராகவும், அவருடைய உதவியாளர்களாக மயில்சாமி, மனோபாலா, சாம்ஸ் ஆகியோர் நடிக்கிறார்கள். 'காஞ்சனா' படத்தைப் போலவே இந்தப் படமும் நகைச்சுவை கலந்த திகில் படமாக தயாராகி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சொந்தக் குரலில் அமலா...

நடிகை அசினுக்குப் பிறகு முதல் முறையாக சொந்தக் குரலில் பேசிய நடிகை என்ற பெருமையைப் பெற்றுள்ளார் நடிகை அமலாபால்.

அமலாபாலுக்கு தமிழ் நன்கு தெரியும் என்றாலும், அவருக்கு இதுவரை திரைப்படங்களில் இரவல் குரலே கொடுக்கப்பட்டு வந்தது.

ஆனால் விஜய் நடிக்கும் 'தலைவா' திரைப்படத்தில் மட்டும் முதல் முறையாகத் தன் குரலிலேயே பின்னணி பேசியுள்ளார். இதற்காக தொடர்ந்து நான்கு நாட்கள் இயக்குநர் விஜய்யிடம் தமிழ் கற்றுக் கொண்டாராம் அமலா. பின்னர் எதிர்பார்த்ததை விட வேகமாகவே பின்னணி பேசி முடித்திருக்கிறார்.

இது குறித்து இயக்குநர் விஜய் கூறுகையில், அமலாவுக்கு நல்ல குரல். உச்சரிப்பில் மட்டும் கொஞ்சம் தடுமாற்றம் இருந்தது. இப்போது சரியாகி விட்டது. என் நாயகிகள் அனைவரும் சொந்தக் குரலில் தமிழ் பேச வேண்டும் என்று விரும்புவேன். அதனால்தான் இதில் தவறிவிட்டார் என்றார்.

...ப்படித்த த்ரிஷா!

...வ நட்சத்திரம்' படத்தை இயக்குகிறார் கௌதம் ...நாயகியாக முதலில் த்ரிஷாவைத் தான் ஒப்பந்தம்

...விட்டு அமலாபாலை ஒப்பந்தம் செய்தார்கள்.

...ளதம் மேனன் சொல்வதைக் கேட்டு மிகப் ...பச்சுக்கு மறுபேச்சு பேச மாட்டாராம். அந்தப் ... சூர்யாவுக்கோ வெறும் 15 லட்சம் தானாம். ...தலைகீழ். சூர்யா சொல்வதைக் கேட்கும் ...ார். சூர்யா வைத்ததுதான் சட்டம். ...மாணவி பாத்திரமும் இருக்கிறதாம். ...ாணவி பாத்திரம் பொருந்தாது. அதனால் ... சூர்யா சொல்ல, வேறு வழியில்லாமல் கௌதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த ஒரு செயல் ஆனாலும், அதைச் செய்வதற்கான வழிமுறைகள் மாறிவருகின்றன. மிக வேகமாக - தலைகீழாக மாறி வருகின்றன. ஆகவே மேம்பாட்டுக்கான எண்ணச் சுடர்கள் உருவாக்குவதற்கான வாய்ப்புக்கள் அளவுகடந்து பெருகிவிட்டன.

பொருள்களை மேம்படுத்துவதற்கு என்னென்ன வழிகள் உண்டோ அவை செயல் முறைகளை மேம்படுத்துவதற்கும் பொருந்தும். அவற்றை மீண்டும் திருப்பிக் கூறுவதை விட, முதல் பகுதியில் 'பொருள்கள்' என்று வருகிற இடங்களை யெல்லாம் - 'செயல்முறைகள்' என்று மாற்றி விட்டால் போதும்.

செயல் முறைகளை மேம்படுத்துவதில் நீங்கள் உறுதியாக இருங்கள். நீங்கள் அதிக அளவு பயன் உள்ளவராவதற்கும், சீக்கிரம் செல்வந்தராவதற்கும் உள்ள மிக எளிய - மிக நிச்சயமான வழி- செயல்முறைகளை மேம்படுத்துவதே ஆகும். எனவே இந்த அத்தியாயத்தின் முதல் பகுதியில் 'பொருள்கள்' என்று வருகிற இடங்களில் எல்லாம் 'செயல் முறைகள்' என்று மாற்றி அதைப் படிக்கத் தவறாதீர்கள்.

படித்த பின்னர் இப்போது முதற்கொண்டே சிந்திக்கத் தொடங்குங்கள். எப்போதும் சிந்தித்துக் கொண்டே இருங்கள்.

இந்தப் பொருள் அல்லது இந்தச் செயல்முறை இவற்றை எப்படி மேம்படுத்துவது? இந்தத் திட்டம், இந்த நடவடிக்கை, இந்த அமைப்பை எப்படி அபிவிருத்தி செய்வது?

இவற்றை உங்கள் உள்ளத்தில் கேட்டுக் கொண்டே இருங்கள். முதலில் வெளிமனத்தில் கேளுங்கள். பிறகு உள்மனத்தில் கேளுங்கள். எப்போதும் கேட்டுக் கொண்டே இருங்கள்.

ஆக்கபூர்வமாக - சிருஷ்டிக்கும் வகையில் - எழுச்சியுடன் எதைச் சிந்திப்பது என்று பலருக்குத் தெரியவில்லை.

தங்களுடைய அன்றாட நடவடிக்கைகள் குறித்தும் தங்களுடைய அன்றாட வேலைகள் குறித்தும் வழக்கமான முறையில் பலர் தங்கள் சிந்தனையைச் செலவிடுவார்கள். வழக்கமான அன்றாட வேலைகள் நிகழ்ச்சிகளைத் தவிர்த்து மந்தமான சம்பவங்கள் தவிர்த்து அதற்கு அப்பால் தங்கள் சிந்தனையைப் பலரும் செலுத்துவதே இல்லை. அவ்வளவோடு சரி. அதற்கு மேல் ஒன்றும் இல்லை.

இந்த நிலை -குறைந்த பட்சம் உங்களுக்கு அல்ல. ஏன் என்றால் வரம்பற்ற ஆக்கபூர்வமான - எழுச்சி மிக்க - கிளர்ச்சிமிக்க -ஒரு சிந்தனை உலகத்தில் நீங்கள் நுழைந்துவிட்டீர்கள்.

இப்போது முதல் எதைப்பற்றியும் நீங்கள் சிந்திக்கிறீர்கள் கிளறிவிடக்கூடிய - எழுச்சி ஊட்டக் கூடிய வழியில் எதை எப்படி மேம்படுத்தலாம் என்று இப்போது முதல் சிந்திக்கிறீர்கள். நீங்கள் சிந்திக்கிறீர்கள்.

வலுக்கட்டாயமாக வேண்டுமென்று முயற்சி செய்து- மனோசக்தியை -கற்பனைத் திறனைப் பயன்படுத்தி ஆக்கப்பூர்வமாக - நீங்கள் சிந்திக்கத் தொடங்கினால், பிறகு அதற்கு எல்லையே இருக்காது.

'ஏதேனும் மார்க்கம் தோன்றினால் அது தான் சிறந்தது' என்று நின்று விடாமல் இப்போது கிடைத்துள்ளதை விட இன்னும் சிறப்பான ஒன்று கிடைக்குமா எனத் தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருப்பீர்கள்.

உங்களுக்குக் கிடைக்கிற செயல் முறைகளை - வழிமுறைகளை 61 மந்திரக் கேள்விகளோடு உரசிப் பாருங்கள் மேலும் செம்மைப்படுத்துவதற்கான மாற்று வழிகளைப் பற்றிப் பரிசீலனை செய்யுங்கள்.

இதோ, உங்களுக்கு முன்னால் கிளர்ச்சிமிக்க - எழுச்சிமிக்க - ஆக்கபூர்வமான - சிருஷ்டிக்கும் தன்மை படைத்த - சிந்தனை வளத்துடன் கூடிய முழு வாழ்க்கை இதோ உங்களுக்கு முன்னால் விரிந்து கிடக்கிறது. பொருள்களை - வழிகளை - திட்டங்களை-நடவடிக்கைகளை-அமைப்புகளை- உயர்த்தி மேம்படுத்த நீங்கள் எண்ணச் சுடர்களை யோசனைகளைப் 'பளிச்' 'பளிச்' என்று உதிக்கப் போகிறீர்கள்.

இதனால் நீங்கள் முன்னை விட அதிக பயன் உள்ளவராக மாறி விடுவீர்கள்.

அதனால் நீங்கள் சீக்கிரம் செல்வந்தராகிவிடுவீர்கள். என்றாலும் சீக்கிரம் செல்வந்தர் ஆவதற்காக மேம்பாட்டுத் திட்டங்களைப் பயன்படுத்த நிச்சயமாக அதிக பயன் தரக்கூடிய - வழிகள் எவை என்பதை இன்னும் நாம் கண்டு பிடிக்க வேண்டும்.

3. உங்களை மேம்படுத்திக் கொள்ளுங்கள்

உங்களை நீங்கள் மேம்படுத்திக் கொண்டால் நீங்கள் மேலும் மேலும் பயன் தருகின்றவராக ஆகி விடுவீர்கள்.

சீக்கிரம் செல்வந்தராவதற்கான தங்கச்சாவி எது என்றால் மேலும் பயன்மிக்கவராவது தான்.

உங்களை மேம்படுத்திக் கொள்ளுங்கள். அதன் வாயிலாக மேலும் பயன்மிக்கவராகுங்கள். அதன் மூலம் உங்கள் மதிப்பு மேலும் உயரும். அப்போது நீங்கள் சீக்கிரம் செல்வந்தராவது உறுதி செய்யப்படும். ஆக உங்களை நீங்களே மேம்படுத்திக் கொள்வது என்பது வெற்றிக்கான நிரூபிக்கப்பட்ட வழிகளில் மிக முக்கியமானது. அதை இந்த அத்தியாயத்தின் எஞ்சியுள்ள பகுதியில் கூறி முடிக்க இயலாது. ஆகவே அதனை இங்கு தொடங்கவில்லை.

உங்களை நீங்களே மேம்படுத்திக் கொள்வது என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால் இப்புத்தகத்தின் பிற்பகுதியில் பல அத்தியாயங்கள் அதற்கு ஒதுக்கப்பட்டுள்ளன. நீங்கள் மேலும் பயன்மிக்கவராக மாறிவிடவும் உங்கள் மதிப்பு உயரவும் வெற்றிக்கான நிரூபிக்கப்பட்ட வழிமுறைகள் உள்ளன. அந்த திட்டவட்டமான வழிமுறைகளைப் பற்றி பிற்பகுதியில் நீங்கள் கற்கலாம்.

உங்களை நீங்களே மேம்படுத்திக் கொள்வதற்கான பல வழிமுறைகள் பற்றி நீங்கள் கற்றுக் கொள்ள இருக்கிறீர்கள். அதன் மூலம் பயன்மிக்கவராக மதிப்பு மிக்கவராக நீங்கள் மாறிவிடுவீர்கள். அதுதான் சீக்கிரம் செல்வந்தராவது எப்படி என்பதை முதலில் கற்றுக் கொள்ளுங்கள்.

அதற்கு முன்னதாக பொருள்களை மேம்படுத்துவதன் வாயிலாக 2. செயல்முறைகளை மேம்படுத்துவதன் வாயிலாக சீக்கிரம் செல்வந்தராவது எப்படி என்பதை முதலில் கற்றுக் கொள்ளுங்கள்.

மூன்று சுலபமான வழிகள் உள்ளன. அவை மூன்றும் மிகமிக அவசியமானவை. பொருள்களையும் செயல் முறைகளையும் மேம்படுத்துவதற்கான யோசனைகள் - அந்த யோசனைகளில் இருந்து அதிகபட்ச இலாபம் பெறக்கூடிய நடவடிக்கைகள் அல்லது செயல்கள் மூன்று. அம்மூன்றும் சுலபமான வழிகள் ஆனால், மிகமிக அவசியமானவை. அவற்றைப் பற்றி அடுத்த அத்தியாயத்தில் கற்றுக் கொள்ளப் போகிறீர்கள்.

உங்கள் எண்ணங்கள்- யோசனைகளுக்கு மிக உயர்ந்த வெகுமதி பெறுவது எப்படி?

(கேள்விகள் அடுத்த வாரமும்)

அதனால் நீங்கள்சீக்கிரம் செல்வந்தராகிவிடுவீர்கள் என்றாலும் சீக்கிரம் செல்வந்தர் ஆவதற்காக மேம்பாட்டுத் திட்டங்களைப் பயன்படுத்த நிச்சயமாக அதிகம் பயன்தரத்தக்க – வழிகள் எவை என்பதை இன்னும் நாம் கண்டு பிடிக்க வேண்டும்.

வழிமுறைகளை மேம்படுத்துங்கள்

சுடர் ஒளி வாசகர்களே !
குடத்தில் இட்ட விளக்காக உங்களுக்குள் மறைந்து கிடக்கும் படைப்புத் திறன்களைக் குன்றின் மேல் தீபமாக்கிட சுடர் ஒளி காத்திருக்கிறது.

சிறுகதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள், எதுவானாலும் அனுப்பிவையுங்கள். தரமானவை பிரசுரிக்கப்படும்.

படைப்புக்களை அனுப்பவேண்டிய முகவரி: சுடர் ஒளி, இல.361 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சைப் பயங்கரம்

பூமுகன்

ஆஸ்திரேலிய அரசு அகதிகளை தமது நாட்டுக்கு வரவேண்டாம் என மீண்டும் மீண்டும் அறிவுறுத்தி வருகிறது. ஆள்கடத்தல்காரரை நம்பி ஏமாறாதீர்கள் என்ற வேண்டுகை விளம்பர அறிவிப்புக்கள் பரவலாக்கப்பட்டுள்ளன. ஆனாலும் படகுகள் அந்த நாட்டுக்கு படையெடுப்பதை எவராலும் தடுக்க முடியவில்லை.

பார்ப்பதற்கும் ரசிப்பதற்கும் அழகாக இருக்கிறது அந்தப் பூமி. உலகின் மிகப்பெரிய தீவு. மிகச் சிறிய கண்டம். ஈழத்தமிழர்களது இப்போதைய புகலிட முகம் அந்த நாடுதான்.

உயிரைப் பணயம் வைத்து ஆதாரம் தேடும் அளவுக்கு அந்த நாடு ஒரு இழுவிசையைக் கொண்டிருக்கிறது. இலட்சக் கணக்கில் காசைக் கொடுத்து கடலில் மாண்டுபோகும் உயிர்கள் குறித்து சிந்திக்கும்போது, மனிதவாழ்வு எவ்வளவு மலிந்து போய்விட்டது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

எங்களோடு அடிக்கடி உறவாடியவர் சிலர் இன்று எங்கென்றே தெரியவில்லை. வன்னி இறுதிப் போர் குறித்தும் அதன் தாக்கங்கள் குறித்தும் எத்தனை அறிவுரைகள்? மரணக் குண்டுகளை விலத்திக் கொண்டு தப்பிவந்த பலர் ஆழ்கடலில் அநியாயமாக மாண்டுபோவதும் இந்த அழகிய தீவுப் பயணத்தால்தான். பசியோடும், பட்டினியோடும் மாதக்கணக்கில் கடலில் தத்தளித்து, உயிரையே வெறுத்துவிட்ட நிலையில் கரை ஒதுங்கும் இடத்தில் கைதிகளாகி, முகாம்களில் அடைக்கப்படும் மனங்கள் படும்பாடு ஆசையால் நேர்ந்தது?

இல்லை! இலங்கைத்தீவில் இன்புற்றிருக்க எந்த ஏதுக்களும் அற்று ஆபத்தை தோழமையாக்கியே ஆழ்கடலில் தத்தளித்து இந்தப் பயங்கர குடிபெயர்ப்பு அமைக்கப்படுகிறது. சரி பிழை என்பவற்றுக்கு அப்பால், துயரம் எங்கு போயும் தீரவில்லையே?

ஆஸ்திரேலிய அரசு அகதிகளை தமது நாட்டுக்கு வரவேண்டாம் என மீண்டும் மீண்டும் அறிவுறுத்தி வருகிறது. ஆள்கடத்தல்காரரை நம்பி ஏமாறாதீர்கள் என்ற வேண்டுகை விளம்பர அறிவிப்புக்கள் பரவலாக்கப்பட்டுள்ளன. ஆனாலும் படகுகள் அந்த நாட்டுக்கு படையெடுப்பதை எவராலும் தடுக்க முடியவில்லை. செய்வதறியாத ஆஸ்திரேலிய நிர்வாகம் இப்போது புதிய உத்தியைக் கையாள ஆரம்பித்திருக்கிறது போலும்?

பச்சைப் பசேலென பரந்திருக்கும் வயல்களின் வழிகளில் கறுப்புப் பேய்கள் வலம்வரும் பயங்கரம் தான் அந்த உத்தி. பத்து உருவங்கள்! உடல் தோற்றத்துக்கு மேலதிகமாக உடைத் தோற்றமும் பயங்கரத்தை வெளிப்படுத்தியது. இருள் சூழ்ந்திருந்த அந்த பொழுதில் ஏன் அந்த பத்தும் தம்மை ஏன் சூழ்கின்றன என்பதைப் புரியாத ஈழ அகதிகள் இருவர்.

இரவு உணவு மற்றும் வீட்டுப் பொருள்களுடன் இருப்பிடம் திரும்பிக் கொண்டிருந்த அவர்களை இடைமறித்த கொள்ளைக் கும்பல், அவர்களைக் கடுமையாகத் தாக்கினர். செய்வதறியாது கொள்ளையர் பிடியிலிருந்து ஒருவர் தப்பி ஓடிவிட மற்றவர் சரமாரியாகத் தாக்கப்பட்டார். கடல்தாண்டி அகதிகள் என்று வந்துள்ளனர் என ஆஸி. அரசு கொடுத்த பிச்சைப்பணமும் பிடுங்கி எடுக்கப்பட்டது. நடுவீதியில் ஆண்டிகள் ஆக்கப்பட்டனர் ஈழ அகதிகள்

இருவரும் இதுபோலவே மெல்போர்ன் நகர அல்பியன்ஸ் பகுதியிலும் இந்த மாதத்தின் இரண்டாவது நாளில் நள்ளிரவு ஒரு மணியளவில் இலங்கை அகதிகளின் வீடு குறிவைக்கப்பட்டது.

அங்கு கத்தி, இரும்புக் கம்பி மற்றும் பொல்லுகளுடன் புகுந்த கொள்ளையர்கள் 20 பேர், வீட்டுக்குள் நுழைந்து வீட்டில் இருந்தவர்கள் மீது மிலேச்சத்தனமாகத் தாக்கினர்.

வீட்டில் இருந்த நான்கு பேரை கொள்ளையர்களது கத்திகள் பதம் பார்த்தன. தமது உறவுகளுடன் தொடர்பு கொள்வதற்கென வைத்திருந்த (இப்போதைய அவர்களது சொத்து) கைத்தொலைபேசிகளும் மடிக் கணனிகளும் பறித்தெடுக்கப்பட்டன. ஏன் ஈழ அகதிகள் மீது இந்தக் கொடூரம்? கேட்பதற்கு யாரும் அற்ற அவர்களது நிலைதான் இந்த துயரத்தை அவர்கள் மீது திணிக்க ஏதுவாகியிருக்கிறது. நடுக்கடலில் கரைந்துபோன உயிர்கள் போக கரை சேர்ந்த உயிர்களை காக்குமா ஆஸி. அரசு?

பூகம்பத்தின் முதற் புள்ளி

(07. ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவக்காப்பரணை நோக்கிச் சென்றது. சரமாரியாக றொக்கட் லோஞ்சர்களும் சீறிப்பாய்ந்தன. இடையில் புகுந்த மிராவின் குழு தடைக்காப்பரண்களின் கட்டைகளை அகற்றத் தொடங்கியது. கணநேரத்தில் திட்டத்தில் ஒரு மாற்றம். எதிர்பாராத விதமாக மாசிக்கின் வாகனம் புறப்பட முடியாதுபோகவும் ஆனாலும்தனியே தன் வாகனத்தோடு எதிரியின் குகைக்குள் புகுந்து திட்டத்தை செய்து முடிக்கக் கிளம்பினான் மில்லர்.

"தம்பி ஒரு குண்டு பட்டாலே நெருப்புப் பிடிச்சிடும். நாங்கள் முதல் கிளியர் பண்ணுறம். இடையில நீ வேகமாக வாகனத்தை செலுத்தி காம்புக்க விட்டுட்டு வெடிக்க முதல் திரும்பிப் பார்க்காமல் ஓடி வந்திடு." தாக்குதல் தளபதியான மிரா சொல்ல மனதுக்குள் எதையோ நினைத்துக் கொண்டு கொடுப்புக்குள் சிரித்தான் மில்லர். அந்த சிரிப்புக்கான அர்த்தம் மிராவுக்கு அப்போது தெரியவேயில்லை. திட்டமிட்டபடி தடைகளைத் தாண்டி உள்ளே புகுந்தது வெடிகுண்டு வாகனம். அடுத்த நிமிடம் மில்லர் வெளியே ஓடி வந்திருக்க வேண்டும். அவன் வரவில்லை. திட்டமிடலுக்கு மாறாக படைகள் செறிந்திருந்த பகுதிக்குள் வாகனத்தை கொண்டு சென்று கொண்டேயிருந்தான்.

தங்களை நோக்கி வரும் மில்லரைப் பார்த்து "தனியாளாக வாகனத்தில் வருகிறானே. இவனுக்கு என்ன பைத்தியமா?" என்று நினைத்துக் கொண்டார்கள். அடுத்த கணம் எழுந்த பேரொலி அவர்கள் நினைப்பை பொய்யாக்கியது. கரும்புகையோடு காற்றில் கலந்து போனான் மில்லர். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் நூலகம், ஆய்வுகூடம், முன்கட்டட வகுப்பறைகள் என இராணுவம் தங்கியிருந்த எந்த கட்டடத்தினதும் துகள்கள்கூட மிஞ்சவில்லை. ஒரே வெடியில் நூற்றுக்கணக்கில் சகாக்களைப் பறிகொடுத்த அதிர்ச்சியில் ஓட்டம் பிடித்தது படைத் தரப்பு. அதன் பின்னர் 25 வருடங்களாக போரின் பாதைகளின் உறக்கத்தைக் கெடுத்த கரும்புலிகளின் முதல் விதையாக மாறி இருந்தான் மில்லர். அதன் பின் கடற்கரும்புலிகளின் அத்தியாயத்தை காந்தரூபன், கொலின்ஸ், வினோத் ஆகியோர் தொடக்கி வைத்தார்கள். முதற் பெண் கரும்புலியாகி திருமலை கடற் தளத்தில் உயிரைத் தற்கொடையாக்கினாள் அங்கயற்கண்ணி. தொடர்ந்து நிகழ்ந்த எல்லாப் போர்களிலும் புலிகள் சார்பான திருப்புமுனைகளை கரும்புலிகளே உண்டாக்கினார்கள். இறுதிப் போரில் வான் கரும்புலிகளாக பாய்ந்த ரூபன், சிரித்திரன் வரை கரும்புலிகளின் கதை தொடர்ந்து கொண்டே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெலிபோனும் ரேடியோவும்

பகிடி ஏரம்பம்

> தம்பி தம்பி அலட்டுறன் எண்டு போனை வைச்சிடாதேயுங்கோ... உங்களுக்குப் பம்பலைப் பற்றித் தெரியாது.... நான் சத்தமாக றேடியோ போட்டால், பக்கத்து வீட்டுக்காரரெல்லாம் தங்கடை றேடியோவை நிற்பாட்டிப் போட்டு என்ரை றேடியோவைத்தான் கேக்கிறவை...

ஹலோ..! ஹலோ..!! நான் உங்கடை பாசமான வாசகன்.... நானொரு நாள்களாகக் கடிதம் போட்டு இன்றைக்குத்தான் இணைப்புக் கிடைச்சுது... ஓ... என்ன? வானொலி சத்தத்தைக் குறைக்கச் சொல்லுறியளோ? என்ரை குரலை வானொலியிலை கேக்கிறதுக்குத் தானே இவ்வளவு காலமும் [illegible] ...இல்லை... [illegible]

[illegible] குரலாக இருந்தது.... ஓ.... றேடியோவிலைதான் கேக்கிறனான்... நான் உங்கடை வாசகன்... வாசகன் எண்டு சொன்னால் வாசிக்கிற ஆக்களைத்தான் சொல்லுறது. கேக்கிற ஆக்களை என்னெண்டு சொல்லலாம்... ஓ... நான் உங்கடை றேடியோ தொடர்ச்சியாக் கேக்கிற 'கேட்சகன்...' எண்டு சொல்லலாம். காது [illegible]

தம்பி தம்பி அலட்டுறன் எண்டு போனை வைச்சிடாதேயுங்கோ... உங்களுக்குப் பம்பலைப் பற்றித் தெரியாது.... நான் சத்தமாக றேடியோ போட்டால், பக்கத்து வீட்டுக்காரரெல்லாம் தங்கடை றேடியோவை நிற்பாட்டிப் போட்டு என்ரை றேடியோவைத்தான் கேக்கிறவை. [illegible]

[illegible] இருந்து வந்தது.... அப்படியாயின் அது பத்திரிகை வாசிக்கிறவைக்குத்தானே பொருந்தும். ஏனெனில் பத்திரிகை, சஞ்சிகை வாசிப்பவர்கள் வாசகர் என்பது போல வானொலி கேட்பவர்களுக்கு சரியான ஒரு பதத்தைக் கண்டுபிடிக்கவில்லை...? நீங்கள் தான் இதற்கு ஒரு 'இதமான' சொல்லைக் கண்டுபிடிக்க வேணும்...

ஹலோ நான் உங்கள் வானொலி வாசகன், நேயர், இரசிகன், சுவைஞன்... சுவைக்கிறதெண்டு பல் நாவால் அல்லவா சுவைப்பது...

என்ன? [illegible] கதைப்பது சுவையாக இருக்குதோ...? சரி தம்பி.... இப்ப எனக்கொரு பிரச்சினை... நீங்கள் உங்கள் வானொலியில் ஏதாவதொரு நிகழ்ச்சி நடத்திக் கொண்டிருக்கும் [illegible] னைக் கேட்டுக் கொண்டிருக்கும் கேள்சகன் ஆகிய நான். (இதனை [illegible]) வானொலி நிகழ்ச்சி ஒன்றின் போது, நான் தங்களின் ஒரு கருத்து [illegible]

[illegible]

ஹலோ... என்ன இது... அவங்கள் 'போனை' கட் பண்ணிக் கனநேரமாகப் போயிட்டுது போல கிடக்குது... அட வெளிக்குள்ளாலை பார்த்தால் நான் ஏதோ [illegible] போனை [illegible] எண்டு காதைக் குடுத்துக் கேட்டதுகள் போல இருக்குது. [illegible] றேடியோவிலை இன்னும் [illegible] தானே?

வேறென்ன வேண்டும்... அது போதும்... அது போதும்.....

கதையுக்கைக் கதை. [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம்

பொலிகையூர் சு.க. சிந்துதாசன்

கோ. வல்வையூரானின் 'கம்பிகளின் மொழி'

'அனுபவம்' வாழ்வியல் தளம் சார்ந்து பெறப்படுவது. இவ்வாறு பெறப்படும் அனுபவம் ஒரு மனிதனின் பட்டறிவால் நிரம்புகிறது. இது அவனது கடந்தகால நிலைக்கும் எதிர்காலத்துக்கான நிதானித்து இயங்கும் வாழ்நிலைக்கும் இடையிலான ஒரு இயக்கியாய் அல்லது அவனின் வாழ்வியல் குறித்த அச்சாணியாய் விளங்கக் கூடியது. ஒவ்வொருவருக்கும் அனுபவமானது வித்தியாசமானவையாகவும் அதேநேரம் அது புதுப் புனைவுகளுக்கான வழிகாட்டியாகவும் இருக்கும்.

கோ. வல்வையூரான் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்தவர். அவர் புனர்வாழ்வு பெற்று வந்த காலங்களில் கவிதை எழுதத் தொடங்கியவர். இவரின் கவிதைகளின் பாடுபொருட்களும் அனுபவம் சார்ந்தே உருப்பெற்றிருக்கிறது.

துளிர்ப்புறும் ஒரு கவிஞனாய் பல ஒளிர் கவிதைகளை எழுதியுள்ளவர். அவற்றில் சிலவற்றை ஒருங்கிணைத்து 'கம்பிகளின் மொழி' என்ற கவிதைத் தொகுதியைத் தந்திருக்கிறார். ஒரு முகிழ்ப்புறும் கவிஞனுக்குரிய அடிப்படைக் குணங்களை இவரது கவிதைகளில் தரிசிக்க முடிகிறது. இருப்பினும், இவரது கவிதைகள் இலகு மொழிநடையில் அமையப்பெற்றிருப்பினும் அனுபவம் சார்ந்த கருத்துக்கள் மேலோங்கியிருப்பதானது கவனத்தைக் கோருகிறது. ஆனால் இவரது கவிதை மொழி இன்னும் மேம்படுவதற்கு மிகுந்த வாசிப்பும், தேடலும் அவசியமானதென்பதை கம்பிகளின் மொழி உணர்த்தி நிற்கிறது.

மன்னார் மிறுக்கன் திருக்கேதீச்சரத்தை சொந்த இடமாகவும் தற்போது வல்வெட்டித்துறைப் பிரதேசத்தில் வசித்தும் வரக்கூடிய கோபாலகிருஸ்ணன் பிரேம்குமார் அவர்கள் வல்வையூரான் என்ற புனைப்பெயரோடு கவியுலகில் காலடி பெடுத்து வைத்திருக்கிறார்.

இவர் 1999ஆம் ஆண்டிற்குப் பின்னர் வன்னியில் வாழ்ந்தவர். குடும்பப் பிரிவு, போரவலம் என்பவற்றுக்கப்பால் பல்வேறு வாழ்வியல் வலிகளைச் சுமந்தவர். தனது ஒரு கையையும், ஒரு காலையும் போரில் இழந்த போதும் தன்னம்பிக்கையை இழக்காத ஒருவராகவுள்ளவர்.

'கம்பிகளின் மொழி' இவரது கன்னிக் கவிதைத் தொகுப்பு. இவரது தொகுப்புக் குறித்து பல்வேறுபட்ட திருத்தங்கள் தேவைப்படினும் கவிதைகளில் பெரும்பாலானவை ஏதோவொரு ஏக்கத்தைப் பிரதிபலிப்பதுடன் மிகையிழப்பின் அடையாளங்களாகவும் காணப்படுகின்றன.

'மறந்திடுமோ மனதைவிட்டு' (பக். 13-14) என்ற கவிதையில்,

உனைவிட்டுப் புறப்பட்டதும்
உனக்காய் உழைத்ததும்
பாரினிலே பற்பல
கலைகள் கற்றதும்
வீரத்தின்
பெயரால் போரிட்டதும்
விழுப்புண்கள் பட்டதும்
மறந்திடுமோ மனதைவிட்டு?
....

இவ்வாறு குறிப்பிடுவதன் மூலம் தன் கடந்த கால நினைவுகளை மீட்டிக் கொள்கிறார்.

அதேபோல காணவில்லை (பக். 25) என்ற கவிதைக்கூடாக காட்டிமாறும் துரோகத்தனங்களை வெளிப்படுத்துகிறார்.

எதிரிகளே!
உங்கள் முகமூடிகளை
ஒருதரம் கழற்றுங்கள்.
உங்களை ரசிப்பதற்கல்ல.
எங்களில்
சிலரைக் காணவில்லை...

இதுபோல கவனத்தைக் கோரும் பல கவிதைகள் காணப்படுகின்றன. 41 பக்கங்களில் மொத்தம் 28 கவிதைகள் இடம்பெற்றிருக்கின்றன. தந்தை கோபாலகிருஸ்ணன் அவர்களுக்கு இந்நூலை சமர்ப்பணம் செய்துள்ளதுடன் தந்தையாரைப் பிரிந்து வசித்துவந்த காலங்களில் தந்தையார் தனக்கெழுதிய கடிதம் ஒன்றையும் இதில் இணைப்புச் செய்துள்ளார்.

தனது சூழல், சமூகத்தின் மீதான பார்வை, மனதை அழுத்தும் சம்பவிப்புக்கள் கடந்த கால நினைவுகள், போரவலம், சிறைவாசம் இன்னும் காதல், நட்பு, விழுமியம், பாசம் என நீளும் இவரது கவிதைகளின் பாடுபொருட்கள் ஒரு வளரத் துடிக்கும் கவிஞனின் ஆதங்கங்களாக வெளிப்பட்டு நிற்கிறது.

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிசம்பர் 21,1946, சிறிராம்பூர்,பீகார்

இன்றிரவு பாபுவும் சுசீலாபென்னும் நானும் ஒரே கட்டிலில் படுத்துக்கொண்டிருந்த போது அவர் என்னை அணைத்துத் தட்டிக் கொடுத்தார். மிகுந்த அன்புடன் என்னைத் தூங்கச் செய்தார். நீண்ட காலத்துக்கு பின் என்னை அணைத்திருந்தார். பின்பு தன்னோடு படுத்திருந்தாலும் (பாலியல் உந்துதல்களைப் பொறுத்தவரை) நான் குற்றமற்றவளாக இருந்தது பற்றி பாபு என்னைப் புகழ்ந்தார். ஆனால் மற்றைய யுவதிகளைப் பொறுத்த வரை நிலமை இப்படியானதாக இருக்கவில்லை. (காந்தியின் ஏனைய தோழிகளான) வீணா, காஞ்சன் மற்றும் லீலாவதி ஆகியோர், காந்தியிருந்தால் தங்களால் தூங்கமுடியாது என்று எனக்கு கூறினார்கள்.

மார்ச் 2, 1947, ஹைம்சார் பீகார்

இன்றைக்கு பாபாவிடம் இருந்து இரகசியக் கடிதம் ஒன்று பாவுக்கு கிடைத்தது. அவர் அதனை வாசிக்கும்படி என்னிடம் தந்தார். அந்தக் கடிதம் மனதை உலுப்புவதாக இருந்தால், பாபாவை திருப்திப்படுத்துவதற்கென்றே, இன்றிலிருந்து வேறாக தூங்க அனுமதிக்கும்படி பாபுவை நான் கேட்டுக் கொண்டேன். எனது முடிவு பற்றி பாபாவுக்கு கூறியபோது, பாபுவுடனும் என்னுடனும் கதைத்தபின், பரிசோதனையின் நோக்கம் பற்றி தான் திருப்தியடைந்ததாகவும் ஆனால் வேறாக தங்கிப் பரிசோதனையை முடிவுக்கு கொண்டு வரும் எனது முடிவு முறையானது தான் என்று பாபா தெரிவித்தார். அதன் பின் அவர், அத்தியாயம் இப்போது முடிவுக்கு வந்துவிட்டதாக கிஷோர் லால் மஷ்றுவாலாவுக்கும் தேவ தாஸ் காந்திக்கும் கடிதம் ஒன்றை எழுதினார்.

பெப்ரவரி 2, 1947, தஸ்தாரியா, பீகார்

இன்று காலைப் பிரார்த்தனையின் போது, தான் என்னோடு பிரமச்சரிய பரிசோதனைகள் நடத்துவது பற்றித் தன்னைப் பின்பற்றுவோருக்கு கூறினார். அப்படி சொன்னது ஏன் என்றும் எனக்கு விளக்கினார். அது வதந்திகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் என்பதால் எனக்கு ஆறுதலாக இருந்தது. இப்போது நான் எதைப் பற்றியும் கவலைப்படவில்லை என்று எனக்கு நானே கூறிக்கொண்டேன். தான் விரும்பும் எதையும் உலகம் கூறட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளின் கதவுகளைத் திறந்தவன்

07

■ ஔண்யன்

“ நீதிபதி– யூலியன் போல் அசாஞ்சே உங்கள் தொடர்பு வலையமைப்பைத் தடை செய்தமைக்கு என்ன ஆதாரம் உண்டு? நோர்டெல் நிறுவன இயக்குநர்– இப்போதைக்கு ஒன்றுமில்லை. ஆனால் அவர் விட்டுச் சென்ற குறிப்பு ஒன்று இணையத்தில் இருந்தது. ஆனால் அதுவும் சில நிமிடங்களில் அழிந்துவிடும் வகையில் செய்யப்பட்டிருந்ததால் அதனையும் சமர்ப்பிக்க முடியவில்லை. ஆனால் இதை யூலியன் தான் செய்தார் என்பதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்.

ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம். ஆத்திரம் உடனடியாகவே அறிவைத் தவறான பாதையிலேயே வழிநடத்தும். அதன் விளைவாகப் பின்விளைவுகள் எதனையும் பற்றி யோசிக்காமல் முடிவுகளை எடுத்துவிட்டு, பின்னர் அந்த முடிவினை ஏன் எடுத்தோம் என வருந்துகிறவர்கள் நிறையப் பேர்.

இந்த உத்தியைத்தான் யூலியன் அசாஞ்சே செய்தான். தனது எதிரிகளுக்கு அவர்களை அறியாமலே ஆத்திரத்தை உண்டுபண்ணி, அறிவு ரீதியான முடிவுகளை எடுப்பதற்குப் பதிலாக உணர்ச்சி வசப்பட்ட செயற்பாடுகளை அவர்கள் தெரிவு செய்யும் வண்ணம் யூலியன் திட்டமிட்டுக் காய் நகர்த்தினான். தன்னுடைய பொறிக்குள் நோர்டெல் நிறுவனமும், அவுஸ்திரேலியப் பொலிஸாரும் அப்பாவித்தனமாக மாட்ட வேண்டிய இக்கட்டான சூழல் நீதிமன்றத்தில் ஏற்படப் போவதை எண்ணியே யூலியன் ஒரு ஏளனப் புன்னகையை உதட்டில் தவழவிட்டான். நிகழப்போவது எதனையும் அறியாதவர்களாக யூலியனை அவசர அவசரமாக நீதிமன்றக் கூண்டில் பொலிஸார் ஏற்றினர். விசாரணை ஆரம்பமானது. அதிமேதாவித்தனமாக யூலியனை மாட்டவைத்துவிட்டோம் என்ற எண்ணத்தில் அரசுத்தரப்புச் சட்டத்தரணி யூலியனிடம் கேள்விகளைத் தொடுத்தார். அப்போதும் அவனது முகத்தில் எந்தவிதப் பதற்றமும் இல்லை; அதே புன்னகையே மாறாது குடிகொண்டிருந்தது.

அரசசட்டத்தரணி- (யூலியனிடம்) நீங்கள் தான் நோர்டெல் நிறுவனத்தை 4 நாட்கள் இயங்க விடாது முடக்கி வைத்திருந்தீர்களா?
யூலியன் - அப்படிச் செய்வதற்கு அந்த நிறுவனத்தின் தொடர்பாடல் இணையப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலவீனமானவையா?

அரச சட்டத்தரணி- அதைப் பற்றித் தெரியாது. ஆனால் மேற்குறித்த குற்றத்தை நோர்டெல் உங்கள் மீது சுமத்தியுள்ளது.

யூலியன் - என்ன குற்றம்?

அரச சட்டத்தரணி- சுமார் 4 இலட்சம் வாடிக்கையாளர்கள் உங்களது முறைகேடான இணையத் திசை திருப்பலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யூலியன் - மன்னிக்கவும். இத்தகவல் தவறானது.
அரச சட்டத்தரணி- இல்லை. இது அந்த நிறுவனம் ஆதாரபூர்வமாக-எழுத்து மூலமாக-இதனைத் தெரிவித்துள்ளது.

யூலியன் - கனம் நீதிபதியவர்களே! ஒரு தயவான வேண்டுகோள். சட்டத்தரணி தெரிவித்த தரவுகள் உண்மையெனில் என்னைக் கைது செய்வதற்குப் பதில் நோர்டெல் நிறுவனத்தின் நிர்வாகத்தைத்தான் கைது செய்யவேண்டும்.

அரச சட்டத்தரணி- என்ன உளறுகிறீர்கள்?

நீதிபதி- திரு.யூலியன் போல் அசாஞ்சே நீங்கள் இவ்வாறு கூறுவதற்குக் காரணம் என்ன?

யூலியன் - காரணம் இருக்கிறது.

இம்மாதம் நோர்டெல் நிறுவனம் தனக்கு வெறும் 2 இலட்சம் வாடிக்கையாளர்களே இருப்பதாகக் கூறி, அதற்குரிய வரியைமட்டுமே செலுத்தியுள்ளது. எனவே தவறான தகவலை அரசுக்கு வழங்கி, குறித்த நிறுவனம் வரி ஏய்ப்புச் செய்துள்ளது. அவ்வாறில்லாமல் 2 இலட்சம் தான் அதன் உண்மையான வாடிக்கையாளர் எண்ணிக்கை எனில் நீதிமன்றத்தை அந்நிறுவனம் ஏமாற்றியுள்ளது. அத்துடன் நான் ஹக்கிங் செய்தமைக்கு ஆதாரங்களை முன்வைத்தால் நான் எனது குற்றத்தை ஒப்புக் கொள்கிறேன். அவ்வாறில்லாவிட்டால் ஏலவே குறிப்பிட்ட குற்றங்களுக்காக குறித்த நிறுவனத்தினரே தண்டிக்கப்பட வேண்டும்,

(நோர்டெல் நிறுவன இயக்குனர் விசாரணைக் கூண்டில் ஏற்றப்படுகின்றார்) நீதிபதி- யூலியன் போல் அசாஞ்சே கூறுவது உண்மையா? உங்களின் உண்மையான வாடிக்கையாளர் எண்ணிக்கை எவ்வளவு?

நோர்டெல் நிறுவன இயக்குநர் - (தடுமாறியபடி) 4 இலட்சம் நீதிபதி- இந்த எண்ணிக்கை எவ்வளவு காலமாக நீடிக்கிறது?

நோர்டெல் நிறுவன இயக்குநர்-4 மாதங்கள் நீதிபதி- ஆனால் நீங்கள் வெறும் 2 இலட்சம் வாடிக்கையாளர்களைக் கணக்குக்காட்டி அவர்களுக்கான வரியைமட்டுமா செலுத்தியுள்ளீர்கள்?

நோர்டெல் நிறுவன இயக்குநர்- ஆம்

நீதிபதி- யூலியன் போல் அசாஞ்சே உங்கள் தொடர்பு வலையமைப்பைத் தடை செய்தமைக்கு என்ன ஆதாரம் உண்டு?

நோர்டெல் நிறுவன இயக்குநர்- இப்போதைக்கு ஒன்றுமில்லை. ஆனால் அவர் விட்டுச் சென்ற குறிப்பு ஒன்று இணையத்தில் இருந்தது. ஆனால் அதுவும் சில நிமிடங்களில் அழிந்து விடும் வகையில் செய்யப்பட்டிருந்ததால் அதனையும் சமர்ப்பிக்க முடியவில்லை. ஆனால் இதை யூலியன் தான் செய்தார் என்பதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்.

வேறு விசாரணைகள் இன்றி, தகுந்த ஆதாரங்கள் இல்லாததால் யூலியன் விடுவிக்கப்பட்டான். அவுஸ்திரேலியப் பொலிஸாரின் முகத்தில் கிலோக்கணக்கில் கரி பூசப்பட்டது. ஆனால் நோர்டெல் நிறுவனம் அரசை ஏமாற்றியமைக்காக பெருந்தொகைப் பணத்தை செலுத்த வேண்டியேற்பட்டது. ஏறக்குறைய அத்துடன் நோர்டெல்லின் ஆட்டமே அடங்கிப்போனது. நோர்டெல் தளத்தினுள் தன்னுடைய ஹக்கிங் கெட்டித்தனத்தால் உள்நுழைந்த மறுநொடியே அதன் சுத்துமாத்துக்களை யூலியன் அக்குவேறு ஆணிவேறாக அறிந்து வைத்ததாலேயே அவர்களை அவர்களது வாயாலேயே சிக்கவைக்க அவனால் முடிந்தது.

தன்மீதான ஆத்திரம் அவுஸ்திரேலியப் பொலிசுக்கு அதிகரித்துள்ளதால் தன் மீதான கண்காணிப்பு அதிகரிக்கும் என்று யூலியன் எண்ணினான். கவனமாக இருக்க வேண்டும் எனச் சில நடவடிக்கைகளை மேற்கொண்டான். எவ்வளவு தான் கவனமானவனாக இருந்தாலும் தனிப்பட்ட வாழ்க்கையில் மட்டும் யூலியனால் வெற்றி பெற முடியவில்லை. அவனும் மகாதவறொன்றை இழைத்தான். அத்தவறு இன்னமும் யூலியனை வாட்டியே வருகின்றது.

(திரைகள் இன்னும் திறக்கும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கம் 01இல் இருந்து 15 வரையிலான இலக்கங்களைத் தொடர்புபடுத்தி உருவத்தைக் கண்டுபிடியுங்கள்.



சிறுவர் மர்மத் தொடர் 08

– அம்புலி

அந்த அலறலைக் கேட்டு நந்திவர்மன் திடுக்கிட்டான். ஆனால் அப்போது மந்திரக் கிழவி பெரிதாகச் சிரித்தாள். "அந்த அலறல் ஒலி உன்னுடைய தளபதியின் மரண ஒலி தான்!" என்று எக்காளத்தொனியோடு கூறினாள். "உனக்கு இப்போது என்ன தான் வேண்டும்?" என்று ஓரளவு துணிச்சலை வரவழைத்துக் கொண்டு நந்திவர்மன் கேட்டான். "அப்படி வா வழிக்கு! உன்னிடம் எனக்கொரு தேவை இருக்கிறது அதைப் பெறுவதற்காகத் தான் நான் மாய ஒலியை எழுப்பி உன்னை இங்கே வரும்படி செய்தேன்" என்றாள் மந்திரக்கிழவி.

"ஓ! இதெல்லாம் உன் சூழ்ச்சிதானா? உன்னை என்ன செய்கிறேன் பார்!" என்று ஆத்திரத்தோடு வாளை உருவிப் போனான் நந்திவர்மன். ஆனால் அவனால் வாளை உருவ முடியவில்லை. உடலோடு ஒட்டியது போல உறையைவிட்டு வெளியே வாள் வரவில்லை.

"என்ன தயக்கம் நந்திவர்மா! சீக்கிரமாக என் தலையை அறுத்துவிடு! ஐயோ பாவம்! வாள் வெளியே வரவில்லையா?" வரவர மாயக் கிழவியின் ஏளனமும், சிரிப்பும் கூடிக்கொண்டே சென்றது. திடீரென்று ஏதோ நினைத்தவளாய், உன்னை நான் ஏன் வரவழைத்தேன் தெரியுமா?" என்றாள் கிழவி.

"அதை நீ சொன்னால் தானே தெரியும்?" என்று சினத்தோடு கூவினான் நந்திவர்மன். அவனைத் தன்னுடைய சூழ்ச்சியால் வரவழைத்த காரணத்தை மாயக் கிழவி விபரிக்கத் தொடங்கினாள். அதைக் கேட்கக் கேட்க நந்திவர்மனுக்கு முதுகுத்தண்டு சில்லிடத் தொடங்கியது.

[மந்திரக் கிழவி வருவாள்...]

கும்பகர்ணன் 23

ஊஞ்சல்

ஆல மரத்து ஊஞ்சலாம்
அமர்ந்து ஆடிப் பாடலாம்
காலை உயர நீட்டியே
கீழும் மேலும் ஆடலாம்.

விண்ணை நோக்கிப் போகலாம்
வடக்குத் தெற்குப் பார்க்கலாம்
பண் இசைத்துப் பாடலாம்
பகல் முழுதும் ஆடலாம்.

பழக்கமில்லாப் பிள்ளைகள்
பையப் பைய ஆடலாம்
பழக்கமான போதிலே.
பறந்து விண்ணில் ஆடலாம்.

பொன்மொழிகள்

* சந்தனக்கட்டை, மல்லிகை முதலியவற்றின் மணம் காற்றின் எதிர்த் திசையில் செல்வதில்லை, ஆனால், நல்லவர்களின் புகழ் மணமோ சூறைக் காற்றையும் எதிர்த்துக் செல்கிறது.
* தூய்மையான எண்ணத்துடன் ஒருவன் செயல்பட்டால், அவனை விட்டுவிலகாத நிழல் போல, மகிழ்ச்சி அவனைப் பின் தொடர்ந்து செல்கிறது.
* மரியாதையுணர்வு, அடக்கம், மனத்திருப்தி, நன்றி, நல்ல அறிவுரைகளைக் கேட்டல் இவையே சிறந்த அதிஸ்டத்தை தரும் குணங்களாகும்.
* நன்றாகக் கட்டப்பட்ட வீட்டில் மழை நீர் நுழைவதில்லை, அது போல் நல்ல உள்ளத்தில் ஆசை நுழைவதில்லை.

– புத்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பலமான அமெரிக்க ஒற்றாடல்

— தகனன்

அமெரிக்க உளவுத்துறையினர் உலகின் முன்னணி இணையதள நிறுவனங்களுக்குள் நுழைந்து உளவு பார்ப்பதாக அமெரிக்க நாளிதழான 'தவாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகையும் பிரிட்டிஷ் நாளிதழான 'தகார்டியன்' பத்திரிகையும் கடந்த மாதத்தின் முற்பகுதியில் செய்தி வெளியிட்டிருந்தன.

தனிநபர்களை இலக்கு வைத்து 'மைக்ரோசொவ்ட்', 'கூகுள்' மற்றும் 'பேஸ்புக்' உள்ளிட்ட 9 முன்னணி இணையதள நிறுவனங்களின் சேவையகத்தின் (சேர்வர்) ஊடாக இவ்வாறு உளவு பார்க்கப்படுவதாக அந்தப் பத்திரிகைகள் கூறியிருந்தன.

சில நபர்களின் நடமாட்டங்களைப் பின் தொடர்வதற்காக தனிப்பட்ட ஆட்களின் வீடியோ பதிவுகள், போட்டோக்கள், இ-மெயில்கள் போன்றவை திரட்டப்படுவதாக அந்தப் பத்திரிகைகள் சுட்டிக்காட்டியிருந்தன.

(பிரிஸ்ம்) என்பதே அமெரிக்க அரசாங்கத்தின் இந்த இரகசிய உளவுத் திட்டத்தின் பெயர் என்றும் 6 ஆண்டுகளாக இந்த உளவு வேலை நடந்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

முதலில் மறுப்பு – பின்னர் ஏற்பு

இதேவேளை, இந்தப் பத்திரிகைகள் வெளியிட்ட செய்திகள் தொடர்பில் அமெரிக்க உளவுத் துறைத் தலைவர் 'ஜேம்ஸ் கிளப்பர்' கண்டனம் வெளியிட்டிருந்தார். இந்த செய்திகளில் பல தவறுகள் காணப்படுவதாகவும், இப்படியான செய்திகள் பல்வேறு அச்சுறுத்தல்கள் தொடர்பில் உளவுத்துறை நிறுவனங்களின் பணிகளை பாதிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆனால் அடுத்த நாளே அமரிக்கஜனாதிபதி பராக்ஒபாமா இவ்விடயத்தை பகிரங்கமாக ஏற்றுக் கொண்டதோடு, தேசிய பாதுகாப்புக் கருதியே இவ் ஒற்றுக் கேட்டல் நடைபெறுவதாகவும் தெரிவித்திருந்தார். நாய் எங்கு அடிபட்டாலும் காலைத் தூக்குவது போல 'ஒபாமாவும்' தீவிரவாதத்தை எதிர்கொள்ளவே இந்த நடவடிக்கை என்று பழியை தீவிரவாதிகள் மேல் போட்டுவிட்டார்.

இவ்விடயம் ஒருபுறம் அமெரிக்காவுக்கு அரசிற்கு சிக்கலாகிக் கொண்டிருக்க,மறுபுறம் அமெரிக்க உளவுத்துறை வட்டாரங்கள் உஷாராகின. இந்த இரகசியத்தை பத்திரிகைகளுக்கு கசியவிட்டது யார்? என்ற குழப்பம் அனைவர் மத்தியிலும் இருந்தது. வெளிநாடு ஒன்றின் உளவுத்துறை ஒன்று தமக்கு கிடைத்த தகவலை கசியவிட்டு அதற்கு ஆதாரங்களையும் கொடுத்ததா? அல்லது, அமெரிக்க உளவுத்துறையைச் சார்ந்த உயரதிகாரி எவராவது விஷயத்தை கசியவிட்டாரா? என்று பல கோணங்களிலும் அமெரிக்க உளவுத்துறை விசாரணைகளை முடுக்கிவிட்டது.

ஓர் இளைஞன் போராளியாகிறான்

29வயதான 'எட்வர்ட் ஸ்நோடென்' என்ற இளைஞன். அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ இன் முன்னாள் கணினி நிபுணர். இந்த இளைஞன் மூலமாகவே அமெரிக்க உளவுத்துறை இரகசியங்கள் கசிந்துள்ளது.

2004 ஆம் ஆண்டுஈராக் போர் ஆரம்பமானசமயத்தில் நாட்டுப் பற்றுக் கொண்ட இந்த இளைஞன் தன்னை இராணுவத்தில் இணைத்துக் கொண்டான். பின்னர் 2006 இல் இவன் அமெரிக்க உளவுத்துறையில் இணைந்து கொண்டான். ஒபாமாவின் தீவிர ஆதரவாளனாக இருந்த இந்த இளைஞன் முதலில் அவர் அமெரிக்க அரசாங்கத்தை நம்பினான். ஆனால், அடுத்த பத்து ஆண்டுகள், அவனுடைய கற்பனைகளை சிதறடித்துவிட்டன.

அவர் இராணுவத்தில் சேர்ந்ததற்குக் காரணம் ஒருமனிதன் என்னும் முறையில் மற்ற மக்களை அடக்கு முறையில் இருந்து விடுவிக்க உதவ வேண்டும் என்ற உணர்வை பெற்றிருந்தேன். என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால் அவன் விரைவிலேயே ஏமாற்றம் அடைந்தான் ஏனெனில் அவர்களுக்கு பயிற்சி கொடுத்த பெரும்பாலானோர் அரேபியர்களை கொல்லுவதற்கு முக்கியத்துவம் கொடுத்தனரே தவிர எவருக்கும் உதவுவதற்கு அல்ல.

ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் கீழ் அமெரிக்கா,ஈராக்கில் அபுகிரைப் மற்றும் அமெரிக்ககைதி முகாமான குவான்டனாமோகுடாவில் கைதிகளை சித்தரவதை செய்வதை கண்ணுற்றான். ஈராக் கியநகரம் பல்லூஜா அழிக்கப்படுவதையும், ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் இன்னும் கணக்கற்ற போர்க் குற்றங்கள் நடத்தப்படுவதையும் அறிந்திருந்தான். இதனால் புஷ் அரசின் மீது அதிருப்தியுற்றிருந்த இவன் ஈராக் போருக்குக் கூறப்பட்ட எதிர்ப்பு மற்றும் 'புஷ்ஷின்' ஜனநாயக உரிமைகள் மீதான தாக்குதல்கள் பற்றியபாரக் ஒபாமாவின் தேர்தல் பிரச்சார உறுதிமொழிகளின் தாக்கத்திற்குள்ளாகி ஒபாமாவின் ஆதரவாளனானான்.

ஆனால் பதவியை பெறுவதற்கும் வெளிப்படையாக பொய் கூறுவதையும் விளைவு பற்றிக் கவலைப்படாமல் பகிரங்கமாக வாக்குறுதியை மீறுவதற்கும் ஜனாதிபதிகள் தயாராக உள்ளனர் என்ற உண்மையை இவன் காலம் கடந்தே உணர்ந்து கொண்டான்.

உளவுத் தகவல்களுடன் ஹொங் காங்கிற்கு...

சி.ஐ.ஏ இல் எட்வர்ட் ஸ்நோடென் பணிபுரிந்த போது கிடைத்த தகவல்கள் மூலமே,அவர்கள் லட்சக் கணக்கான மக்களின் தொலைபேசி உரையாடல்கள், இன்டர்நெட் தகவல்கள் உளவு பார்க்கிறார்கள் என்ற ரகசியத்தை தெரிந்து கொண்டார். அதற்கான ஆதாரங்களையும் திரட்டியிருக்கிறார்.

இவர் பணிபுரிந்தது அமெரிக்காவின் 'ஹவாய்' தீவில் உள்ள சி.ஐ.ஏ அலுவலகத்திலாகும். 'ஹவாயில்' வசதியாக வாழ்ந்திருக்கிறார். வருட சம்பளம், 2 லட்சம் அமெரிக்க டொலர்கள். காதலி ஒருவரும் உள்ளார். தகவல்கள் திரட்டி முடிந்ததும், திடீரென ஒருநாள் இவை அனைத்தையும் உதறித் தள்ளி விட்டு போறாக் கிளம்பிவிட்டான் எட்வர்ட் ஸ்நோடென்.

தனது மேலதிகாரியை சந்தித்த எட்வர்ட், தமக்கு உடல்நலம் பாதிப்பு அடைந்துள்ளதால், சில வாரங்கள் சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது என்று கூறி லீவு பெற்றிருக்கிறார். இதனால், யாருக்கும் சந்தேகம் எழவில்லை. ஈற்றில் அவர் ஹவாயில் இருந்து கிளம்பி ஹொங்காங் சென்று இறங்கினார். ஹொங்கோங் இல் இருந்தே அவர் தன்னிடமிருந்த ஆதாரங்களை ஊடகங்களுக்கு வழங்கியிருந்தார்.

தன்னை வெளிப்படுத்தியது ஏன்?

அமெரிக்கஉளவுத் துறையினர் தன்னை மோப்பம் பிடிக்க முன்னதாக வேதான்தகவல் கொடுத் தகார்டியன் பத்திரிகையை தொடர்பு கொண்டு, தனது அடையாளத்தை வெளிப்படுத்துமாறு எட்வர்ட் ஸ்நோடென் கேட்டுக் கொண்டார். இவர் ஏன் இவ்வாறு செய்தார் என்பது அனைவர் மத்தியிலும் ஆச்சரியமாகப் பார்க்கப்பட்டது. ஆனால் இவர் தானாக வேதன்னை வெளிப்படுத்தியதால் அமெரிக்கா இப்போது கடும் குழப்பத்தில் இருக்கிறது.

தகவல் எப்படி,யார் மூலம் கசிந்தது என்பதை அமெரிக்க உளவுத் துறைசி.ஐ.ஏ. ஓரளவுக்கு ஊகித்துவிட்டது என்பது, ஹொங்காங்கில் தங்கியிருந்த எட்வர்ட் ஸ்நோடென்ற்குத் தெரிந்துவிட்டது. அடுத்துசி.ஐ.ஏ. என்ன செய்யும் என்பதையும் அவர் தெரிந்து வைத்திருந்தார். சத்தமில்லாமல் ஆளை போட்டுத் தள்ளுவதே அது!

எனவேதான் தன்னை வெளிப்படுத்தும்படி குறித்த பத்திரிகையை கேட்டுக் கொண்டார். இவர் தான் தகவல் வழங்கியவர் என்று தெரிந்த பின், அவருக்கு ஏதாவது நடந்தால் அமெரிக்க உளவுத் துறை ஆளை போட்டுத்தள்ளிவிட்டது என்பது வெளி உலகத்துக்கு தெரிய வந்துவிடும். இது அமெரிக்காவிற்கு மேலும் சிக்கலை உண்டாக்கும். அதனால், அமெரிக்க உளவுத்துறை தம் மீது கை வைக்கத் துணியாது என்ற நினைப்பு காரணமாக வே தனது அடையாளத்தை வெளிப்படுத்தியதாக நம்பப்படுகின்றது.

ஆனாலும் ஸ்னோடென்னை அவ்வளவு எளிதில் அமெரிக்கா விடுவதாக இல்லை. அவரை பிடிக்க அமெரிக்கா கையாளும் தந்திரங்கள் என்னென்ன? அதிலிருந்து தப்பிக்க ஸ்னோடென் மேற்கொண்ட நகர்வுகள் எவை? அடுத்த வாரம் அவற்றை விரிவாகப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள் மீது பெற்றோர் அக்கறை இன்றி இருப்பது ஏன்?

பித்தன் பதில்கள்

க. சாந்தன், கந்தரோடை.

கே: பித்தூஸ்! யாழ்ப்பாணத்தில் ஏணை மரம் சறுக்கி விழுந்து 7 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளானே? குழந்தைகளின் மீதான அக்கறையை எங்கள் சமூகம் இழந்து வருவதைத் தானே இது போன்ற சம்பவங்கள் காட்டுகின்றன?

ப: சரியாச் சொன்னீங்கள். ஏதோ பெத்ததுக் காண்டி வளக்கிறம் எண்ட போக்கிலதான் இண்டைக்கு குழந்தைப்பிள்ளையளை நாங்கள் வளக்கத் தொடங்கியிருக்கிறம். அதோட அம்மாமாருக்கும் இப்ப சரியான வேலை பாருங்கோ. அவைக்கு சமையல் செய்யிறதை விட்டும், பிள்ளையளைப் பராமரிக்கிறதை விட்டும், ரீ.வி சீரியல் பாக்கவே நேரம் காணாமல் கிடக்கு. சீரியல் பாக்காட்டி உலகமே தலைகீழாயெல்லோ பிரண்டு போடும். அப்ப உலகத்தைக் காப்பாத்துறதுக்காண்டியாவது அவை சீரியலைப் பாக்கத்தானே வேணும். பிறகென்னெண்டு பிள்ளையளைப் பாக்க நேரம் இருக்கப் போகுது? அதோட எங்கட கூட்டுக் குடும்ப வாழ்க்கை உடைஞ்சு கொண்டு போறதும் இப்பிடியான பிள்ளையள் மீதான கவனிப்புக் குறைபாட்டுக்கு ஒரு காரணம்.

ப. சிவகௌரி, சுன்னாகம்.

கே: தில்லு முல்லு படம் பார்த்துவிட்டீரா பித்தரே? பார்த்தால் முந்திய தில்லு முல்லுவில் ரஜனியின் நடிப்பையும், இப்போதைய தில்லுமுல்லுவில் சிவாவின் நடிப்பையும் ஒப்பிடுக?

ப: படம் பாக்கிறதில பித்தரை அடிக்க ஆள் கிடையாது. வந்த முதல் நாளே பாத்திட்டனெல்லோ. ஹிந்தியில கோல்மால் எண்டு வந்த படத்தைத்தான் விசுவின்ர கதை வசனத்தில பாலச்சந்தர் ரஜனியை வைச்சு இயக்கியிருந்தார். ஒரு அடிதடி ஹீரோவா இருந்த ரஜனிக்கு பகிடியும் நல்லாவிடத் தெரியும் எண்டது இந்தப் படம் மூலமாக ஆக்களுக்கு தெரிஞ்சுது. எண்டாலும் தன்ர வழக்கமான ஸ்ரைலையும் ரஜனி இந்தப் படத்தில கைவிடேலை. ஆனா இப்ப வந்த தில்லு முல்லு படத்தில சிவா எல்லா நேரமும் முகத்தை ஒரே மாதிரி வைச்சிருக்கிறதும், ஒரே மாதிரியே எல்லா வசனத்தையும் பேசுறதும் முதல்ல சிரிப்பா இருந்தாலும் போகப்போக எரிச்சலைத் தான் கொண்டு வருகுது.

செ. உமாசுதன், பரந்தன்.

கே: வட இந்தியாவில் திடீரென ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கிய குஜராத் மக்களை அந்த மாநில முதலமைச்சர் நரேந்திரமோடி தன் அதிகாரிகள் சகிதம் சென்று மீட்டுவந்துள்ளார். அதே போன்று இலங்கையிலும் ஒரு அனர்த்தம் நிகழ்ந்தால் அரசியல்வாதிகள் இப்படி மக்களின் உயிரைத் தாமே நேரில் சென்று காப்பாற்றுவார்களா பித்தரே?

ப: நரேந்திரமோடி எலெக்சனில வெல்லுறதுக்காண்டித்தான் இப்பிடி சினிமாப்பட ஹீரோ போல அதிரடியாப் போய் சனங்களைக் காப்பாத்தினவர் எண்டும் ஒரு கதை இருக்கு. ஆனாலும் மனுசன் உயிரைப் பணயம் வைச்சு தன்ர மாநில மக்களுக்கா செய்த செயலைப் பாராட்டாமலும் இருக்க முடியாது. இனி நீங்கள் கேட்ட கேள்விக்கு வருவம். எங்கட அரசியல்வாதிகள் எல்லாம் நடந்துமுடிஞ்ச பிறகு, வெள்ளம் எல்லாம் வத்தின பிறகு ஏதாவது தொண்டு நிறுவனம் குடுத்த சாமான்களை தங்கட காசில வாங்கின மாதிரி தந்திட்டு, போட்டோவுக்கும் போஸ் குடுத்திட்டு போவினமே தவிர நீங்கள் கேட்ட மாதிரி வெள்ளத்துக்க இறங்கி சனத்தைக் காக்க வேணுமெண்டு அவைக்கென்ன விசரங்கம்? வேணுமெண்டா வெள்ளம் உள்ளுக்க வராத அறை ஒண்டுக்க இருந்தபடி மழைக்கு கண்டனம் தெரிவிச்சு நாலுநூறு பக்கத்துக்கு அறிக்கை வேணுமெண்டா விடுவினம். அதுவும் பேப்பரில வராட்டி அறிக்கை விடுறதையும் விட்டிடுவினம். இப்ப ஒருத்தர் மீனவர் பிரச்சினைக்கு இந்தியாவுக்குப் போகில போய் போராடுவன் எண்டு ஒவ்வொரு கச்சதீவு திருவிழாவிலையும் அறிக்கை விட்டிட்டு வாறாரே தவிர, இங்க வந்தவுடன அதை அப்பிடியே மறந்து போறார். ம்ம்! இதுதான் எங்கட அரசியல்வாதிகளின்ர கெட்டித்தனம்.

சொற்சிலம்பம் போட்டி இல: 576



மேலிருந்து கீழ்

1. காலவேளை
2. கூட்டல் அடையாளம்
3. இளவெருது
4. கருநிற சிறுதானியம்
5. மயக்கம் தரும் பானம்
7. இறைச்சி
9. தேவர்களோடு போராடியோர்
10. உடல்
11. தூர்த்தன்
13. அம்பை இதில் வைத்து எய்வர்
15. மதில்
16. பேரறிஞன்
18. கவர்ந்து கொள்

இடமிருந்து வலம்

1. நட்புறவுடைய தேசங்கள்
6. தினுசு
7. பெண்
8. ஓடம்
9. ஆண்பால் ஒருமை படர்க்கை விகுதி
10. ஷயரோகம்
11. பணம்
12. சித்திரம்
14. பேரிகை
17. அகம்பாவம்
18. புகார்
19. அருவருப்பான மிருகம்

அனுப்புபவர் பெயர்:..

விலாசம்:..

....

கையொப்பம்:..

சொற்சிலம்பம் போட்டி இல. 576

சொற்சிலம்பம் 576 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2013 ஆம் ஆண்டு ஜுலை 17 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் 2013 ஆம் ஆண்டு ஜுலை 24 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா 150உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

சுடர் ஒளி யாழ். அலுவலகம்.
361. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

சொற்சிலம்பம் போட்டி இல. 574 க்கான விடைகள்

மேலிருந்து கீழ்
1. சிம்மம், 2. ரவை, 3. மாடு, 4. வைகலி, 5. உறி, 7. பண்டசாலை, 8. விதவை, 9. புகு, 11. விபரிசல், 12. மற, 14. கருவி, 15. காது, 16. சதி, 17. வாதி

இடமிருந்து வலம்
1. சிகரம், 3. மாளிகை, 5. உடு, 6. மது, 7. பறி, 9. புண், 10. உதவி, 12. மகுடம், 13. வைரி, 14. கற, 15. காலை, 16. சவால், 18. விருது, 19. அதிதி

போட்டி இல. 573 இல் பரிசு பெற்றோர்

1ஆம் பரிசு — மோ. பிரகாந், சிவன் வீதி. சிவநகர் உருத்திரபுரம். கிளிநொச்சி.

2ஆம் பரிசு — அ. ஆன் நதுஷா, இல. 92. தபாற்கந்தோர் வீதி. திருகோணமலை.

3ஆம் பரிசு — செ. திலகவதி, பத்தியவத்தை. நெல்லியடி.

பாராட்டுப் பெறுவோர்

(1) ம. தில்லைநாதன், சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.
(2) வே. கார்த்திகேசு, விபுலானந்தர் வீதி, வாழைச்சேனை.
(3) டி. ஆர். ஆன் டிலுக்ஷி, இல. 11, சிவானந்தா வீதி, கொழும்பு-13.
(4) செ. ஜெறோம், இல. 33, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
(5) ச. அன்ரனி, புதுக்குளம், கனகராயன்குளம்.
(6) திருமதி கலாவதி குமாரசாமி, இல. 27/125, பரகும்பா பிளேஸ், வெள்ளவத்தை.
(7) வஸந்தா பாலேந்திரா, இல. 21, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.
(8) ஞா. துரை, இல. 85/4, கார்மல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
(9) ம. குருச்சந்திரன், இல. 39/24 , சிவன் வீதி, திருகோணமலை.
(10) க. தில்லையம்பலம், கதிர்காம கோவிலடி, வதிரி, கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுச்சி பெறுமா அவுஸ்திரேலியா?



தொடர்ச்சியாக மூன்று தடவை ஐ.சி.சி. உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்டு அசைக்க முடியாத உச்சத்தில் இருந்த அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணிக்கு, முன்னணி வீரர்களின் ஓய்வைத் தொடர்ந்து இறங்குமுகம் ஏற்பட்டிருக்கின்றது. உள்ளூர் மற்றும் வெளியூர் ஆடுகளங்களில் பிரகாசிக்கும் அவுஸ்திரேலிய அணி அண்மைக் காலங்களில் மோசமான ஆட்டப் பெறுபேறுகளை வெளிப்படுத்தி வருகின்றது.

இந்நிலையில், எதிர்வரும் யூலை 10ஆம் திகதி ஆஷஸ் தொடர் இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் நிலையில் அவுஸ்திரேலிய அணியில் அதிரடி மாற்றம் இடம்பெற்றிருக்கின்றது. இதுவரை காலமும் அவ்வணியின் பயிற்சியாளராக இருந்த மிக்கி ஆர்தர் திடீரென நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக டெரன் லீமன் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த மாற்றம் அவுஸ்திரேலிய அணியை மனதளவில் திடப்படுத்தி மீண்டும் வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்லுமா என்பதே தற்போது பலரது எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது.

வீரர்கள் புதிய பயிற்சியாளர் தலைமையில் பயிற்சி எடுக்கும் காலம் மிகவும் குறைவு. ஆஸஷ் தொடருக்கு நாட்கள் நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில் தாங்கள் இந்த மாற்றத்தைச் செய்ய விரும்பவில்லை. ஆனாலும், நல்ல செயற்திறனையும் முன்னேற்றத்தையும் காண விரும்புவதால் இந்த மாற்றம் தேவைப்பட்டது என்றும் இது ஒரு கடினமான முடிவு என்ற போதிலும் அவசியமான ஒன்று என்றும் கிரிக்கெட் அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

டெரன் லீமன் அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணிக்காக 1998 முதல் 2005 வரை விளையாடியுள்ளார். இடதுகை துடுப்பாட்ட வீரரான லீமன் சகலதுறை பெறுபேறுகளையும் வெளிப்படுத்தக் கூடியவர். இதுவரை, 2% டெஸ்ட் போட்டிகளிலும், 11% ஒரு நாள் போட்டிகளிலும் விளையாடியுள்ளார். இவ்வருடம் இடம்பெற்ற ஐ.பி.எல். போட்டிகளில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் பயிற்றுவிப்பாளராக டொம் மூடியுடன் இணைந்து செயற்பட்டிருந்தார்.

இதேவேளை, அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் பயிற்றுவிப்பாளர் மிக்கி ஆர்தரின் கீழ் அவுஸ்ரேலிய வீரர்கள் அதிக பயத்துடன் காணப்பட்டதாக அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் தலைவர் றிக்கி பொன்டிங் தெரிவித்துள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அத்தோடு, புதிய பயிற்றுவிப்பாளர் டெரன் லீமன் அணியின் வீரர்களுக்கு அதிக தன்னம்பிக்கையை அளிப்பார் எனவும் பொன்டிங் தெரிவித்துள்ளார். பொன்டிங் – லீமன் இருவரும் சமகாலத்தில் அவுஸ்திரேலிய அணிக்காக விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உச்சத்தில் இந்தியா!

எதிர்பார்த்ததை போலவே, இறுதி மினி உலகக் கிண்ணத்தை இந்தியா சுவீகரித்துச் சென்றிருக்கின்றது. மீண்டும் ஒருமுறை ராசியான அணித் தலைவர் டோனி என அனைவரும் புகழும் அளவிற்கு ஒரு வெற்றியை இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள் இணைந்து பெற்றுக் கொடுத்திருக்கின்றார்கள். துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத் தடுப்பு என அனைத்துத் துறைகளிலும் பிரகாசித்த துடிப்பான இளம் இந்திய வீரர்கள் அடுத்து வரும் 5–6 வருடங்களுக்கு இந்தியாவை முன்னணியில் வைத்திருப்பார்கள் என்பதுடன், தமது இருப்புகளை தக்க வைப்பதற்காகவும் போராடுவார்கள் என்பது திண்ணம்.

இந்தியாவின் வெற்றியைத் தொடர்ந்து இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர்களான கவாஸ்கர், கங்குலி, ட்ராவிட் உள்ளிட்ட பலர் டோனிக்கும், ஏனைய வீரர்களுக்கும் தங்கள் பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர். எதிர்வரும் 2015 இல் இடம்பெறவுள்ள உலகக் கிண்ணம் வரை இந்திய அணியின் தலைவராக டோனி நீடிக்கலாம் என்ற சான்றிதழை கங்குலி கொடுத்துள்ளார். தவிர, தொடரின் சிறந்த பந்து வீச்சாளருக்கான விருதை வென்ற ரவீந்திர ஜடேஜா மற்றும் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதை வென்ற ஷிகர் தவான் உள்ளிட்ட இளம் வீரர்களுக்கும் பாராட்டுக்கள் குவிகின்றன.

இம்முறை சம்பியன் கிண்ணத் தொடரில் எந்தவொரு தோல்வியையும் பெறாமல் கிண்ணம் வென்ற இந்திய அணி, ஐ.சி.சி. இன் ஒருநாள் அணிகளுக்கான புதிய தரப்படுத்தலில் 123 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றிருக்கின்றது. இறுதிப்போட்டியில் தோல்வியைத் தழுவிய இங்கிலாந்து அணி அவுஸ்திரேலிய அணியுடன் இணைந்து இரண்டாவது இடத்தைப் பகிர்ந்துள்ளன. இத்தரப்படுத்தலில் இலங்கையணி 108 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

சம்பியன்ஸ் கிண்ணத்தைத் தொடர்ந்து ஐ.சி.சி.யினால் ஒருநாள் கனவு அணி தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது. இதிலும் இந்திய வீரர்களின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கின்றது. இக்கனவு அணிக்கு தலைவராக டோனி செயற்படுவதுடன், தவான், கோஹ்லி, ஜடேஜா, புவனேஸ்வர் குமார் ஆகியோரும் உள்வாங்கப்பட்டிருக்கிறார்கள். இலங்கை அணி சார்பில் சங்கக்கார மட்டும் தெரிவாகியுள்ளதுடன், முன்னாள் ஜாம்பவான்கள் அவுஸ்திரேலியா சார்பில் எவரும் தெரிவு செய்யப்படவில்லை என்பது கவனிக்கத்தக்க விடயம்.

சம்பியன்ஸ் கிண்ணம் வென்ற இந்திய அணி வீரர்கள் அனைவருக்கும் தலா ரூ. 1 கோடி பரிசு தருவதாக இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) அறிவித்துள்ளது. அணியின் முகாமையாளர், நிர்வாகிகள் உள்ளிட்ட மற்றவர்களுக்கு தலா ரூ. 30 லட்சம் வழங்கப்பட உள்ளது.

நெய்மாரின் ஐரோப்பிய பிரவேசம்!

இந்த பருவகாலத்தில் உலகின் தலைசிறந்த பல வீரர்கள் தங்களது கழகங்களிலிருந்து வேறு கழகங்களுக்கு மாற இருக்கின்ற போதும், நெய்மாரின் கழக மாற்றம் அதி முக்கியத்துவம் பெறுகின்றமைக்கான காரணம் யாதெனில், உலக உதைபந்தாட்ட ஜாம்பவான்களால் எதிர்காலத்தில் உதைபந்தாட்ட வரலாற்றில் பல சாதனைகளை தனக்கென தக்க வைக்கப் போகும் வீரர் என்று புகழாரம் சூட்டப்பட்ட நெய்மாரின் ஐரோப்பிய பிரவேசம் தான்.

கடந்த 10 வருடங்களாக ஆடிக்கொண்டிருந்த சன்டொஸ் அணியிலிருந்து, இந்தப் பருவகால வீரர்கள் பரிவர்த்தனையின் போது ஸ்பெயினின் பார்சிலோனா அணிக்கு ஒப்பந்தமாகியிருக்கிறார் நெய்மார். தனது 17வது வயதில் சர்வதேச போட்டிகளை ஆட ஆரம்பித்ததிலிருந்து உலக உதைபந்தாட்ட அவதானிகளின் பார்வை முழுதும் நெய்மார் மீது திரும்ப தொடங்கியது. பிரேஸிலுக்காகவும், பிரேஸிலின் பிராந்திய கழகமான சன்டொஸ் அணிக்காகவும் நெய்மார் ஆடிக்கொண்டிருந்த காலப்பகுதிகளில், உதைபந்தாட்ட உலகின் ஜாம்பவான்களான பீலே, ரொமாரியோ, ரொனால்டினோ உட்பட பலராலும் உலகின் தலை சிறந்த வீரர் என்று பாராட்டுப் பெற்றவர் நெய்மார்.

லாவகமான ஆட்டம், வேகம், தொலைநோக்கு, கோல் போடும் சாமர்த்தியம், ஆட்டத்தில் அழகு போன்ற காரணங்களால், உதைபந்தாட்டத்தின் அனைத்துத் தரப்பாலும் பாராட்டுப் பெற்றவர். உலகின் சிறந்த வீரர் மரடோனாவா? மெஸ்ஸியா? என்று உதைபந்தாட்ட ஜாம்பவான்களான மரடோனா மற்றும் பீலே இடையில் ஒரு கருத்துப் போர் நடந்தது பலருக்கு நினைவிருக்கலாம். 21 வயதேயாகும் இந்த பிரேஸில் நட்சத்திரம் உலக அரங்கில் முன்னிலை பெற அவரது திறமையே காரணமாகும். அடுத்த வருடம் பிரேஸிலில் இடம்பெறப்போகும் உலகக் கிண்ண உதைப்பந்தாட்டத் தொடரில் முக்கிய புள்ளியாக இவர் திகழ்வார் என்பதில் ஐயமில்லை.

விளையாட்டு

தொகுப்பு : வரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்லப் போவது யார்?

“ இதுவரை மாகாண சபைகள் தொடர்பான எந்த வொரு சட்டத்தையும் நாடாளுமன்றில் நிறைவேற்ற வேண்டுமாயின் எல்லா மாகாண சபைகளினதும் அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்றுள்ள பிரிவையும் அரசாங்கம் மாற்றியமைக்க உள்ளது.

நீலன்

கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்த உள்நாட்டுப் போரினால் பல இன்னல்களுக்கும், உயிரிழப்புகளுக்கும், சொத்தழிவுகளுக்கும் ஆளாகிய தமிழ்மக்கள், போர் முடிவுற்று சமாதான நிலைமைகளைக் கூறப்பட்டு நான்கு ஆண்டுகள் கழிந்துவிட்ட போதிலும் போரினால் ஏற்பட்ட உள ரணங்கள் முழுமையாக ஆறாமலும் எதிர்கால வாழ்க்கைக்கான கேள்விக்குறிகளுடனும், விரக்தி நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்நிலையில் வடமாகாண சபைத் தேர்தல் நடக்கவுள்ளதான அறிவித்தல் வெளிவந்தது. அன்று தொட்டு இந்நாள் வரையில் பேரினவாத சக்திகளின் அடிமனங்களில் அழுக்கிக்கிடந்த தமிழர்களுக்கெதிரான இன விரோத வக்கிர உணர்வுகள் கடும் முனைப்புடன் வெளியே தலைகாட்டத் தொடங்கிவிட்டன.

மாகாண சபைகளை உருவாக்கிய 13 ஆவது திருத்தத்தை ஒரேயடியாகக் கொலை செய்துவிடாமல் நடைப்பிணமாக்கும் முயற்சியில் அரசாங்கமும், அதனுடன் இணைந்து பேரினவாத பௌத்த சக்திகளும் முழுமூச்சுடன் களத்தில் குதித்துள்ளன.

காணி, பொலிஸ் அதிகாரங்களை மட்டும் பறிப்பதற்கு முயன்றாலோ அரசாங்கம் இந்தியாவினதும், மேற்குலக நாடுகளினதும் எதிர்ப்புக்களைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும். இதேவேளை இந்த அதிகாரங்களுடன் வடக்கில் மாகாண சபைகளை நிறுவ இடமளிக்கப்படவும் கூடாது. எனவேதான் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக ஒழிப்பதற்குப் பதிலாக அதனைச் செயலற்றதாக்குகின்ற வகையில் திருத்தமொன்று அரசியலமைப்பில் மேற்கொள்ளப்படவுள்ளது.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்துவது குறித்து அறிவிக்கப்பட்டதும் தேசிய சுதந்திர முன்னணி, ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஒழிக்க வேண்டுமெனக் குரலெழுப்பின. அத்துடன் அவர்களுக்குத் தூபமிட்ட வகையில் வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் பறிக்கப்பட்டு விட வேண்டுமென்ற பாதுகாப்புச் செயலரின் கூற்றும் மற்றும் விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க போன்றவர்களின் ஆதரவும் அரசாங்கத்தை இப்புதிய வழியில் செயற்பட வைத்துள்ளது.

இப்போது மேற்கொள்ளப்படவுள்ள திருத்தம் இரண்டு முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாகவுள்ளது. முதலாவது, ஏதாவது மாகாண சபைகள் ஒன்றாக இணைந்து செயற்படும் தீர்மானத்தை எடுப்பதற்கு வசதியாக உள்ள ஷரத்தை நீக்கிவிடுவது. இரண்டாவது எல்லா மாகாண சபைகளினதும் ஆதரவைப் பெற்றே ஒரு சட்டமூலத்தை நிறைவேற்ற முடியும் என்பதைப் பெரும்பான்மை மாகாண சபைகள் என்று மாற்றுவது.

இவை இரண்டுமே வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அதிகாரங்களைப் பலவீனப்படுத்துவதையே அடிப்படையாகக் கொண்டவை என்பதில் எதுவித ஐயப்பாட்டிற்கும் இடமில்லை.

வடக்கில் மாகாண சபைத் தேர்தல் நடக்கப்போவதாக அறிவித்த பின்னர் அரசதரப்பில் உள்ளவர்களிடமிருந்து வெளிப்படும் சகல கருத்துக்களும், மாகாண சபை ஆட்சி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வசம் சென்றால் ஆபத்து என்பதை வெளிப்படுத்துவதாகவே அமைந்துள்ளன.

வடக்கில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆட்சியைப் பிடித்து காலப்போக்கில் கிழக்கிலும் அது போன்றதொரு நிலைமை உருவானால் இரண்டு மாகாண சபைகளும் தீர்மானத்தை நிறைவேற்றி ஒன்றிணைந்து விடுமோ என்பதில் அரசாங்கத்திற்கும் சிங்கள பேரினவாதிகளுக்கும் அச்சம் உள்ளது.

அதனால் தான், இந்த மாகாண ஒன்றிணைவைத் தடுக்கும் வகையில் புதிய திருத்தத்தைக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இது எதிர்காலத்தில் ஒருபோதும் வடக்கு கிழக்கு இணைவு என்பது சாத்தியமற்றது என்பதை அடிப்படையாகக் கொண்டதேயாகும். மற்றொரு விதமாகப் பார்ப்போமாகில் இது தமிழர்களின் பாரம்பரியத் தாயகமான வடக்கும் கிழக்கும் இணைவதைத் தடுப்பதற்கான அரசின் உச்சக்கட்ட மூலோபாயம் என்பது நன்கு புரியும்.

அடுத்து இதுவரை மாகாண சபைகள் தொடர்பான எந்த வொரு சட்டத்தையும் நாடாளுமன்றில் நிறைவேற்ற வேண்டுமாயின் எல்லா மாகாண சபைகளினதும் அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்றுள்ள பிரிவையும் அரசாங்கம் மாற்றியமைக்க உள்ளது. இதற்குப் பதிலாக பெரும்பாலான மாகாண சபைகளின் ஆதரவுடன் அத்தகைய சட்டமூலங்களை நாடாளுமன்றில் நிறைவேற்ற முடியும்.

இது சிறுபான்மையினரின் அதிகாரத்துக்குட்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குள்ள தனியுரிமை மற்றும் பாதுகாப்புத் தன்மை என்பவற்றை அடியோடு இல்லாது ஒழித்து விடும். இதனூடாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் சிங்களப் பெரும்பான்மையினரின் விருப்பங்களை நிறைவேற்றுகின்ற ஒன்றாக மாற்றம் பெற்று விடும்.

இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் காணி, பொலிஸ் அதிகாரங்கள் தேவை ஏற்படும் போது அரசாங்கம் பெரும்பான்மையான மாகாணசபைகள் மற்றும் நாடாளுமன்றில் உள்ள அதன் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டு இலகுவில் இல்லாமல் செய்துவிட முடியும்.

அத்துடன் நின்றுவிடாது மாகாண சபைகளின் ஒட்டுமொத்த அதிகாரங்களும் இதன் மூலம் சிங்களப் பெரும்பான்மையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். இது தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் அரசியல் அதிகாரத்தைச் சிங்களப் பெருந்தேசிய வாதத்திற்கு அடிமைப்படுத்தும் ஒரு திட்டமாகவே கருத வேண்டும்.

இந்தத் திருத்தங்களைத் தெரிவுக் குழுவில் வைத்துச் செய்வதே அரசாங்கத்தின் முன்னேற்பாடான எண்ணமாக இருந்தது. ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இறுக்கமான போக்கின் காரணமாக அவ்வெண்ணம் தோல்வியடைந்த நிலையில் எந்த அரசியலமைப்புத் திருத்தமாயினும் சரி இனிமேல் தெரிவுக்குழு மூலம் தான் எனக் கூறிவந்த அரசாங்கம் இப்போது தனது சுயரூபத்தை மெல்ல மெல்ல வெளிக்காட்ட ஆரம்பித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ தன்னை ஒரு நேர்மையான அரசியல் தலைவராகக் காட்டிக் கொண்டாலும் அடிக்கடி தமிழர்களுக்கு நல்லதையே செய்வேன் என்று கூறிக் கொண்டாலும் இனிமேல் அவரால் நினைப்பது போல எதையும் செய்ய முடியாது என்ற நிலை உருவாகிக் கொண்டு வருகின்றது.

போர் முடிவுக்கு வந்த கையோடு ஒரு நிலையான அரசியல் தீர்வை அவர் எடுப்பதற்கு முயற்சித்திருந்தால் அதற்கு மக்களாணை கிடைத்திருக்கும். ஆனால் இப்போது பௌத்த பேரினவாதமும், சிங்களப் பெருந்தேசியவாதமும் தமிழர்களுக்கு எதிரான போக்கினைத் தீவிரப்படுத்தியுள்ள நிலைமையில் இனிமேல் அவரால் செய்ய நினைத்தாலும் எதுவுமே செய்ய முடியாது.

மேலும் 13 ஆவது திருத்தச் சட்ட விவகாரத்தில் இந்தியா மற்றும் இலங்கையின் எதிர்க் கட்சிகளின் கடும் அழுத்தங்களுக்கு அரசு ஆளாகியுள்ள நிலையில் 13 ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாது ஒழிக்க வேண்டும் என்று தனித்தனியே குரல் கொடுத்து வந்த பௌத்த இனவாத அமைப்புக்கள் தற்போது இவ்விவகாரம் தொடர்பில் நாட்டில் ஏற்பட்டுள்ள சர்ச்சை நிலைமையைச் சாதகமாகக் கொண்டு அதை முற்றாக ஒழிக்க வேண்டுமென்று முழுமூச்சாக ஓரணியில் திரண்டுள்ளன.

அதற்கமைவாக அகில இலங்கை பௌத்தசம்மேளனம், தேசிய புத்திஜீவிகள் சபை, தேசிய பிக்குகள் சம்மேளனம், பொதுபலசேனா, சிஹல ராவய, தர்மவிஜே அமைப்பு, தேசியப்பற்றுள்ள தேசிய இயக்கம், மௌபிம அமைப்பு ஆகிய 8 பௌத்த அமைப்புக்கள் ஒன்றிணைந்த 'மாகாணசபை முறைமையை இல்லாதொழிப்பதற்கான ஒன்றிணைந்த தேசிய அமைப்பு' எனும் ஓர் கடும் போக்குடைய சிங்கள அமைப்பு உருவாகியுள்ளது.

அதே போன்று 13 ஆவது திருத்தத்தைப் பாதுகாப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி, நவசமசமாஜக் கட்சி, ஐக்கிய சோசலிஷக் கட்சி, ஐக்கிய தேசிய முன்னணி ஆகிய கட்சிகள் கூட்டிணைந்து 'அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவதற்கான இயக்கம்' என்ற ஒரு இயக்கமாக இயங்கி வருகின்றன. வெற்றி எந்த அணிக்கு என்பது இன்னும் சில நாட்களில் தெரிந்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

O/L மாணவர்களே! உங்கள் வெற்றிக்கான கையேடு

இதோ! வெளிவந்துவிட்டது

STEP 10

எதிர்பார்க்கை வினாத்தாள்கள் உள்ளடங்கலாக

தமிழ்
ஆங்கிலம்
கணிதம்
விஞ்ஞானம்
வரலாறு
வர்த்தகம்
சிங்களம்
சித்திரம்
மாதிரி வினாத்தாள்

உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்

தொடர்புகளுக்கு - 077 2674191, 011 5738855

வடமாகாணத் தொடர்புகளுக்கு - 071 6182182, 021 5677222

பெரிய்ய்ய்ய்ய வாய்க்காரன்!

அங்கோலாவைச் சேர்ந்த 'பிரான்சிஸ்கோ ரொமிங்கோ ஜோக்கியும்' உலகிலேயே மிகப்பெரிய வாய்க்குச் சொந்தக் காரன் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

சுமார் பதினேழு சென்ரிமீற்றர் நீளத்திற்கு ஒரு ரப்பரைப் போல இவரது வாய் நீண்டு சாதனை படைத்துள்ளது.

இதற்கு முன்னால் இந்த பெரிய வாய் போட்டியில் பங்கு கொண்டவர்களால் அதிக பட்சம் ஒரு கோப்பிக் கிண்ணத்தையோ அல்லது ஒரு பியர் போத்தலையோ (சிறியது) மட்டுமே உள்ளே வைக்க இயலுமாம். ஆனால் இவரோ இரண்டு கொக்கக் கோலா ரின்களை அனாயசமாக உள்ளே அடைகிறார்.

மலைபோல் துணிவு



பெல்ஜியத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இந்த இளைஞர் மலை ஏறுவதில் கில்லாடி. ஒரு முறை அவ்வாறு மலை ஏறும் போது ஏற்பட்ட திடீர் விபத்தில் 500 அடி உயரத்தில் இருந்து இந்த இளைஞர் கீழே விழ வேண்டி ஏற்பட்டது. அதன் போது அவரது இரு கால்களும் முறிந்து போயின. அந்தக் கால்களைப் பொருத்துவதற்கு எடுக்கப்பட்ட எல்லா முயற்சிகளும் தோற்றுப் போயின. கால்களை இழந்த பின்னரும் துணிவை இழக்கவில்லை இவர். செயற்கைக் கால்களைப் பொருத்திக் கொண்டு மீண்டும் மலை ஏறக் கிளம்பி விட்டார் இவர். மலையளவு நம்பிக்கைக்கு முன்னர் இமய மலையையர் சுமப்பது கூட தூசுதானே.

பரீட்சையில் வெற்றி பெறுவோரின் ஒரே தெரிவு

புலமை 38

தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சிங்களம், தரம் 4, 5 மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள், மேலும் பல தகவல்களுடன்

எதிர்பார்க்கை வினாத்தாள்கள் உள்ளடங்கலாக

உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்

தொடர்புகளுக்கு - 071 6850005, 011 5738855

வடமாகாணத் தொடர்புகளுக்கு - 071 6182182, 021 5677222

இப்பத்திரிகை கொழும்பு - 17, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ் ... [illegible] ...ஸ் ஸ்தாபனத்தினால் 2013 ஜூலை 03 ஆம் திகதி வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org